கலைக்கதிர்

90

மாத வெளியீடு

தை



அணா 8

உங்களுடைய இன்ஷ்யூரன்ஸ் தேவைகளுக்கு

எங்களைக் கலந்து கொள்ளவும்.

PIONEER FIRE & GENERAL INSURANCE COMPANY LIMITED

பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.,

தலைமை ஆபீஸ் : P. Box 170, கோயமுத்தூர்.

—o—

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார்

விபத்து முதலிய சகலவிதமான இன்ஷ்யூரன்ஸ்களும் செய்யப்படும்

திறமை வாய்ந்த ஏஜண்டுகளும் ஆர்கனைசர்களும்,

ஒவ்வொரு நகரிலும் தேவை

விபரங்களுக்கு :

தலைமை ஆபீசுக்கு எழுதவும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
211705
சென்னை-600 008

1313

கோவையில்
தங்க
நகைகளுக்கு
நம்பகமான
இடம்.
KR
கே. ஆர். & சன்ஸ்
போன்
226
பெரியகடைவீதி
தந்தி
புல்லியன்
கோயமுத்தூர்

ஓர் நற்செய்தி!

ஜெமினியின் அற்புத சித்திரம்.

'சக்ரதாரி' (தமிழ்)

7-வது வாரம்.

கோயமுத்தூர்

'ஷண்முகா தியேட்டரில்'

இப்பொழுது நடைபெறுகிறது.

ஒவ்வொருவரும் குடும்பத்துடன் பார்க்க வேண்டிய பக்திரசப் படம்

13-வது வாரம்

'மோஹினி'

இப்பொழுது
கோவை தியேட்டர் ராயலில்
நடைபெறுகிறது.

S. வெங்கட்ராம செட்டியார்
புரொப்ரைட்டர்.
கந்தன் & கம்பெனி
பிலிம் புரொட்யூசர்ஸ் &
டிஸ்டிரிபியூட்டர்ஸ்,
Lessee:
**Theatre Royal &
Shanmuga Theatre**
COIMBATORE.

Grams: 'RENGSONS' Post Box No. 197

R. Ramalingaier & Bros.,

DIRECT IMPORTERS OF PAPER & BOARDS.

R. ராமலிங்கய்யர் & பிரதர்ஸ்,

பேப்பர் வியாபாரம்,

Distributors:

WEST COAST & COIMBATORE
RAMAKRISHNA INDUSTRIALS, LIMITED, PEELAMEDU,
For THE MYSORE PAPER MILLS, LIMITED,

22/55, Raja Street, ***COIMBATORE.***

ALL VARIETIES OF PAPERS, CARD BOARDS
AND STRAW BOARDS AVAILABLE.

A TRIAL SOLICITED.

கோயமுத்தூர்

பிரிமியர் கார்பொரேஷன் லிமிடெட்,

8/2 மால் மில் ரோடு, **P. B. 210**, கோயமுத்தூர்.



எங்களிடம்
இங்கிலீஷ் பம்பு
செட்டுகள், DPF பம்பு செட்டு
கள், GEC, BTH, AEI, BBC,
புரூக், கிராம்டன் மோட்
டார்கள் MEM ஸ்டாடர்
சுட்சுகள் ரெடி
டெலிவரிக்கு குறைந்த விலைகளில் கிடைக்கும்.
$\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$ & 1 HP வீட்டு பம்பு செட்டுகள், எலக்ட்ரிக்
சாமான்களும் சப்ளை செய்கிரோம்.

தேவைக்கு விஜயம் செய்யுங்கள் அல்லது லெட்டர் எழுதுங்கள்.

ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் ஸ்பின்னிங்

அண்டு

வீவிங் மில்ஸ் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1922-ல்)

கோயமுத்தூர்.

டெலிபோன் நெ. 17 தந்தி: "ரங்கவிலாஸ்"

ரிஜிஸ்டர் ஆபீஸ்: பூளைமேடு, கோயமுத்தூர்.

★

ஆதரைஸ் ஆன மூலதனம்	ரூ.	10,00,000
வசூல் செய்யப்பட்ட மூலதனம்	ரூ.	7,51,250

★

டைரக்டர்கள்:

ஸ்ரீ. எஸ். பீமைய செட்டியார்.
,, பி. எஸ். ஜி. வெங்கிடசாமி நாயுடு.
,, கே. கிருஷ்ணசாமி நாயுடு.
,, டி. ஆர். நாராயணசாமி நாயுடு.
,, கே. ஏ. ஷண்முக முதலியார்.
,, பி. எஸ். ஜி. கெங்கா நாயுடு.
,, ஜி. வி. ராமசாமி நாயுடு.

ஸ்ரீ. ஜி. ஆர். கோவிந்தராஜன்.
,, ஜி. ராமசாமி.
,, ஜி. வி. முத்துசாமி B. Sc.,
,, ஜி. என். வெங்கிடபதி.
,, ஜி. ஆர். வெங்கடேசன்.
,, ஆர். துரைசாமி.

வேலை செய்யும் மொத்த கதிர்கள் 30,000.

2-ம் நெம்பர் முதல் 100-ம் நெம்பர் வரை ஜவுளி நூல் தினுசுகள், பனியன் வகைராக்களுக்கு உபயோகப்படும் கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

★

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு & சன்ஸ்.

பூளைமேடு —::— கோயமுத்தூர்.

இந்திய மூலதனம், இந்திய கைத்தொழிலாகிய இந்த சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்.

தந்தி: "சுப்ரமணியா"

டெலிபோன் { ஆபீஸ் 176
பங்களா 146

ஸ்ரீ பாலசுப்பிரமணிய மில்ஸ் லிமிடெட்,

சிங்காநல்லூர், கோயமுத்தூர்.

(ஸ்தாபிதம் 1934)

- பிரக்யாதி பெற்ற மில்களில் உத்தமமானது இதுவும் ஒன்று
- இந்த மில்லில் குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே நிர்வாகஸ்தர்களது நோக்கம் - -
- இந்த மில்லில் கைத்தறிகளுக்கும் பவர் தறிகளுக்கும் உகந்த 30-நெ. முதல் 60-நெ. வரை ஒற்றை முறுக்கு நூல் தயாரிக்கப்பட்டு வருகின்றன - -

12,096 கதிர்கள் தொழில் செய்கின்றன.

தேசிய மூலதனம்
தேசிய தொழிலாளர்
தேசிய மேனேஜ்மெண்டு

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற

தேசீய தொழில் ஸ்தாபனமாகும்.

ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரையிலும் பங்குதாரர்கட்கு நல்ல டிவிடெண்டு தரப்பட்டு வந்துள்ளது.

Sri Balasubramania Mills Limited,

Singanallur, Coimbatore.

Managing Agents & Secretaries:

K. Krishnaswamy Naidu & Brother.

K. ராமச்சந்திரன்
பித்தளைப்
பாத்திரக்கடை
பெரியகடை வீதி
கோவை

பள்ளிக்கூட ஹாஸ்டல்கள்
மில் காண்டின்கள்
ஆஸ்பத்திரிகள்
இன்னும் இதர
ஸ்தல ஸ்தாபனங்களுக்கும்
சப்ளை செய்பவர்கள்.

கலங்கல்
K. N. திருமலைசாமி
ஆச்சாரி & பிரதர்ஸ்,
ஷராப்பு வியாபாரம்,
பெரியகடை வீதி,
கோயமுத்தூர்.

குறித்த காலத்தில் வைரம், தங்க
நகைகள் ஆர்டர்படி மிகவும்
நேர்த்தியான வேலைப்
பாடுடன் செய்து
கொடுக்கப்படும்

ஒரு முறை விஜயம்
செய்யுங்கள்.

A. P. Venkatesalu Naidu,
Mill Stores Supplier,
Manufacturers Representatives and
Direct Importer,
PAPPANAICKENPALAYAM, COIMBATORE.

★

Dealing in Bobbins, Machinery
Spare Parts,
Roller Skins, and in all Textiles,
Spinning & Weaving Accessories at
Competitive Rates.

கலைக்கதிர்

ஆசிரியர்: ஜி. ஆர். தாமோதரன்,
[B. Sc., Elec., B. Sc. Mech. (Durham), A. M. I. E. E. (London.)]

மலர் — க. சர்வதாரி : தை இதழ் — உ.

அட்டைப் படம்.

இன்று தைப் பொங்கல்—தமிழர் திருநாள். கழனியில் விளைந்த கதிர் களஞ்சியத்துக்கு வந்து களிப்பூட்டும் திருநாள். அறிஞர் அறிவிலும் உணர்விலும் விளைந்த கதிர் இதோ தங்கள் கரத்தில் பெருமிதமாக வந்து அமர்கிறது. தங்களுடைய அறிவுக் களஞ்சியத்துக்கு எங்கள் காணிக்கை இது. கழனியில் விளையும் கதிரை அட்டையிலே தாங்கி, அறிஞரின் அறிவுச் சுடர் பரப்பும் கலைக் கதிர் தங்களுக்குக் களிப்பூட்டுகிறது.

★

'கலைக் கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை கதை முதலியவற்றின் கருத்துக்கள் அவற்றை எழுதிய நேயர்களுக்கே உரியன.

பொருளடக்கம்

கலைக்கதிர் — கவிமணி	1
நாட்டுத் தமிழ் — திரு. ரா. பி. சேதுப்பிள்ளை	2
கதைப் பாட்டு — திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை	4
விஞ்ஞானமும் .... — திரு. ஜி. ஆர். தாமோதரன்	7
திருவள்ளுவர் காலம் — திரு. அ. இராமசாமிக் கவுண்டர்	12
பாசிலும் பரிணமமும் — திரு. சி. வேலாயுதம்	17
தமிழ்க் கவிதையின் எதிர்காலம் — திரு. ஆ. முத்துசிவன்	23
உள்ளம் பலவகை — டாக்டர். மு. வரதராசன்	30
உள்ளத்தின் உண்மை — திரு. தா. ஏ. சண்முகம்	33
தேனீக்களின் மொழி — திரு. பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி நாயுடு	35
நாகரிகத்தின் அளவுகோல் — நாமக்கல் கவிஞர்	40
தமிழன் கண்ட செல்வம் — திரு. அ. ச. ஞானசம்பந்தம்	45
எச்சில் இலை — திரு. ரா. கி. ரங்கராஜன்	49
மனிதனும் சூழ்நிலையும் — திரு. தா. ஏ. சண்முகம்	55
தைப்பொங்கல் தமிழர் பொங்கல் — பண்டிதர். திரு. அ. கி. நாயுடு	61

(இன்னும் பல.)

"கலைக்கதிர்"

கவிமணி — தேசிக விநாயகம் பிள்ளை

ஆதி பகவன் அறவாழி அந்தணன்
யாதும் உவமையிலான் இன்னருளால்—கோதின்றிப்
பல்லாண்டு வாழ்கவே பாரில் 'கலைக்கதிர்' நீ
எல்லோரும் போற்ற இனிது

ஆவித் துணையாய் அகிலமெலாம் காத்தருளும்
தேவி மீனாட்சி திருவருளால்—மேவுபுகழ்ச்
செந்தமிழ் நாடு திருந்தக் 'கலைக்கதிர்' நீ
வந்துநிதம் வாழ்க வளர்ந்து

சிந்தைக் கினிய கட்டுரைகள்
    தேனார் கவிகள் கதைகளெலாம்
சந்த முறவே தாங்கிநிதம்
    தமிழர் உள்ளம் மகிழ்வெய்த
வந்து நிலவும் 'கலைக்கதிர்' நீ
    மயில்மீ தேறி விளையாடும்
செந்தில் முருகன் திருவருளால்
    சிறந்து வாழ்க வாழ்கவே

கதிர்

இந்தக் கட்டுரை தமிழ்ச் சொற்களில் சிலவற்றைப் பற்றிய ஆராய்ச்சியாகும். ஆராய்பவர் 'சொல்லின் செல்வர்;' ஆராய்ச்சித் துறையின் தலைமைப் பேராசிரியர்.

நாட்டுத் தமிழ்

தமிழகத்திலே பல நாடுகள் உண்டு; பல குலங்கள் உண்டு. ஒரு நாட்டுத் தமிழுக்கும் இன்னொரு நாட்டுத் தமிழுக்கும் வேற்றுமையே இல்லை என்று கூறமுடியாது. ஒரு குலத்தார் பேசுந்தமிழ் மற்றொரு குலத்தார் பேசுந்தமிழை எல்லா வகையிலும் ஒத்திருக்கும் என்று சொல்ல முடியாது.

பந்தல் என்ற சொல்லின் ஆட்சியைப் பார்ப்போம். அது, எட்டுத்தமிழில் பெரும்பாலும் பந்தர் என வழங்கும். திருமணத்திற்குப் பந்தல் போடும் வழக்கம் நாட்டில் சாலப் பழமை வாய்ந்தது. காவிரிப்பூம் பட்டினத்திலே செல்வக்குடியிற் பிறந்த கண்ணகிக்கும் கோவலனுக்கும் முத்துப் பந்தரிலே திருமணம் நிகழ்ந்ததென்று இளங்கோவடிகள் கூறுகின்றார். "மாலை தாழ் சென்னி வயிரமணித் தூணத்து நீல விதானத்து நித்திலப் பூம் பந்தர்" என்று அப் பந்தலைப் பாடிற்று சிலப்பதிகாரம். கோடையிலே வழி நடந்து செல்வார்க்கு நீரும் நிழலும் தரும் பந்தலைத் தண்ணீர்ப்பந்தல் என்பர்.

இத்தகைய மேன்மையான சொல் தன வணிகர் நாடு என்னும் செட்டி நாட்டிலே அமங்கல மொழியாகக் கருதப்படுகின்றது. பந்தல் என்பது அந் நாட்டிலே மணப் பந்தலைக் குறிப்பதில்லை; பிணப் பந்தலையே குறிக்கும். இழவீட்டில் (இழவு-வீடு) போடுவது பந்தல்; கல்யாண வீட்டில் போடுவது காவணம் அல்லது கொட்டகை. இலக்கியத்தில் ஆளப்படுகின்ற காவணம் என்ற அருஞ்சொல், செட்டி நாட்டிலே பழகு தமிழாய்ப் பயில்கின்றது.

இனி, தொண்டு என்ற தொன்மையான சொல்லைக்காண்போம். தொண்டு என்பது சேவை. நாட்டுக்குச் செய்யும் சேவை தேசத் தொண்டு எனப்படும். இறைவனுக்குச் செய்யும் சேவை திருத்தொண்டு எனப்படும். 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே' என்னும் வாசகம் பண்டைக் காலத்தே தமிழ் நாட்டில் எழுந்தது. இத்தகைய சொல் கொங்கு நாட்டிலே இப்போது இழிந்த பொருளில் வழங்குகின்றது. ஒழுக்கம் கெட்டவரைக் குறிக்கின்றது அச்சொல்.

இன்னும், தமிழகத்தில் ஒரு நாட்டில் வழங்கும் சில சொற்கள் மற்றைய நாடுகளில் வழங்கக் காணோம். பாண்டி நாட்டிலே பித்தனைக் கோட்டி என்பர். பித்தனைப் பைத்தியக்காரன் என்பது போல, கோட்டியைக் கோட்டிக்காரன் என்றும் அந்நாட்டிலே கூறுவதுண்டு. இச்சொல் ஏனைய நாடுகளில் வழங்குவதாகத் தெரியவில்லை. கோட்டி என்ற சொல்லின் பொருள் அறியத் தக்கதாகும். கோட்டம் என்பது வளைவு.

திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L.

''சோற் கோட்டம் இல்லது செப்பம்,
ஒருதலையா
உட்கோட்ட மின்மை பெறின்''

என்ற திருக்குறள் கோட்டத்தின் பொருளை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. கோட்டமுடைய மாந்தரைக் கோட்டி என்பது பொருத்தமுடையது தானே!

'பையச் சென்றால் வையந்தாங்கும்' என்பது தமிழ் நாட்டிலே ஒரு பழமொழி. பைய என்றால் மெல்ல என்பது பொருள். 'பையப் போ' என்ற சொல் பாண்டி நாட்டிலே பெருவழக்குடையது. தேவாரத்தில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. சிவனடியார் திருமடத்தில் தீயோர் வைத்த தீயை அரசனிடம் செலுத்தத் திருவுளங்கொண்ட திருஞான சம்பந்தர் ''பையவே சென்று பாண்டியற்கு ஆகவே'' எனப் பணித்ததாகத் தேவாரம் கூறும். இத்தகைய சிறந்த ஆட்சியுடைய சொல் இப்போது சென்னை முதலிய இடங்களில் வழங்குவதில்லை.

தென் பாண்டி நாட்டின் தலைநகராகிய திருநெல்வேலியில் பல நல்ல தமிழ்ப்பதங்கள் ஒளி மழுங்கிக் கிடக்கின்றன. கூலக்கடைத்தெரு என்பது ஒரு வீதியின் பெயர். கூலக்கடை என்ற சொல் இப்போது வழக்காற்றில் இல்லை. பலசரக்குக் கடையை மளிகைக் கடை என்பது போல, முன்னாளில் பல தானியக் கடையைக் கூலக்கடை என்ற சொல்லாற் குறித்தார்கள். பழங்காலத்தில் அது எல்லோரும் அறிந்த சொல். காவிரிப்பூம் பட்டினத்தில் ''கூலம் குவித்த கூல வீதி'' இருந்ததென்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. கூல வீதி என்பதற்குக் கூலக் கடைத் தெரு என்றேபொருளுரைத்தார் அடியார்க்கு நல்லார். இப்பழம் பெயரை நெல்லைமாநகரம் இன்றளவு பாதுகாத்து வைத்திருப்பது போற்றுதற்குரிய தாகும்.

அந்நகரிலுள்ள மற்றொரு தெரு காவல்புரைத்தெரு என்று பெயர் பெற்றுள்ளது. அப்பெயரின் வரலாற்றை ஆராய்ந்தால் காவல்புரையொன்று அங்கிருந்ததென்பது விளங்கும். வாங்கிய கடனைக் கொடாதவரையும், வரிப்பணம் கட்டாதவர்களையும் அடைத்து வைக்கும் இடத்திற்குக் 'காவல் புரை' என்பது பெயர். மலையாளத்தில் சாப்பாட்டுச்சாலை ஊட்டுப்புரை என்று பெயர் பெற்றாற்போல, பாண்டி நாட்டில் சிறைச்சாலை காவல் புரை என்று பெயர் பெற்றது. 'சிவில் ஜெயில்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ற தமிழ்ச்சொல் காவல்புரை என்றறிந்து இன்புறுகின்றோம்.

அங்காடி என்பது முன்னொருகாலத்தில் தமிழ்நாடெங்கும் வழங்கிய சொல். இக்காலத்தில் பசார் என்று சொல்லப்படும் இடமே முற்காலத்தில் அங்காடி எனப்பட்டது. பெரிய நகரங்களில் அந்தியும் பகலும் அங்காடி நடைபெற்றது. அந்தியில் நடைபெற்ற அங்காடியை அல்லங்காடி என்றும், பகலில் நடைபெற்ற அங்காடியை நாளங்காடி என்றும் அழைத்தனர். பட்டினத்தடிகள் அங்காடியை எடுத்தாள்கின்றார். ''அங்காடி நாய் போல் அலைந்து திரிந்தேனே'' என்பது அவர் பாட்டு. கன்னடத்திலும் தெலுங்கிலும் இன்றும் அங்கடி என்ற சொல் வழங்குகின்றது. மலையாளத்திலும் அங்ஙடி உண்டு.—* தமிழ்மொழியில் அங்காடியை மீண்டும் ஆட்சியில் அமைத்தால் எத்துணை அழகாக இருக்கும்? செந்தமிழில் ஆர்வமுடைய செட்டியார் ஒருவர் தமது காசுக்கடைக்கு 'அணிகல அங்காடி' என்று பெயரிட்டுள்ளார். சென்னையிலுள்ள மூர் மார்க்கட்டை, மூரங்காடி என்று வழங்கும் நாள் எந்நாளோ?

* தஞ்சை மாவட்டத்தில் அங்காடிக்காரி என்ற சொல் வழக்கில் உள்ளது. தெருவிலே பொருள் விற்றுச் செல்வோரை அது குறிக்கிறது. — ஆசிரியர்.

கதைப் பாட்டு ★

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை B. A., B. L.

கதையைப் பாட்டு வடிவில் கூறுவதற்குக் காரணம் என்ன? — சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராக இருந்த அறிஞர் இதை ஆராய்கிறார். கதைப் பாட்டுக்களின் வகைகளையும் குறிப்பிட்டு விளக்குகிறார்.

★

உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் கதைகள் இருக்கின்றன. கதைகளுக்குரிய வசிகர சக்தி எங்கும் எல்லாக் காலத்திலும் எல்லாப் பருவத்திலும் மிகுதியாகவே உள்ளது. குழந்தைப் பருவம்முதல் முதுமைப் பருவம் வரை மக்களைக் கதைகள் இன்புறுத்தி வருகின்றன. இக் கதைகள் வசனத்தில் எழுதப்பட்டனவும் மிகப்பல. அவ்வாறே செய்யுட்களில் இயற்றப் பெற்றனவும் மிகப் பலவேயாகும். சாதாரணமாகவுள்ள வசனத்தில் கதைகள் அமைந்தால் போதாதா? பாடல்களில் அவைகளை இயற்றுவதற்குக் காரணம் என்ன?

சொல்லப்படும் பொருளையும் சொல்லும் முறையையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாது. முறையிலே சிறிதேனும் வேறுபாடு காணப்படுமாயின், அதற்குத் தக்கபடி பொருளிலும் வேறுபாடிருத்தல் உறுதி. உதாரணமாக, போ, போகுக, போகுதி, போவாயாக, நீ பிரிந்து போ, நீ விட்டுப் போ என்பனவற்றைக் காணலாம். இவை ஒவ்வொன்றிலும் சிறிது சிறிது பொருள் வேறுபாடிருத்தல் ஊன்றிக் கவனிப்பவர்களுக்குப் புலனாகும். கதை அழகாக அமையவேண்டும் என்று பலரும் விரும்புவர். அழகான முறையில் சொன்னால் தான் கதைப் பொருளும் அழகான முறையில் அமையும். பொதுப்பட அழகாகவுள்ள கதையைச் சொல்லும் முறை செம்மையாக இல்லாததால் அழகற்றதாகச் செய்யவும் கூடும். இராமாயணம் அழகான கதைப் பொருளைக் கொண்டது. கம்பன் கையாண்ட முறை மிகச் செம்மையாக இருந்ததால் கதையும் அழகு பெற்று விளங்குகிறது. இக் கதை அத்யாத்ம ராமாயணத்திலும் சொல்லப் படுகிறது. ஆனால், அதில் கையாண்ட முறை செம்மையாக இல்லாதபடியினால் கதையும் அழகு பெறவில்லை. இங்ஙனமே அழகுச் சிறப்பில்லாத கதையைக்கூட, அதனைச் சொல்லும் முறையின் செம்மையினால் அழகுடைய கதையாகவும் அமைத்தல் கூடும். அகலிகையின் வரலாற்றை அழகுடையதென்று பலரும் கருதமாட்டார்கள். ஆனால், அதனைக் கம்பன், தான் சொல்லும் முறையினால் அழகுபடுத்தி விடுகிறான். ஆகவே, கதை அழகு பெற வேண்டுமாயின், அழகினையே சிறப்பாகவுடைய பாடல்களில் அதனை அமைத்தல் அவசியமாகும்.

வசனத்தில் இவ் அழகு அமைய இடமில்லையா? ஓரளவு இடமுண்டு என்பதனை நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆனால், வசனத்திற் காட்டிலும் செய்யுளில்தான் இவ் அழகு சிறந்து விளங்க இடமுண்டு. இதற்குக் காரணம் என்னவென்று கேட்கலாம். கவிஞன் சொற்களைச் சுவைத்துத் தேர்ந்

தெடுத்து அமைக்கும் ஒரு கலைஞன். வசனம் எழுதுபவனிடத்து இவ் இயல்பைக் காணுதல் அரிது. கவிஞன் மிகவும் கவனித்து எழுதக் கடமைப் பட்டவன். அவ்வாறு அவன் செய்யாமல் போனால், அவனது செய்யுட்களை ஒருவரும் கற்கமாட்டார்கள். வசனம் பல வகையாலும் எழுதப்படுகின்றது. பல வசன நூல்கள் திருத்தமற்ற நடையிலும்கூட அமைந்திருக்கின்றன. அவற்றையும் ஒருவாறு வாசித்துத் தள்ளி விடுகிறோம். கவிஞன் சொற் சுருக்கம் பேணுகின்றான். அதனால், சொல்லுவனவற்றை மிகத் திறம்பட அமைக்க முடிகிறது. எல்லாவற்றிற்கும் மேலாகச் செய்யுட்கள் நமது கவனத்தைக் கவர்கின்றன; நமது உணர்ச்சியாற்றலைப் பெருக்குகின்றன. இதனால் கவிஞன் இம்முறையைக் கையாண்டு வெற்றி பெறுகிறான். அழகில் மேம்பட்ட கதையும் அமைந்து விடுகிறது.

செயயுட்கள் நமது கவனத்தைக் கவர்கின்றன என்று கூறினேன். செய்யுள்-ஓசைக்கே ஒரு தனி இனிமை உண்டு. அதனால் விளையும் பயனும் மிகப் பெரிதாகும். கதையின் பொருளை நாம் நேர்பட்டு அனுபவிக்கும் நெறியிலே நம் மனத்தை இவ் இனிய ஓசை திருப்பிவிடுகிறது. கவிதையின் உயிர்நிலை செய்யுளோசை என்று சொன்னால், அது தவறாகமாட்டாது. இவ்வகைச் செய்யுள்-ஓசைகள் மேற்கொள்ளும் விகற்பங்களும் மிகப் பல. ஒரு சில நம் மனத்தைத் தூண்டி அது கூர்ந்து செல்லுமாறு செய்கின்றன. வேறு சில நம் மனத்தைக் கிளரச் செய்து அது தகர்த்து இடித்துச் செல்லுமாறு ஊக்குகின்றன. சில மிருதுவாய் நடனமிடுகின்றன. சில மெல்லென விரைவாய்ச் செல்லுகின்றன. சில குதித்துத் துள்ளி வருகின்றன. சில சாவதானமாக அகன்ற நெறியில் கௌரவமாகச் செல்லுகின்றன. இங்கே குறித்தனபோல எத்தனையோ வகைகளில் ஓசை விகற்பங்கள் நிகழுகின்றன. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்,

சொல்லுக்குச் சொல்அழகும் ஏறுமே
யடா—கவி
துள்ளும் மறியைப் போலே துள்ளு
மேயடா
கல்லும் கனிந்துகனி யாகுமேயடா
—பசுங்
கன்றும்பால் உண்டிடாது கேட்
குமே யடா.
அலைமேலே அலைவந்து மோதுமே
யடா—அலை
அழகான முத்தை அள்ளிக் கொட்
டுமேயடா
மலைமேலே மலைவளர்ந் தோங்குமே
யடா—அதை
வனங்கள் அடர்ந்தடர்ந்து சூழுமே
யடா

என்று பாரதி பாடல்களைக் குறித்துப் பாடியிருக்கிறார்கள். இது மிகவும் உண்மையாகும். ஓசை விகற்பங்களால் புதிய புதிய சக்தியைச் செய்யுட்களில் தோற்றுவித்தல் கவிஞனுக்குரிய ஒரு பேரியல்பென்பது உறுதி. சிலப்பதிகாரக் கதையை வசனத்தில் எழுதினால் அக்காவியத்தின் அழகுகள் என்னவாய் முடியும்! வழக்குரை காதையிலுள்ள வேகம் வசனத்தில் வருமா? வரிப் பாடல்களிலுள்ள இனிமையும் அழகும் வசனத்தில் தோன்றுமா? கதைகளைச் சொல்லுவதற்குப் பாடல்களே சிறந்த கருவியாகும்.

இராமாயணம், சிலப்பதிகாரம் முதலியவை கதைப்பாட்டுக்களின் சிகரம் என்று சொல்லத்தக்க பெருங்காவியங்களாம். இவைகள் ஒரு தலைவன் அல்லது தலைவியினது பெருஞ் செயலை உணர்த்துகின்றன. இவற்றிலுள்ள பல பகுதிகளும் தலைமைப் பொருளோடு பொருத்தமுற்று இசைந்து விளங்கி, அப்பொருளிற்குத் தகுதி

யான் அவயவமாக அமைந்து விடுகின்றன. இவ்வுறுப்புக்களில் ஒன்று நீங்கினுலும் கதைப் பொருள் கேடுறுவதாகும். இப்பேர்ப்பட்ட காவியங்கள் உலகம் முழுவதிலும் ஒரு சிலவே உள்ளன. கிரேக்க மொழியில் இலியட், ஆடிஸி என்பவற்றைக் கூறவேண்டும். ஆங்கிலத்தில் பாரடைஸ் லாஸ்ட் (சுவர்க்க நஷ்டம்) என்பதனைக் கூறுதல் வேண்டும். இவை போன்ற காவியங்கள் தவிரச் செய்யுளால் இயன்ற ஒவ்வொரு நாடகமும் 'கதைப்பாட்டு' எனவே கூறத்தக்கது. கதைப்பாட்டுக்களில் நாடக பாவம் முக்கியமானது என்பதும் கருதத் தக்கது. ஒரு சில காவியங்களில் பெருங் காவியங்களுக்கு வேண்டும் அளவு, பெருமை அல்லது கௌரவம், அழகுச் சிறப்பு முதலியன காணமற் போதலும் உண்டு. இவைகளில் சில ஏதேனும் நிகழ்ச்சிகளை வர்ணிப்பன வாகலாம். சில உணர்ச்சி நிலைகளை வர்ணிப்பன வாகலாம். இவைகளையும் நாம் கதைப்பாட்டு எனவே கூறுதல் வேண்டும்.

கதைக்கும் பாட்டிற்கும் மூன்று வகையான தொடர்பு இருத்தல் கூடும். முதல் வகையில் பாடல்கள் தோன்றுதற்குரிய உணர்ச்சிக்கு இக் கதைகளின் வரலாறு நேரே காரணமாக அமைவது. 'நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மிய'த்தை இவ்வகைக் கதைக்கு உதாரணமாகக் கூறலாம். இரண்டாவது வகையில் ஏதேனும் ஒரு கருத்து அல்லது உணர்ச்சியை வெளியிடுவதற்குக் கவிஞன் வியாஜமாக ஏதேனுமொன்றை எடுத்துக்கொள்வது. பாரதியின் 'ஒளியும் இருளும்' என்ற பாடல் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். மூன்றுவது வகையில் கவிஞன் தனது கவிதைச் சித்திரத்தை வரைவதற்குரிய திரையாகக் கதை அமைவது. இவ்வாறு கூறுவதனுல், அலங்கார நூல்களில் கூறப்படும் அணிகளை யெல்லாம் இவ் வகையில் கையாளுகிறுன் என்பது எனது கருத்தன்று. சாதாரணக் கருத்துக்களை அலங்கார ஆடைகளினுல் கவிஞன் போர்த்து விடுகிறுன் என்பதும் எனது கருத்தன்று. அவனுடைய கருத்துக்களும் உணர்ச்சிகளும் பல வகை வண்ணங்களுடனும் அழகுடனும் சோபிப்பதைப் புலப்படுத்துவதே இக் கவிதைச் சித்திரம். சொல்லும் பொருளும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிவு படாதன என்ற உண்மையை இங்கும் காணலாம்.

தமிழ் மொழியில் கதைப்பாட்டுக்கள் மிகச் சிலவே உள்ளன. புராணங்களைக் கதைப்பாட்டுக்களாகக் கருத முடியாது. சிறந்த செவ்விய முறையில் கதைப்பாட்டுக்களை இயற்றுவது நமது நாட்டுக் கவிஞர்களின் கடமையாகும்.

●

கற்றறிந்தவன் பேசுவதில்லை
பேசுபவன் கற்றவனல்ல

— லா சு.

நன்றுகக் குலைப்பதாலேயே ஒரு நாயை
நல்ல நாய் என்று சொல்வதில்லை
நன்றுகப் பேசுவதாலேயே ஒருவனைச்
சிறந்தவனுகக் கோள்வதில்லை

— சுவாங் சு.

விஞ்ஞானமும் விஞ்ஞான மனப்பான்மையும்

திரு. ஜி. ஆர். தாமோதரன்,
[B. Sc., Elec., B. Sc. Mech. (Durham), A. M. I. E. E. (London.)]

★

1938 ஆண்டு அக்டோபர் மாதம் 30-ஆம் தேதியன்று காலை சுமார் 8-30 மணிக்கு நியூயார்க் பிலடல்பியா நகரங்களுக்கிடையே உள்ள பெரிய வீதிகளில் திடீரெனப் போக்குவரத்தில குழப்பம் ஏற்பட்டது. போலீஸ்காரனுடைய கட்டுக்கு அடங்காமல மோட்டார் வண்டிகள் ஏதோ ஒரு புயலின் ஆபத்தினின்று தப்பித்துக் கொள்வதைப் போல வேகமாக ஓடின. டெலிபோன் நிலையங்களில் வேலை அதிகமாயிற்று. இவை யாவற்றிற்கும் காரணம் ஓர் ஒலிபரப்பி கற்பனையான ஒரு செய்தியைக் கேட்பவர் நம்பத்தகுந்த முறையில் விடுத்ததே. செவ்வாய்க் கிரகத்திலிருந்து (Mars) ஒரு சேனை இவ் வுலகின்மீது படையெடுத்து வருவதாகக் கேட்டவர்களுள் நூற்றுக்கு இருபது பேர் மிக்க திகைப்படைந்தனர்.

யார்யார் இச் செய்தியைக் கேட்டு அஞ்சினர்களோ அவர்கள் யாவரும் இச் செய்தி உண்மையா, அல்லது பொருத்த முடையதா என்பதை ஆராயவில்லை. அவர்கள் செவியுற்ற செய்தியை நம்பினர்கள். கேட்பவற்றைத் தாமதமின்றித் துருவிப் பார்க்கும் மனப்பான்மையை வளர்ப்பவனே அமைதி குலையாமல் நிமிர்ந்து நிற்கும் ஆற்றலைப் பெற இயலும். மனிதனுடைய போக்கை ஆராயுங்கால் இந்த உண்மை நன்கு புலனாகும். சிலர் தாம் கொண்ட நம்பிக்கையையே பெரிதாக மதிப்பர். இவர்கள் உண்மையைத் துருவி ஆராய்ந்து அறிவைப் பெறுதற்கு அஞ்சுவர். இத்தகையவர்கள் பகுத்தறிவை இழந்து வீண் அச்சத்திற்கு ஆளாவார்கள். 'இது உண்மையா? என்று வினவும் விஞ்ஞான மனப்பான்மையை இவர்கள் போற்றுபவர்கள் அல்லர். இந்த விஞ்ஞான மனப்பான்மை என்பது யாது? ஈண்டு இதைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்.

விஞ்ஞானம் ஒரு செயலாகும். அச் செயலில் வெற்றி பெறுதற்கு உண்மை மிகவும் இன்றியமையாத தாகும். மற்றெல்லாவற்றிற்கும் ஒரு குறிக்கோளை யடைய உண்மை ஒரு கருவியாக அமைகிறது. ஆனால், உண்மையே குறிக்கோளன்று. ஆனல், விஞ்ஞானத்திற்கு வாய்மையே குறிக்கோளாகும்.

மனப்பான்மை என்பது ஒரு வகையான மனநிலை அல்லது பொருள்களைக் காணும் இயல்பு எனலாம். இது பெரும்பாலும் உள்ளக் கிளர்ச்சியேயாகும். இதுவே நம்முடைய செயலையும் குணத்தையும் நிர்மாணிக்கிறது. மூட நம்பிக்கைகள், சிலவற்றின் மீதுள்ள வெறுப்பு, பிறவற்றிற்குள்ள உயர்வை மறுக்கும் அகம்பாவம் முதலியவைகளால் தூண்டப்படாமல் பகுத்தறிவினல் கட்டுப்படுத்த முயல்வதே விஞ்ஞான மனப்பான்மை யாகும்.

விமானங்கள், கம்பியில்லாத் தந்திகள் குளிர்ச்சிப் பொறிகள் (Refregerator) முதலியவைகளைக் குறித்துக் கூறுவதே விஞ்ஞான மென்று பலர் கருதுகின்றனர். பொருள் விஞ்ஞான மன்று; பொருள்களைத் துருவி ஆராய்தலே விஞ்ஞானமாகும். இஃது ஒரு தனிப்பட்ட முறையும் மனப்பான்மையுமே யாகும். பௌதிக ஆராய்ச்சிக் கூடத்தில் ஒருவரைத் தங்கத்தின் தன்மை என்ன என்று வினவினால் அவன் அதனுடைய கனம், எடை சூடாகும் நிலை முதலியவற்றைக் குறித்துக் கூறுவார். ஓர் இரசாயன நிபுணரைத் தங்கத்தைக் குறித்துக் கேட்டால் அவர் தங்கத்துடன் சில அமிலங்கள் அல்லது மற்ற இரசாயனப் பொருள்கள் சேரும்போது அது எத்தன்மையைப் பெறுகிற தென்றும் அவைகளுடன் அது எவ்வாறு கலக்கிற தென்றும் கூறுவார். ஆனால் ஓர் ஓவியனைக் கேட்டால் அவன் ஒன்றும் கூறாமல் ஒரு படத்தை வரைந்து தங்கத்தின் நிறத்தை, படத்தில் தீட்டப்பெற்ற பல நிறங்களுடன் ஒத்திட்டுப் பார்த்தால் எவ்வாறு இருக்கிற தென்பதைக் காட்டுவான். பௌதிக வல்லுநர், இரசாயன நிபுணர், ஓவியர் ஆகிய இவர்கள் கூறுவன தங்கத்தின் ஒரு சில உண்மைகளே யாகும். அதன் உண்மைகளை முற்றிலும் அறிய இயலாது. விஞ்ஞானி தெரிந்தெடுத்து ஆராயும் பகுதிகள் யாவும் நுணுக்கமாக அளந்து அறிதற் குரியன. அந்த உலோகத்தின் இயற்கை விதிகளை நாம் கண்டு பிடிக்க முயலும்போது அதன் தன்மையின் சில சிறந்த உண்மைகள் புலனாகின்றன.

விஞ்ஞானத்தின் நோக்கம், இந்த உலகம் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிற தென்பதை அறிவதன்று. எவ்வகையில் இவ்வுலகம் இயங்குகின்றது என்பதை ஆராய்வதே அதன் நோக்கமாம். விஞ்ஞானி தன்னுடைய சோதனையில் புலப்படும் உண்மைகளை ஆய்ந்து சிதறிக் கிடக்கும் பலவற்றைக் கோர்த்துச் சில விதிகளை அமைப்பான்; இவ்விதிகளைக் கொண்டு வெவ்வேறான சந்தர்ப்பங்களில் என்ன நேரும் என்பதை நிரூபிக்க முற்படுவான். என்று அவ்விதிகளுக்கு முரண்பட்ட பலன்கள் சோதனையில் காணப்படுகின்றனவோ அன்றே அவற்றைத் திருத்தி அமைக்க வேண்டும்.

சமூகச் சூழலிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் விஞ்ஞானம் புகல்வது யாதெனில் மனிதனால் படைக்கப்பட்ட உலகப் பொருள்களில் அதுவும் ஒன்றாகும் என்பதே. ஒருவேளை அதுஒன்றே சர்வதேசங்களுக்கும் பொதுவாக விளங்கும் பொருளாக இருக்கலாம். விஞ்ஞானம் நாடும் உண்மை உலகத்தாரால் ஒப்புக் கொள்ளப்படும். இசை ஒரேஇனத்தாரை ஒன்றுபடுத்துகிறது. ஆனால், தனிப்பட்ட ஒரு நாட்டின் இசை உலகத்திற்குப் பொதுவான இசையாக இருப்பதில்லை. நம் நாட்டின் இசை மேலைநாட்டாரை வசப்படுத்துவதில்லை என்பது கண்கூடு. ஆனால், ஒரு நாட்டவர் கண்ட பௌதிக உண்மைகள் உலகெங்கும் வரவேற்கப்படுகின்றன. கணக்கு உலகத்திற்குப் பொது எனலாம். அஃது எல்லா நாடுகளாலும் போற்றப்பட்டு வாழ்க்கையில் வழங்கப்படும் கலையன்றோ? ஐரோப்பாவின் சிறப்பான ஓவியம் ஆசியாவின் கண்களுக்கு விநோதமானதாகவும் விருப்பமற்றதாகவும் காணப்படும். இசைவாணர் தியாகையருடைய கீர்த்தனைகளை மேலைநாட்டினர் சுவைக்க முடியாது. ஆனால், விஞ்ஞான அறிவு எங்குப்பரவினாலும் அதன்உண்மைகள் போற்றப்படும்.

உண்மை நாடுவதில் இன்பம் உண்டு. இன்று முடவன் நடக்கிறான். குருடன் பார்க்கிறான். நிர்வாணம் உடை தாங்கி நிற்கிறது. பசியால் வாடும் மக்கள் உண்கின்றனர். இவைகள் யாவும் மனிதன் அடைந்த அறிவின் விளைவேயாம். கற்களிலும் மரங்களிலும் பதுங்கிக் கண்களுக்குப் புலனாகாத

பிசாசுகளின் அச்சத்தை விஞ்ஞானம் அகற்றிவிட்டது. இருளில் மூழ்கிக் கிடந்த மனிதனுக்கு ஒளியைத் தந்திருக்கின்றது. அறியாமை மூடநம்பிக்கைகள் பொறுமையின்மை இவைகளினால் விளையும் கொடுமைகளிலிருந்து விஞ்ஞானம் நம்மைக் காப்பாற்றுகின்றது. மனித சமுதாயத்திற்கு விஞ்ஞானம் உண்மையில் விடுதலை யளிப்பதாகும். 'நீ உண்மை அறிவாயாக. அஃது உனக்கு விடுதலை தரும்' என்று மறை அறைகின்றது. உண்மையை மதிக்காத நாட்டினர் பிறரால் அடிமைகளாக்கப் பட்டனர் என்பதை நாம் தற்காலத்தில் அறிகிறோம். சில நாட்டினர் தாம் முயன்றுபெற்ற உண்மை நாடும் உரிமையை இழப்பதைக் காட்டிலும் உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருப்பது நாம் அறியாததன்று. விஞ்ஞானம் எங்ஙனம் வேலை செய்கின்றது என்பதை எளிதாக அறிய விஞ்ஞானிகள் எப்படி வேலை செய்கிறார்கள் என்பதை ஆராய்தல் வேண்டும். விஞ்ஞானிகள் தேவர்கள் அல்லர்; நம்மைப்போல் சாதாரண மனிதர்களே. மற்ற மக்கள் எப்பொருள்கள்மீது கருத்துடையவர்களாக இருக்கிறார்களோ அப்பொருள்களின்மீதே விஞ்ஞானிகளும் தம் கருத்தைச் செலுத்துகிறார்கள். ஆனால், அவர்கள் கருத்து ஒரு தனி முறையில் செலுத்தப்படுகிறது. உலகம் மாறிக்கொண்டே இருக்கிறதென்பது வெள்ளிடை மலை. ஆகவே, உண்மை நாடுபவர் அதன் எல்லையைக் காணும் நம்பிக்கை கொள்ளமுடியாது. ஒவ்வோர் ஆய்வினாலும் ஒவ்வோர் அறியாமையாகிய மதிலைக் கடக்கிறோம். ஒரு மதிலைக் கடந்த பிறகு மற்றொரு மதில் அதைவிடப் பெரியதாகத் தூரத்தில் தோன்றுகிறது. உண்மை நாடும் முயற்சி முடிவற்றது. எனவே, எந்தப் பிரச்சினையையும் முடிவாகத் தீர்ப்பதற்கில்லை. கிடைக்கும் ஆதாரங்களைக் கொண்டு எதைப்பற்றியும் தற்காலிகமான முடிவையே கொள்ளமுடியும். நாம் காணும் உண்மை களங்கமற்றதோ அல்லது முடிவானதோ அன்று என உணர வேண்டும். இந்த உணர்ச்சி உள்ளத்தைத் தூய்மைப் படுத்தும்; செருக்கு, பிடிவாதம், தன்கருத்திலேயே மூழ்கிக்கிடத்தல் முதலிய தீய தன்மைகளை அகற்றும். 'கற்றது கைம் மண் அளவு, கல்லாதது உலகளவு' என்ற எண்ணத்தைப் பெருக்கி அடக்கத்தைத் தரும். அது மேன்மேலும் ஒருவனைப் புதுப்புது முயற்சியில் ஈடுபடுத்த வல்லது.

உலகில் பல சிக்கல்களைத் தீர்க்க வேண்டியிருக்கின்றது. இவைகளைத் தீர்க்காததனால் மக்களினம் பலவகைத் துன்பங்களை அடைகிறது. உண்மை நாடுபவர் இவைகளைக் காணும்போது தாம் கண்டறிந்தது எத்துணைச் சிறுமையுடையதென்பதை உணர்கிறார். முன்னரே கண்டறிந்த அறிவியல் புதுமைகளை மீண்டும் ஆராய்ந்து சோதிப்பது வீணே ஆகும். முன் அறிந்தவற்றை நம்முடைய ஆராய்ச்சிக்கு ஆதாரமாக மட்டுமே கொள்ளலாம். அறிவாளிகளின் பெருமை, அவர்கள் கண்டறிந்த உண்மைகளுக்குக் கூறும் சான்றுகளைப் பொறுத்துள்ளதேயன்றி அவர்களின் செல்வச் செருக்கோ அல்லது தோற்றத்தின் கம்பீரத்தையோ ஒட்டியது அன்று.

ஒரு பிரச்சினையைச் செவ்வனே தீர்ப்பதற்கான சாதனங்களைக் கண்டறிந்த ஆராய்ச்சியைத் தொடங்குதற்கு மிக்க உழைப்பும் பொறுமையும் விடாமுயற்சியும் வேண்டற்பாலன. விஞ்ஞானி பலமுறை தோல்வியுறினும் அவனுடைய முயற்சி குன்றுவதில்லை. உழைப்பது அவனுடைய இன்பம். ஏனென்றால் உலகப் பிரச்சினையைத் தீர்ப்பதே அவன் தன் வாழ்க்கையில் பெறும் பேரின்பம் ஆகும். உழைப்பது மடமை என்று ஒருவன் கருதுவானாயின் அவன் அறிவு மரத்தினின்றும் இன்பங்களைப் பெற்று நுகரமுடியாது. விஞ்ஞானி உண்மையில் வாழ்க்கை இன்பத்தைத் துய்க்கிறான். அவன்

உண்மை நாடும் முயற்சியில் இடறி விழும் பொழுதெல்லாம் துன்பம் அடைபவனாகிறான். உண்மையின் பால் காதலுடையவனுக்கு நாளும் ஆயுட்காலமும் மிகக் குறுகியதாகத் தோன்றும். அறியாமை மிகக் கொடியது என்பதை அவன் தன் அனுபவத்தினின்றும் அறிகிறான். பிணிகளைத் தடுப்பதற்கும் தீர்ப்பதற்கும் நீண்ட நாள் வாழ்வதற்கும் தன் சூழ்நிலைக்குப் பலியாகாமல் இருப்பதற்கும் அறிவு துணை செய்கிறது. எதை அவன் அறியவில்லையோ அஃது அவனைப் புண்படுத்துகிறது என்பதை உணர்கிறான். அவன் வரும் தீங்கை முன்னால் அறிவது தன்னைத் தான் முன்கூட்டியே பலப்படுத்திக் கொள்வதாகும். உண்மை நாடுபவர் தினைத் துணை விஷயத்தையும் பனைத் துணையாகக் கொண்டு பயன் அறிவார்கள். விஞ்ஞானிகள் தம் ஆராய்ச்சியில் காணும் நுணுக்கமான வேறுபாடுகளையும் புறக்கணிக்க மாட்டார்கள். இதனாலேயே அவர்களால் மிகப் பெரிய உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டன. விஞ்ஞானிகள் 'என்னால் சாதிக்க முடியாது' என்று எதையும் கூறார். ஆனால் 'அதில் முனைய யான் வாய்ப்பை எதிர்பார்க்கிறேன்' என்று கூறுவர். இதுவரை ஒரு காரியம் சாதிக்கப்படாமல் இருந்தால் அதனால் விஞ்ஞானி மனச்சோர்வடையாமல் அதைத் தனக்கு விடுத்த அறைகூவலாக ஏற்றுக் கொள்கிறான். ஒருவன் தானாகவே மெய்வருந்திப் படைக்கும் கலையைப் போன்றது விஞ்ஞானம். விஞ்ஞான மனப்பான்மைக்கு இன்றியமையாத மேற்கூறிய பண்புகளையே ஒருவன் தன்னுடைய குறிக்கோள்களாகக் கருதி அவற்றை நாடப் பாடுபடுதல் வேண்டும். விஞ்ஞான மனப்பான்மை ஒருவருடன் பிறப்பதில்லை; அதனை இடையறா முயற்சியாலேயே பெற முடியும். வழிகாட்டியாகத் திகழ்வதற்குரிய எல்லாப் பண்புகளும் ஒருவரிடம் காண முடியாது. விஞ்ஞான உள்ளம் மற்றவைகளைப் போலக் கற்றுப் பெறுவதல்ல. ஆனால், தற்செயலாய்க் கைப்பற்றுவதாம். வெற்றி கண்ட பேரறிஞரின் உறவினால் பெறும் பண்புகள் கல்லூரியில் கற்றுப் பெறுவதைக் காட்டிலும் சிறப்புடையன. ஏனென்றால், அவர்களுடைய தொடர்பு பேரூக்கம் அளிப்பதாகும். இத்தகைய வாய்ப்புகள் மாணவர்களுக்குக் கிடைப்பது அரிது. எனினும், ஒவ்வொரு மாணவனும் அறிவியல் பேரறிஞரின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர்களுடைய பேருரைகளையும் படித்து அவர்கள் வாழ்க்கையில் விளங்கிய பண்புகளைக் கற்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. அவர் வாழ்க்கையில் காணும் குறைபாடுகள் நமக்குச் சிறந்த படிப்பினையாகும். அவர்கள் கண்ட வெற்றிகள் நமக்கு வழிகாட்டிகளாக அமைகின்றன. அவர்கள் நம்மைப்போல் சாதாரண மக்களே என்று அறிவதால் அவர்கள்பால் நாம் அன்பு கொள்கின்றோம். விஞ்ஞான மனப்பான்மை அரைகுறையாக வளர்க்கப்பட்டாலும் அவர்கள் வெற்றிக்கு அஃது எத்துணை உதவியாய் அமைந்ததென்பதை அவர்கள் வரலாறுகளிலிருந்து தெரியலாம். அவர்கள் வரலாறுகளை அனைவரும் படிப்பது அவசியமாகும். உதாரணமாக நீயூடன், (Newton) பாரடே, (Faraday) பாஸ்ச்சர் (Pasteur) கியூரி அம்மையார் (Madame Curie) முதலியோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படிக்கலாம். விஞ்ஞான மனப்பான்மையைக் கைப்பற்றினால் அதனைத் தளராத பயிற்சியால் வளர்க்கலாம். இது வாழ்க்கையில் ஒரு பெரிய போராட்டமாகும். எனினும், அதன் பயனை நோக்குங்கால் அப்போராட்டத்தில் ஈடுபடுதல் முற்றிலும் தகுதியுடையது என்பது விளங்கும்.

தற்காலத்தில் தோன்றும் பிரச்சினைகள் யாவும் இலட்சியங்களைப் பெருக்குவதிலும் ஆன்மவளர்ச்சித் துறைகளிலும் ஆழ்ந்து கிடக்கின்றன. ஆனால், தொழிலறிவைக் குறித்த பிரச்சினைகள்

நம்முள் எழுவதில்லை. சிறந்த நாகரிக வாழ்க்கை நடாத்துதற்கு ஏற்ற சாதனங்கள் பல நம்மிடையே இருந்தும் அவைகளைத் தக்க முறையில் பயன்படுத்திக்கொள்வதில்லை. தவறான நெறிகளைப் பின்பற்றும் பழைய அரசியல் பொருளாதார அமைப்புக்களை முற்றிலும் மாற்றி அமைத்தல் அவசியமாகும். அந்தோ! இப்பழைய அமைப்புக்களை விட்டுவிட மக்களுக்கு மனமில்லையே!

விஞ்ஞானம் மக்களின் பண்பாட்டையும் வளர்ப்பதாகும். ஐன்ஸ்டன், ரூதர்போர்டு, போர் (Bohr) பிலான்க் (Planck), புரூட் (Frued), மார்கன் (Morgan), ராமன் போன்ற விஞ்ஞானப் பெரியார்களின் பண்பாடு, தலைசிறந்த கவிகள், கலைஞர்கள், தத்துவ ஞானிகள் ஆகிய இவர்களின் பண்பாட்டைவிட எவ்வகையிலும் குறைந்ததல்ல. உண்மையை யுணரும் ஆற்றலையும் அறிவைப் பெறும்பேற்றையும் விஞ்ஞான மனப்பான்மை பெருக்குகின்றதல்லவா? எனவே, விஞ்ஞானம் மனித வாழ்க்கைக்குப் பல வகையிலும் துணையாவதன்றிச் சமுதாய முன்னேற்றத்திற்கும் பெருதவியாய் அமைவதாம்.

மனிதன் பல்வகைத் துறைகளிலும் முன்னேற்றமடைந்திருக்கிறான். ஆனால் இசை, கலை, இலக்கியம், அரசியல், தத்துவம், சமயம் முதலிய துறைகளில் அடைந்த வளர்ச்சியைவிட விஞ்ஞான முன்னேற்றம் மனிதனை வேகமாக உந்திச்செல்கிறது.

இது மரக்கிளையா! அல்லது உயிருள்ள பிராணியா?

இது ஓர் பூஞ்செடியின் கிளையாகக் காணப்படுகிறது. மலர்களும், இலைகளும் உள்ளன. ஆனால். இது கடலில் வாழும் ஓர் உயிர் வகை. மலராகக் காணப்படும் ஒவ்வொன்றும் ஓர் உயிர். அம்மலரின் இதழ்கள் பல நிறங்களை உடையன— நீலம், வெண்மை, மஞ்சள், பச்சை. இவ்விதழ்களே அவ்வுயிரின் கைகளாகும். கடலில் தனக்கு வேண்டிய இரையைக் கொணர்வதற்கு இக்கைகள் உதவுகின்றன.

ஒவ்வொரு பூவும், ஒரு தனி உயிர்; எனினும் அவை ஒரே கூட்டமாக, ஒன்றுக்கொன்று தொடர்போடு வாழ்கின்றன. ஓர் சமூகத்தின் பல உயிர்கள் எனினும் ஒவ்வொன்றும் ஓர் குறிப்பிட்ட வேலை செய்கிறது. ஓர் உயிர்—மலர் உணவை உண்கின்றது; மற்றொன்று முட்டைகளை அடைகாத்து குஞ்சுகளைப் பொரித்து வளர்க்கின்றது.

இவைகளின் வாழ்க்கை மனித சமுதாயத்திற்கே ஓர் படிப்பினையாகும் அல்லவா!

கல்லூரித் தலைமைப் பதவிக்கும் கன்னித் தமிழுக்கும் தொடர்பு பெறும் பாலும் இருப்பதில்லை. இங்கே வரும் ஆராய்ச்சிக் கட்டுரையை வழங்கியுள்ள பெரியார், சேலம் கல்லூரித் தலைவராகிய

திரு. அ. இர்ராமசாமிக் கவுண்டர், M. A., L. T.

3200

திருவள்ளுவர் காலம்

★

திருவள்ளுவர் காலத்தைப் பற்றிப் பல அறிஞர்கள் பல விதமாகக் கூறி வருகின்றனர். ஆதாரமற்ற கதைகளை அடிப்படையாகக் கொண்டே அவர் காலம் பெரும்பாலோரால் உறுதி செய்யப்பட்டுள்ளது. கி. மு. ஒன்றும் நூற்றாண்டு என்பர் ஒரு சாரார். கி. பி. ஒன்றும் நூற்றாண்டென்பர் மற்றொரு சாரார். சொல்லாராய்ச்சியும், போதிய தமிழறிவும் இல்லாத சிலர் கி. பி. ஆறும் நூற்றாண்டே திருவள்ளுவர் காலம் எனக் கூறுகின்றனர்.

இந் நிலையில், திருவள்ளுவர் காலத்தைச் சில அகச் சான்றுகளைக் கொண்டு உறுதிப்படுத்துவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

திருவள்ளுவர் தொல்காப்பியருக்குக் காலத்தால் பிந்தியவர் என்பதற்குப் பல சான்றுகள் உள.

(1) தொல்காப்பியர் மூன்றும் வேற்றுமைக்கு ஆல் உருபு கூறாதிருக்கத் திருவள்ளுவர் பல குறட்பாக்களில் ஆல் உருபை வழங்கியுள்ளார்.

கற்றதனா லாய பயனென்கொல் வால
றிவன், நற்றாள் தொழாஅ ரெனின்

(2) தன்மை ஒருமை வினைக்கு அன் விகுதியைத் தொல்காப்பியர் கூறாதிருக்க, திருவள்ளுவர் அதனை வழங்குகிறார்.

இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்
பின், கரப்பார் இரவன்மின் என்று.

(3) நீ, நீயிர் என்பவனவற்றை முறையே முன்னிலை ஒருமைக்கும், முன்னிலைப் பன்மைக்கும் தொல்காப்பியர் வழங்கியிருக்க நீர் என்ற சொல்லைத் திருவள்ளுவர் முன்னிலையில் வழங்கியுள்ளார்.

நினைத்திருந்து நோக்கினும் காயும்
அனைத்துநீர், யாருள்ளி நோக்கினீர்
என்று.

(4) தன்மை முன்னிலையில் வியங்கோள் வாராதெனத் தொல்காப்பியர் கூறியிருக்க வியங்கோளைத் தன்மை முன்னிலையில் திருவள்ளுவர் வழங்கியுள்ளார்.

காதல் அவரிலர் ஆகநீ நோவது
பேதைமை வாழியென் நெஞ்சு.

(5) கள் விகுதி உயர்திணைக்கு வாராது என்று தொல்காப்பியர் கூறியிருக்கத் திருவள்ளுவர் அதனை உயர்திணைக்கும் பயன் படுத்தினர்.

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்
தார்கொல், மற்றை யவர்கள் தவம்

(6) எல்லார் தம்மையும், எல்லார் தமக்கும் என்று கூறவேண்டும் எனத் தொல்காப்பியர் விதித்திருக்க எல்லார்க்கும் எனத் திருவள்ளுவர் வழங்கியுள்ளார்.

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை
எஞ்ஞான்றும், வல்லறிதல் வேந்தன்
தொழில்

(7) சகரம் மொழிக்கு முதலாகாது எனத் தொல்காப்பியர் வரையறுத்திருக்கத் திருவள்ளுவர் சலம், சமன் என்ற சொற்களை வழங்கியுள்ளார்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்
அமைந்தொருபால், கோடாமை சான்
றோர்க் கணி

(8) நேர்வு, நிரைவு என்ற முற்றுகர அசைகள் செய்யுளீற்றில் வாரா எனத் தொல்காப்பியர் யாத்திருக்கத் திருக்குறளில் அதன் ஆட்சி காணப்படுகிறது.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள், மெய்ப்பொருள் காண்ப
தறிவு

இச்சான்றுகளால் திருக்குறள் தொல்காப்பியத்துக்குக் காலத்தால் மிகவும் பிந்திய தென விளங்குகிறது. தொல்காப்பியத்தில் கூறப்படாத இவ்வாட்சிகள் வழக்குக்கு வருதற்குப் பல நூற்றுண்டுகள் சென்றிருக்கவேண்டுமெனத் தெரிகின்றது. ஆயிரம் ஆண்டுகளாவது இடையிட்டிருக்கலாம் என்பது மிகையாகாது. நிற்க.

திருக்குறள் பாரதப் போருக்கு முந்தியது என்பதற்கு ஓர் அகச் சான்றுண்டு.

கோதமனார் என்பவர் பாரத காலத்தவர் என்பது அவர் பாடிய புறநானூற்றுச் செய்யுட்களால் தெரியக் கிடக்கின்றது. அவர் பாடல் வருமாறு.

விழுங்கடிப் பறைந்த முழுக்குரல் முரச
மொழுக்குடை மருங்கி னொருமொழித்
தாக
அரவெறி யுருமி னுரறுபு சிலைப்ப
ஒருதா மாகிய பெருமை யோரும்
தம்புகழ் நிறீஇச் சென்றுமாய்ந் தனரே
அதனால், அறவோர் மகனே
மறவோர் செம்மால்.........உரைப்பக்
கேண்மதி
நின்னூற்றம் பிறரறியாது
பிறர்கூறிய மொழிதெரியா
ஞாயிற் றெல்லை யாள்வினைக் குதவி
இரவி னெல்லை வருவது நாடி
யுரை...
உழவொளி பெரும்பக டழிதின்
றுங்குச்
செங்கண் மகளிரோடு சிறுதுனி
யளைஇ
அங்கட் டேற லாய்கலத் துகுப்பக்
கெடலருந் திரு.............................
மடை வேண்டுநர்க் கிடையருகா
தவிழ் வேண்டுநர்க் கிடையருளி
விடைவீழ்த்துச் சூடு கிழிப்ப
நீர்நிலை பெருத்த வார்மண லடை
கரைக்
காவு தோறும்................................
மடங்கலுண்மை மாயமோ வன்றே
(புறம் 366)

தரும புத்திரனைக் கோதமனார் பாடியது.

இதன் பொருள்:- "சிறந்த ஒலிபரப்பும் முரசம் பாம்பை எறியும் இடியேறு போல் முழங்க, தமக்கு நிகரின்றி ஒழுக்கமுடைய சுற்றத்துடன் ஒரு மொழியால் உலகாண்ட பெருமையுடையவரும் தமது புகழுடம்பை இங்கே வைத்துவிட்டு மறைந்து போயினர். ஆதலால் தரும புத்திரனே! சொல்லக் கேட்பாயாக. நின் ஆற்றல் இன்னதென்று உனையன்றிப் பிறரறியாது, பிறர் கூறிய மொழியின் கருத்தைக் குறிக்கொண்டு பகலை ஆட்சித் தொழிலில் கழித்து, இரவில் மறுநாள் வருவதை ஆராய்ந்து கொண்டு, உழுது பயிரை உண்டாக்கிய எருது அப்பயிரின் பயனையெல்லாம்

உலகோர்க் களித்துத் தான் பின்னும் உழுதற்கு வைக்கோலைத் தின்றாற் போலச் செங்கண் மகளிருடன் சிறு போது ஊடலிற் கலந்து, பானத்தை அழகிய கிண்ணத்தில் அருந்தி, கேடில்லாத செல்வம் படைத்து, பானம் முதலிய வேண்டினார்க்குக் குறைவின்றிக் கொடுத்து, உணவு விரும்பினவர்க்கு ஆட்டுக் கடாயைக் கொன்று அதன் சூட்டிறைச்சியைச் சோறுடன் அருளி, நீர் நிலைகளைப் பெருகச் செய்தவனே! அடைகரையடுத்த சோலைகள் தோறும் காலக்கடவுள் இருப்பது பொய்ம்மை அன்று.”

அறவோன் மகனாய தரும புத்திரன் முரசுக் கொடியோன் என்பதையும் அவரது பகைவனாகிய துரியோதனன் அரவக் கொடியோன் என்பதையும் பாரதக் கதையின் இறுதியில் முரசு உயர்த்தப்பட்டு அரவம் எறியப்படுவதையும் உற்று நோக்கின், வியப்பைத் தருகின்ற இவ்வரிய பாடல் இடையிடையே சிதைவுபட்டிருத்தல் வருந்தத் தக்கது.

அறவோன் மகனே! என்பதற் கொப்பத் தரும புத்திரனைக் கோதமனார் பாடியதென்று எட்டிலேயே எழுதி வைத்திருத்தலுங் காணத் தக்கது. பாரத காலத்துப் பாண்டவர்க்கும் தமிழரசர்கட்கும் பெண் கொடுத்தல், பெருஞ் சோறளித்தல், போரினுதவுதல் முதலிய தொடர்புகள் இருந்தமைக்குப் பல சான்றுகள் தமிழ் நூல்களிலுண்டு. பாண்டிய அரசன் ஒருவன் பாரதப் போர் நிகழுங்கால் சுற்றமும், புலவரும் சூழப் பாண்டவர்பால் சென்ற போது கோதமனார் தரும புத்திரனுக்கு நிலையாமையைக் கூறிய பாடல் இதுவாம். பாரதப் போர் கி. மு. 1200ல் நடந்தது என்பது வரலாற்று நிபுணரது முடிவு. எனவே, கோதமனாரும் இற்றைக்கு 3150 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்தவராவர்.

இதே கோதமனார் பாடிய வெண்பாவொன்று திருவள்ளுவ மாலையில் காணப்படுகின்றது.

வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த வெவ்வேறு புலவர்களால் இயற்றப்பட்ட வெண்பாக்களின் தொகையே திருவள்ளுவ மாலை என்பது. இதுவே திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரமாகத் திகழ்வது. இதில் அடங்கிய 53 வெண்பாக்களும் திருக்குறளின் சிறப்பையும், திருவள்ளுவரின் உயர்வையும் கூறுவனவேயாகும். அவற்றுள் கோதமனார் பாடிய வெண்பா வருமாறு:-

ஆற்றல் அழியுமென்
றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின்
புறத்தெழுதார்—ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும்
வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர்
வின்று

இதன்பொருள்: “ஆற்றல் அழியும் என்று அந்தணர்கள் நான்மறையை ஏட்டில் எழுதமாட்டார். ஆனால், ஏட்டில் எழுதப்பெற்று எல்லோராலும் சொல்லப்படினும் திருக்குறளுக்குச் சோர்வில்லை.” (அந்தணர் யார்? நான்மறை எவை? என்பனவற்றை மற்றொரு கட்டுரையில் விளக்குவாம்.)

இங்ஙனம் கோதமனாரால் பாராட்டப்பட்ட திருக்குறள் அவர் காலத்ததாதல் வேண்டும் அல்லது அவருக்கும் காலத்தால் முந்தியதாதல் வேண்டும். கோதமனாரும், திருவள்ளுவரும் சமகாலத்தவரெனக் கொள்ளினும் இற்றைக்கு 3200 ஆண்டுகளுக்கு முன்னரேயே

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்டது தமிழ் நாடு

என்பது போதரும். இந்த முடிவு பல பேருக்குப் புரட்சிக் கருத்தெனத்

தோன்றலாம். தமிழ்ப் பகைவர்களது எதிர்ப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தக் கோதமனார் வேறு, இந்தக் கோதமனார் வேறு எனச் சொல்லக் கூடும். தமிழ் இலக்கியத்தில் இரு வேறு கோதமனாரே காணப்படுகின்றனர். கோதமனார் என்பவர் ஒருவர்; அவருக்கு மிகவும் பிந்தியவரான பாலைக் கோதமனார் என்பவர் மற்றொருவர். இவ்விருவரையும் வேறுபடுத்தவே பிந்தியவருக்குப் பாலை என்ற அடை கொடுத்திருப்பதும் நோக்கத்தக்கது. திருவள்ளுவ மாலையில் காணப்படும் கோதமனாருக்கு அடை எதும் இன்மையால் அவரும் 366 வது புறச் செய்யுளைப் பாடிய கோதமனாரும் ஒருவரே என்பது பெறப்படுகின்றது. நிற்க.

தமிழ்நாட்டில் பாரத நாடகம் நடிக்கப்பட்டு வந்ததெனவும் அதில் புலவனாக நடித்த ஒருவன் தருமபுத்திரனாக நடித்த மற்றொருவனைப் பார்த்துக் கூறிய பாடலே இதுவெனவும் விதண்டாவாதம் செய்வாரும் உளர். நாடகப் பாடல் ஒன்றேனும் புறநானூற்றில் தொகுக்கப்படவில்லை. நாடகப் பாட்டுக் குரிய சொல் எங்கணும் காணப்படவில்லை. புறநானூறு நாடக நூலும் அன்று; அவ்வப்போது நிகழ்ந்த செயல்களைப் பாடிய பல புலவரின் பாடல்களே புறநானூற்றில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடலையும், முரஞ்சியூர் முடிநாகராயர் பாடலையும் (புறம். 1) நாடகப் பாடலெனச் சொல்லுபவர் தமிழின்கண் பொறாமையும், பிறமொழியின்கண் அன்பும் உடையாராதலின் அவரது கூற்றுப் பொய்யுரை என மறுக்க.

திருவள்ளுவர் கி. பி. ஒன்றாம் நூற்றாண்டில் இருந்தவர் என்று கூறுவார் எல்லோரும் ஒரு பொய்க் கதையையே சான்றாகக் காட்டுவார். அந்தக் கதை யாவது:-

வட நாட்டிலிருந்து தென்னாடு போந்த பகவன் என்ற ஆரியன் கருவூரில் புலையனால் வளர்க்கப்பட்ட ஆதி என்ற ஒரு மங்கையை மணந்த பின் இருவரும் குமரி நோக்கிப் புறப்பட்டனராம். வழியில் ஔவை, உப்பை, உருவை, வள்ளி, அதிகமான், திருவள்ளுவர், கபிலர் என்ற எழு மக்கள் பிறந்தனராம். பகவனது கட்டளைப்படி ஒவ்வொரு மகவையும் பிறந்த இடத்திலேயே விட்டு விட்டு இருவரும் சென்றனராம். பிறந்த போதே ஒவ்வொரு மகவும் ஒரு பாடலைச் சொன்னதாம். அதைக் கேட்டு உவகைபூத்த பெற்றோர் கவலையின்றி விட்டுச் சென்றனராம். இதுவே கதை. பண்டைய நூல்களிலோ, உரைகளிலோ இக் கதை காணப்படவில்லை. அண்மையில் கட்டப்பட்ட ஒரு கற்பனைக் கதையே இது.

நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த இவ்வெழுவர்க்கும் ஆரியத் தொடர்பு காட்டும் குறிக்கோளுடன் ஒரு கயவனால் கட்டப்பட்ட இந்தக் கதை நாடெங்கும் பரவி நமது மனத்தைப் புண்படுத்துகிறது. இந்தக் கதையைப் பாட நூல்களிலும் புகுத்திச் சிறு பிள்ளைகளையும் கெடுக்கிறார்கள். இதைத் தமிழர்கள் விரைவில் எதிர்த்துத் தமது தன்மானத்தைக் காப்பாற்றுவாராக.

உக்கிர பாண்டியன், இராசசூய வேள்வி செய்த பெருநற்கிள்ளி, சேரமான் மாவண்கோ ஆகிய மூன்று மன்னரும் அதியமான் நெடுமான் அஞ்சி என்ற குறுநில மன்னரும் கி. பி. ஒன்றாம் நூற்றாண்டில் இருந்தவர் எனற்குச் சில வரலாற்றுச் சான்றுகள் உள. இவர் எல்லோரையும் ஔவையார் பாடியுள்ளார். ஔவையாரும், திருவள்ளுவரும் உடன் பிறந்தவரெனக் காட்டும் பொய்க் கதையை அடிப்படையாகக் கொண்டு திருவள்ளுவர் கி. பி. முதல் நூற்றாண்டினர்

எனக் கூறுவது போலி ஆராய்ச்சியே யாகும்.

எனவே, தொல்காப்பியம் இற்றைக்கு 4200 ஆண்டுக்கு முன்னும் திருக்குறள் 3200 ஆண்டுக்கு முன்னும் எழுதப்பெற்றன என்பதே கொள்ளற்பாலது. தமிழ்த் தாய்க்குத் தொல்காப்பியமும், திருக்குறளும் இரு கண் போன்றன. பண்டைய தமிழ் நூல்களில் கடல்கோள் பட்டன பல; தீயில் அழிந்தன பல; செல்லரித்தன பல; பகைவரால் அழிக்கப்பட்டன பல; காவிரிப் பெருக்கில் விடப்பட்டன பல; எஞ்சியிருப்பன சிலவே. அவற்றுள் தொல்காப்பியமும், திருக்குறளும் தலையாயவை. இவற்றின் தொன்மையையும், தமிழ் மொழியின் முன்மையையும் மறைத்துத் தாழ்த்துவதற்கென்றே ஒரு கூட்டம் கட்டுப்பாடுடன் வேலை செய்கின்றது. இவற்றின் காலத்தை மிக மிகப் பிந்தியதாகக் காட்டி அவையெலாம் வழி நூல்களே எனவும் பறைசாற்றுகின்றது. தமிழர்களே! விழிமின், எழுமின்!

● ● ●

உயிருள்ள நாடா



ஆடை நெய்யும் தறியைப் பார்த்திருப்பீர்கள். அதிலே நூலைக் குறுக்காகப் பாயச் செய்வதற்காக ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு ஒரு சிறு கட்டை ஓடிக்கொண்டே யிருக்கும். அதை நாடா என்றும் குழல் என்றும் சொல்வார்கள்.

மேலே உள்ள படத்தைப் பாருங்கள். இந்த எறும்பின் பெயர் ஈகோபில்லா ஸ்மராக்டினு என்பது. வாயில் நுழையாவிட்டால் போகிறது. ஈகோபில்லா எறும்பு என்று வைத்துக் கொள்ளுங்கள். ஈகோபில்லாவின் வாயில் ஒரு புழு இருக்கிறதல்லவா? அந்தப் புழு இனிமேல் ஈகோபில்லா எறும்பாக மாறும்.

ஈகோபில்லா எறும்புகள் பட்டு நூலால் ஆன வலையில்தான் வாழும். அதற்கு வேண்டிய பட்டு நூலை உண்டாக்கப் பெரிய எறும்பால் முடியாது. ஈகோபில்லாப் புழுவால்தான் பட்டு நூல் உண்டாக்க முடியும்.

எறும்பு தன் புழுவைக் கவ்விக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாகப் போகும். புழுவின் வாயிலிருந்து பட்டு நூல் வந்துகொண்டே யிருக்கும். பட்டு வலை வந்து விடும். ஈகோபில்லா எறும்பின் கூடும் அமைந்து விடும்.

ஈகோபில்லாப் புழுவை உயிருள்ள நாடா என்று சொல்லலாம் அல்லவா?

"பாசில்கள் பரிணாமக் கொள்கைக்கு ஆதாரமாயின. வரிவரியான படிவுப் பாறைகளில் காணும் பாசில்களை முறைப்படுத்தினால், ஒரு தொடர்பும், வளர்ச்சியில் ஒரு நியதியும் காணப்படுகின்றன"—இவ்வாறு அறிஞர் வேலாயுதனார் முன் கட்டுரையில் கூறினார். தம் கூற்றை விரிவாக விளக்கி இப்போது மெய்ப்பிக்கிறார்.

பாசிலும் பரிணாமமும்

திரு. சி. வேலாயுதம், M. A., L. T.

●

உலகத்தில் எண்பத்தாறாயிரம் யோனிபேதங்கள் உண்டென்றும், அவைகள் இறைவன் படைப்பென்றும் நம் சமய நூல்கள் கூறுகின்றன. ஆனால், அறிவியல்கள் ஆய்ந்த முடிவுப்படி எல்லா உயிரினங்களும் ஒன்றிலிருந்தொன்றாகத் தோன்றிப் பிரிந்து பரிணமித்தனவாகும். உயிர் நூலுள் பரிணாமம் இருவகைத்தெனப் பிரிக்கப்படுகிறது. 1. உயிரினவாகக் கருதும் தாவர சங்கமங்கள் அனைத்தும் ஒரே மூலத்திலிருந்து தோன்றின. புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மிருகமாய் மனிதனுள் உயிர் பரிணமித்தது. 2. இப்படி எளிய உயிரினங்களிலிருந்து உயரிய உயிரினங்கள் பரிணமித்த காலத்திலேயே, ஒவ்வோர் இனமும் தன் அங்கத்திலும் ஆற்றலிலும் சிறப்புற்று மேனிலை அடைந்து வந்தது. பரிணாமத்தின் போக்கை ஒரு மரத்தின் வளர்ச்சிக்கு உருவகப்படுத்தினால், வேரிலிருந்து மரம் மேலெழுந்து வளர்ந்துகொண்டே போவது புல்லாகிப் பூடாய் மனிதனான போக்கைக் குறிக்கும். கிளைகள் பலவும் சிறு கிளைகளோடு தழைத்திடுதல் யானை, குதிரை, நாய் முதலிய தத்தமது சிறப்பியலில் முன்னேறியதைக் குறிக்கும்.

இவ்விருவகை முன்னேற்றத்துக்கும் பாசில்களில் ஆதாரம் காண்கிறோம். பரிணாம உயிர் நூலுக்கு (Evolutionary Biology) ஏடுகளாக உள்ளவை படிவுப்பாறைகள் (Sedimentary rocks). அவ்வேடுகளின் எழுத்துக்கள்தான் பாசில்கள். முன்னிதழில் கண்டபடி படிவுப்பாறைகளில் பாசில்கள் இயற்கையாகவே போற்றப்பட்டு நமக்குப் பூர்வீகத்தைப் புலப்படுத்துகின்றன. மிகப் பழைய படிவுப்பாறைகளில் மறைந்தொழிந்த பூர்வீக உயிரினங்களின் பாசில்களும், பிற்காலத்தில் ஆக்கப்பட்ட படிவுப்பாறைகளில் பிற்காலத்திய உயிரினங்களின் பாசில்களும் காணப்படுகின்றன. உலகில் பல இடங்களில் படிவுப்பாறைகளில் பாசில்கள் கண்டெடுத்திருக்கிறார்கள். ஓரிடத்தில் காணப்பட்ட பாசில்களே மற்றோரிடத்தில் காணப்படலாம். அல்லது வேறுவகைப் பாசில்கள் காணப்படலாம். இவைகளிடையே உள்ள தொடர்பு என்ன? எப்படிக் கண்டுபிடிப்பது? — என்பது பாசில் ஆராய்ச்சியின் முதல் சிக்கல்.

இதற்குப் பூவியல் ஆராய்ச்சி நன்கு உதவியிருக்கிறது. ஆற்றாலோ காற்றாலோ தாங்கி வரப்பெற்ற மண், மேன்மேலும் படிந்து நாளடைவில் உறுதிப்படுவதே படிவுப்பாறையாகும். பல யுகங்களில் படிந்த மண் பலதிறப்பட்டதாக இருக்கும். அம்மண்ணுள் அக்

காலத்தி லிருந்த உயிரினங்களின் எச்சங்கள் சிக்குண்டு இருக்கும். இன்று நாம் படிவுப்பாறைகளை ஆயும் போது பல மண் எடுகளும் வரிவரியாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். ஒவ்வொரு வித மண்ணமைப்புக்கும் தனித்தனி உரிமையான பாசில் வகை உண்டென்பதையும் காண்கிறோம். கீழ் எடுகள் முன் அமைந்தவை, மேல் எடுகள் பின் அமைந்தவை என்பதில் ஐயம் இல்லை. அப்படியே பாசில்களும்.

ஆனால், இந்த மண் எடுகளின் முறை பல இடங்களிலும் ஒரேவிதமாக இருப்பதில்லை. சில இடங்களில் ஒருசில எடுகளே கிடைக்கின்றன. மற்றோரிடத்தில் இன்னும் அதிக எடுகள் கிடைக்கின்றன. ஆனால், எடுகளின் முறை மாறுபட்டிருக்கின்றது. உதாரணமாக ஓரிடத்தில் முதற் படத்தில் காட்டியபடியும் மற்றோரிடத்தில் இரண்டாம் படத்தில் காட்டியபடியும் எடுகள் அமைந்திருப்பதாக வைத்துக்கொள்வோம்.

I



II



இரண்டையும் ஒப்புநோக்கின் (1) ங ஞ எடுகளுக்கிடையில் ச என்பதொன்றுண்டு என்பதும், (2) ட வுக்கு மேலும் எடுகள் உண்டென்பதும், (3) எடுகளின் அடுக்குமுறைமை க, ங, ச, ஞ, ட, ண என்றும் புலப்படுகிறது. முதலிடத்தில் ங எட்டுமண் படிந்தபின் ச எட்டுமண் படிந்திருக்கலாம். ஆனால், இடம் கடலோரமா யிருந்திருப்பின் கடல் நீரோட்டங்கள் அடித்துக் கொண்டு போயிருக்கலாம். அல்லது ச மண் படிந்தபின், அப்பகுதி நீருக்கு மேல் எழுந்து அரிப்புண்டபின், மீண்டும் நீருள் அமிழ்ந்தோ அன்றியோ ஞ எட்டுமண் படிந்திருக்கலாம்.

இதனால் அறியக்கிடப்பது என்னவெனில், பாசில்களின் தொடர்பை முடிவு செய்யுமுன் உலகில் பல இடங்களிலும் மண் படிந்த கிரமத்தையும் அவைகளுக்குரிய பாசில்களையும் ஆராய வேண்டும் என்பதே.

இப்படி எடுகளை முறைப்படுத்திவிட்டாலும் பாசில் மொழியைப் படிப்பது எளிதல்ல. (1) ஓர் இடத்தில் மண் வெகு தடிப்பாகப் படிந்திருப்பினும், அதன் தன்மையில் திடீரென மாறுதல் ஏற்பட்டு, எட்டுக்கு எடு அசம்பாவிதமான பாசில்கள் காணப்படலாம். ஆற்றோடு செல்லும் மண் கடலுள்

புகும்போது, படிவு பலவிதமாக ஏற்படுகிறது. நுண் அணுக்களும் மென் மணலும் கடலுள் வெகுதூரம் சென்று அமைதியான இடத்தில் படிகின்றன. பருமணல்கள் கடலோரத்திலேயே படிகின்றன. கடலோரத்திலே முதலில் படிந்தது நுண் மண்ணும் பின் பெரு மணலாயும் இருக்கும். கீழே படிந்தது களிமண்ணாகவும் மேலேநின்றது மண் பாறையாகவும் மாறும். இம் மாற்றத்துக்கேற்ப அவைகளில் வாழ்கின்ற உயிரினமும் மாறும், பாசிலும் மாறும். மண் தன்மையில் மாற்றம் விரைவில் நேர்ந்திருப்பின், பாசில்களில் பரிணாமத்தின் படிகளைக் காண இயலாது.

(2) மலைகள் நிறைந்த பிரதேசங்களில் ஏடுகளின் உண்மைக் கிரமத்தை அறிவது கடினம். பூகம்ப நிகழ்ச்சியின்போது ஏடுகள் பல வகையிலும் சீர்கேடுறும். மேல்நோக்கியும் கீழ்நோக்கியும் வளையும், முறியும், ஒன்றின்மேல் ஒன்றாக ஏறி நிற்கும்; சிலஇடங்களில் பூமிக்குள் அழுந்திப் படுகையாகும். இந் நிகழ்ச்சிகளால் பல ஏடுகளில் பாசில்கள் சிதைந்துவிடலாம்.

(3) சிலஇடங்களில் ஏடுகளின் மீது மேன்மேலும் மண்படிந்து பளு ஏறியதால், உள்ளிட்ட பாசில்கள் உருவழிந்திருக்கலாம்.

(4) சில சமயங்களில் பூமியின் கர்ப்பத்தி லிருந்து மேலெழும் நெருப்புக் குழம்புகளோடு தொடர்பு ஏற்பட்டுப் பாசில்கள் கருகிப் போகலாம்; அல்லது அழிந்தே போயிருக்கலாம். பாறை முழுதுமேகூட வெப்பத்தால் உரு மாறுவதுண்டு. இவைகளை உருமாறிய பாறை (Metamorphic rock) என்பர்.

(5) நம் பாசில் – எழுத்து நூலில் மிகவும் முறைபாடுடைய பகுதி ஆரம்பத்தில்தான். பூமியின் ஆதி பருவத்தில் மழை, காற்று, பனி முதலியவற்றினால் அரிப்பு வேலை மும்முரமாக நடந்து வந்தது. பல்லாயிரம் அடி உயரமுள்ள மலைகளே அரிப்புண்டு மறைந்தன வென்றால் பழங்கால எளிய பாசில்களின் கதி என்ன? ஆயினும் அரிப்புக் குறைவான பகுதிகளும் உலகில் உண்டாகையால், அங்குக் கிடைத்த பாசில்கள் நமக்கு ஆரம்பப் பகுதியை விளக்க உதவியாக இருக்கின்றன.

(6) பூர்வ காலங்களிலிருந்த கோடிக் கணக்கான உயிரினங்களின் எச்சம் அவ்வளவும் கிடைத்துள்ளன என்று கூற வியலாது. எச்சங்கள் போற்றப் பெறுவதற்கு வேண்டிய வசதிகள் எல்லா இடத்திலும் காலத்திலும் இருந்திருக்க முடியுமா? மடியும் பல்லாயிரத்தில் ஒன்றிரண்டின் உடல்தான் பாசிலாக நிற்கும். பெரும்பாலான அழுகி மறைவதே இயற்கை. ஆயினும் கிடைத்துள்ள பாசில்களைக் கொண்டே பரிணாமம் உண்மையென்பதை நிறுவ முடியும்.

புத்துருப்படுத்தல்.

இப்படிப் பலவகையிலும் முறைபாடு ஏற்படக்கூடிய பாசில்களைக் கொண்டு பாசில் ஆராய்ச்சியாளர்கள் உயிர்த்தோற்ற வளர்ச்சியை நிர்ணயித்து உலகுக்கு உதவி யுள்ளார்கள். பொதுவாகப் பரிணாமத்தால் உயிரினங்கள் மலிந்தன என்று கூறுவதோடு நின்றுவிடாமல், பாசில்களைக் கொண்டு அவ்வக் காலத்திய தாவரங்களையும் பிராணிகளையும் உருவப்படுத்தி, நம் கண்முன் காட்சிச் சாலையில் நிறுத்தி யுள்ளார்கள். நாமே அவைகளை ஒப்பு நோக்கி, பரிணாமத்தின் உண்மையை உணரலாம்.

முன்னிதழில் கூறியபடி, மிருதுவான பாகங்கள் அழிந்துபடுவதால் பாசிலாக நமக்குக் கிடைப்பன பெரும்பாலும் எலும்புபோன்ற கடினபாகங்களே. ஒரு பிராணியின் கடின பாகங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் கிடைப்பதில்லை. ஏனெனில், அதை

அடித்துத் தின்ற மாமிசபட்சணி எலும்புகளைப் பல இடங்களில் சிதற விட்டிருக்கலாம். எலும்புகள் ஒரே இடத்தில் விடப்பட்டிருந்தாலும், சில பகுதிகள் இயற்கையால் சிதைபட்டிருக்கலாம். ஆகவே, நமக்குக் கிடைத்துள்ள எலும்புகளைக் கொண்டு அந்தப் பூர்வீகப் பிராணி எப்படி இருந்தது என்று உருவப்படுத்தவேண்டி இருக்கிறது.

ஒரு பிராணியின் உடற்கூடு கிடைத்தால் அதிலுள்ள குறைகளை நிரப்புவது எப்படி? ஆதியில் உருப்படுத்தும் வேலையில் ஈடுபட்ட ஆராய்ச்சியாளர்கள் பெரிதும் கற்பனையையே கையாளவேண்டிய நிலையி லிருந்தனர். அக்காலத்தில் உடற் கூறியலும் (Anatomy), இயற்கை உருவ ஒப்பியலும் (Comparative morphology) இன்றுபோல் முதிர்ந்த நிலையில் இல்லை. ஜர்மனியில் 1663ல் கூரிக் என்பவர் தலையில் ஒரே கொம்புடைய "ஒற்றைக் கொம்பி" (unicorn) ஒன்றை உருப்படுத்தினார். அதன் கொம்பாக அவர் வைத்திருந்தது ஒரு யானையின் தந்தமே என்று பின்னால் தெரியவந்தது. இந்தக் குற்றத்தை அவர் அறிந்து செய்யவில்லை. அந்நாள் அறிவுநிலையில் அவ்வளவே கூடுமானதா யிருந்தது. இன்னும் பலர் பல விசித்திர உருவங்களை அமைத்தனர்.

ஆனால், தற்போது பல இயல்களும் முன்னேறி இருப்பதால் கற்பனையைக் கையாளவேண்டிய அவசியம் மிகவும் குறைந்துவிட்டது. உருப்படுத்தும் வேலை தக்க ஆதாரத்துடன் நடைபெறுகிறது. பாசில கூட்டில் உள்ள அநேக குறைகளை இயற்கை விதிகளைக் கொண்டே நீக்கலாம். சில உதாரணங்கள் தருவோம். (1) ஒரு பாசில் உருவின் வலக் காலில் ஒருபகுதி இல்லை என்று வைத்துக்கொள்வோம். உடனே இடக் காலைப் பார்த்தால் குறைபட்ட பகுதி இன்னமாதிரி இருக்கும் என்று அறியலா மல்லவா? இரண்டு கால்களின் அமைப்பு ஒரே மாதிரி இருப்பது இயற்கை விதியல்லவா? இது போலவே ஒரு பிராணியின் ஒரு பக்கம் ஒருவாறு கிடைக்கப் பெறின், எதிர்ப்புறமும் அதேபோ லிருக்கும் என்று முடிவுசெய்வது இயற்கை தானே? (2) ஒரே பிராணியின் எலும்புக் கூடுகளாக இருப்பின் பொருத்தி வைத்தால் எல்லாம் நன்கு பொருந்துமல்லவா? இப்பிராணியின் கிளை இனத்தைச் சேர்ந்த ஒருருவை முன்பே நிறுவி இருப்போமானால், இவ்விதம் பொருத்துவது இன்னும் எளிதாக முடியும். உடற்கூறு ஒப்பியல் அறிஞர்களுக்கு இது எளிய காரியம். நமக்குக் குயுக்தியாகத் தோன்றும் பொருத்தங்களை அவர்கள் தக்க காரணங்களோடு செய்கிறார்கள். பாலூட்டும் பிராணிகளின் கழுத்தில் எழு முதுகெலும்புத் துண்டுகள் இணைப்புற் றிருக்கின்றன என்று உடற்கூறு ஒப்பியல் தெரிவிக்கிறது. இதனால் ஏதோ ஒரு கூட்டில் நான்கு துண்டுகளே கிடைக்கப் பெறின், குறைபட்டவை மூன்று என்ற நிச்சயத்துடன் நிரப்பலாமல்லவா? (யானை, சிவிங்கி இவைகளின் கழுத்து நீளத்தில் வித்தியாசம் எலும்புத் துண்டுகளின் நீளத்தால்; எண்ணிக்கையால் அல்ல) ஆனால், இந்த எழெலும்பு விதி பறவைகளுக்கும் ஊர்வனவற்றிற்கும் பொருந்ாது. ஆகையால் இவைகளில் பாசிலில் குறைபா டிருந்தால் குறை எவ்வளவு என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. ஆயினும் வால்போன்ற பகுதிகளில் எலும்பு எண்ணிக்கை நியதி இல்லாவிடினும், இயற்கை அழகு விதியைக் கொண்டு குறையை நிரப்பலாம். உதாரணமாக, பாசில் வாலின் நடுப்பாகம் சிதைந்திருப்பின் அடி, முடிவு ஆகிய இரண்டு கூறுகளையும் நோக்கி, வால் ஒரே சீராகச் சிறுகிச் சென்று முடியும் என்ற விதியைக் கொண்டு, இடைப் பகுதியை நிரப்பலாம்.

இவ்விதமாக இயற்கை விதிகளைக் கொண்டே பாசில்களை உருப்படுத்து

கிறார்கள். ஆயினும் பார்ப்பவர்கள் மோசம் போகாதபடி, பாசில் பகுதியையும் செயற்கைப் பகுதியையும் பிரித்துக் காட்ட, குறை நிரப்புமிடங்களில் நிறம் வேறான சாந்தைப் பயன்படுத்துகின்றனர்.

எலும்புக் கூடுகளை மறைத்துச் சதை மூடிய இயற்கை உருவாகத் தோன்றும்படி உருப்படுத்துவதே மிகக் கடினமான காரியம். மெய்ந்நிலை குலையாத பாசில்கள் ஒவ்வோர் இனத்துக்கும் கிடைத்தாலன்றி, இவ்வித முழு உருவை நிர்மாணிக்க முடியாது. அநேக இனங்கள், பிரிவுகள், குடும்பங்கள், கணங்கள் அடியோடு அழிந்து விட்டிருக்கின்றன. அவைகளை நிர்மாணிக்கவே முடியாது. கிடைத்துள்ள பாசில்களுக்குச்சதையையும் தோலையும் போர்த்துவிட, அவைகளின் சந்ததி, சூழ்நிலை, கிளைக்குடும்பம் முதலியவற்றின் தன்மையை ஆய்ந்து, முடிவு செய்யவேண்டி யிருக்கிறது.

இவ்விதம் பல வகையான இடர்ப்பாடுகளைக் கடந்து பரிணாமம் என்ற உண்மையை உலகுக்கு மெய்ப்பித்துக் காட்டினர் பாசில் ஆராய்ச்சியாளர்கள். ஆனால், அவர்கள் மதாபிமானிகளின் வெறுப்புக்குப் பாத்திரரானார்கள். ஒரு காலத்தில் பாசில்களில் தொடர்பின்மை தோன்றியபோது, இவர்கள் பரிணாமக் கொள்கையைக் கேலி செய்தனர். கடவுள் ஒரு யுகத்தில் படைத்த வகைகளை அழித்து, மறு யுகத்தில் வேறு வகைகளைப் படைத்தாராதலால் இந்த விதத் தொடர்பின்மை அவசியம் இருக்கவே செய்யும் என்பது அவர்களது சித்தாந்தம். பாசில்கள் சமய நூல்களையே உறுதிப்படுத்துகின்றன என்று பறைசாற்றினர். ஆயினும் ஆராய்ச்சியாளர்கள் நெஞ்சங் கலங்காது உலகெலாம் தேடி அறுபட்ட தொடரைப் பூர்த்தி செய்யும் பாசில்களைக் கண்டு பிடித்துத் தமது பரிணாமக் கொள்கையையே நிலைநாட்டினர். சார்லஸ் டார்வின் என்பவர்தான் பாசில்களைப் பல்லாண்டு ஆய்ந்து பரிணாமக் கொள்கையைக் கோவையாக விளம்பி விளக்கம் செய்து "இனங்களின் தோற்றம்" என்ற நூலை 1559ல் வெளியிட்டார். இந்த நூலே மனிதனின் அறிவில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கிய நூல். எதிர்ப்புக்கள் அதிகமாக இருந்த போதிலும், பின்னோர் ஆராய்ச்சிகளும் அவரது முடிபுகளையே உறுதிப் படுத்தி விட்டன.

பரிணாமக் கொள்கையை ஒப்புக் கொள்வோமானால் பரிணாமம் கீழ்க் கண்ட முறையில் நிகழ்ந்திருக்க வேண்டும். உயிரினம் ஒன்றுமே இல்லாத காலம் ஒன்றிருந்தது. உயிர்தோன்றிய பின் நடந்த காலத்தைவிட அது நீண்டது. இற்றைக்குச் சுமார் 200 கோடி ஆண்டுகளாவது ஆகி இருக்கும் உலகம் உருப்பெற்று என்பது ஒரு முடிபு. இதை ஏற்போமானால் உருப்பெற்றபின் 100 கோடி ஆண்டுகளுக்குப் பூமியில் உயிரென்ற ஒன்றே கிடையாது. பின் வந்தது உயிர்த் தோற்றக் காலம். இது 50 கோடி ஆண்டுகளை விழுங்கியது. இதன் பின் வந்தது பழைய உயிரினக் காலம். இந்தக் கால முதல்தான் நமக்குப் பாசில் வரலாறு செம்மையாகக் கிடைத்துள்ளது. இது 25 கோடி ஆண்டுகளுக்குமேல் விழுங்கியது. இந்தக் காலத்தில் நீர்வாழ் வகைகள்தான் மிகுதியாக இருந்தன. நெடுங் காலம் வரையில் நிலத்தில் தாவரங்கள் கூட இருந்தனவாகத் தெரியவில்லை. பின் நீரினத்தி லிருந்து காற்றைச் சுவாசிக்கக்கூடியன தோன்றிப் பின் நிலத்தில் வாழக் கூடிய தன்மையைப் பெற்றன. வெகுகாலம் முதுகெலும் பில்லாத பிராணிகளே இருந்தன. இவ்வகை எலும்புடன் முதலில் தோன்றியது ஒருவகை மீன் இனம். இதன்பின் வந்தது இடை உயிரினக் காலம். இது இன்றைக்குப் பதினைந்து கோடி ஆண்டுகள் வரையில் நீடித்தது. இதன் ஆரம்பத்தில் ஈரியல் வாழ்வின (amphibians) பரிணமித்து, அவைகளி

லிருந்து பூர்விக ஊர்வன தோன்றின. இவைகளில் விசித்திரமானவை பறக்க அறியாத, பல்லுடைய பறவைகள். இவைகளினின்றும் தற்காலப் பறவை பரிணமித்தது. பாலூட்டும் ஊர்வன பறவைகளுக்கு முன்பே தோன்றி, அவைகளிலிருந்து நீண்ட கால பரிணமத்தின் முடிவில் சூல் ஒட்டும் (placental) பாலூட்டு மிருகங்கள் வந்தன. இற்றைக்கு ஆறு எழுகோடி ஆண்டுகளுக்கு முன்னர்த்தான் தற்கால யானை, குதிரை, குரங்கு முதலியவற்றின் விசித்திர மூதாதைகள் தோன்றின. குரங்கின் இனமாகிய லெமூரிலிருந்து தற்காலக் குரங்கும், பின் வாலில்லாக்குரங்கும், பின்னர் அதை ஒத்த மனிதனும், பின் தற்கால மனிதனும் பரிணமித்தனர். மிருகம் மனிதனாயிற்று. அது அவனாயிற்று.

இந்த வரலாறு, சிக்கல்களை எல்லாம் ஒதுக்கிவைத்து, பொழிப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விளக்கமாகப் பின்னர்க் காண்போம். இங்குக் கூறியபடி பல கோடி ஆண்டுகளாக உயிர் பரிணமித்து வந்திருக்கிறதென்பதை மனக் கண்ணால் பார்ப்பது அரிதே. நேற்று, முந்தியநாள் என்ற கால அளவுகளே நம் மனத்தில் நன்கு பதிவதில்லை. பல கோடி ஆண்டுகளைப் பற்றிப் பேசுவானேன்? ஆயினும் ஓர் உதாரணத்தால் உலகம் தோன்றியதுமுதல் நடந்த பரிணம வரலாற்றை மனத்தில் பதிய வைக்கலாம். பூமி உருண்டையில் கல்லும் கடலும் தோன்றிய காலம் தொட்டு நிகழ்ந்த வரலாற்றைத் திரைப் படமாகப் பிடித்திருப்பதாக வைத்துக் கொள்வோம். இன்று இரவு 9 மணிக்குப் படம் ஆரம்பமானால், உயிர் வர்க்கமே இல்லாத காலத்தின் வரலாறு நாளைக் காலை 9 மணி வரையில் காட்டப்படும். தாவர சங்கமப் பொருளில் ஒன்றும் இருக்காது. பெருமழையும், வெள்ளமும் காற்றும் பனியும், பூகம்பமும், எரிமலைகளும் தங்கள் வேலைகளை இடையூறின்றி நடத்திவரும். இக் கோரக் காட்சி முடிந்ததும், கொஞ்சம் கொஞ்சமாக நீர்வாழ் தாவரமும், பிராணியும், நிலம்வாழ் தாவரமும் பிராணியும் தோன்றிப் பெருகும். நாளை மாலை $5\frac{1}{4}$ மணிக்குத்தான் குட்டியிட்டுப் பாலூட்டும் பிராணிகளின் காலத்தை அடைவோம். அவைகள் பல மாறுதல்கள் அடைந்து சிறந்து சில குரங்காகி மனிதனைத் தோன்ற ஆரம்பிக்கும் போது மணியைப் பார்த்தால் ஆட்டம் முடிய இன்னும் பதினறே நிமிடங்கள்தான் இருக்கின்றன என்று தெரியும். மனிதன் மிருக நிலை கடந்து திருந்தி இந்துசமவெளி நாகரிக நிலைமை அடையும்போது ஆட்டம் முடியக் கால் செகண்டுதான் இருக்கும். அன்று முதல் இன்றுவரை நடந்த ஐயாயிரம் ஆண்டுகளின் நிகழ்ச்சி கால்செகண்டில் ($1\frac{1}{2}$ அடி பிலிமில்) முடிந்து விடும். ஆகவே, நாம் அறிந்த மனித வரலாறு எவ்வளவு அற்பமானது என்பது புலப்படுகிறது.

இது நிற்க. பரிணமம் என்ற ஒன்று நிகழக் காரணமென்ன? அது எந்த வகையில் தொன்றுதொட்டுப் பல்லினங்களிலும் நிலைபெற்று வருகிறது— என்ற இருவினாக்கள் எழுகின்றன. இவைகளுக்கு விடை அடுத்த இதழில் காண்க.

●

"கலைக் கதிர்" (மாத வெளியீடு)

பயனுள்ள கட்டுரைகள்
சுவைமிக்க கதைகள்

தனிப் பிரதி 8 அணா ஆண்டுக் கட்டணம்: ரூ 6 தான்.

இது சென்ற இதழில் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி.

தமிழ்க் கவிதையின் எதிர்காலம்

திரு. ஆ. முத்துசிவன், B. A. (Hons.)

ஆங்கில எழுத்தாளரான திரு. சாக்வில் வெஸ்ட் (V. Sackville-West) என்பவர் அவர் நாட்டிலுள்ள முற்காலக் கவிஞர்களுக்கும் தற்காலக் கவிஞர்களுக்கும் உள்ள வேறுபாட்டை மிக நன்ருக எடுத்துக்காட்டியிருக்கிருர். அவருடைய கருத்துப்படி தற்காலக் கவிஞர்களிடம் ஒரு குறை இருக்கின்றதாம். அது என்னவென்ருல் attitude of soul இல்லையாம். தமிழில் ஓரளவு சொல்வதென்ருல் 'அகப்பார்வை' என்று சொல்லலாம். இக்குறையானது நமக்குப் பொருந்துமா என்பதைப் பார்க்க வேண்டும். வெள்ளைக்காரன் சொன்னதற்காக இல்லை, உண்மையிலேயே பொருந்துகிறதா என்பதைப் பார்க்கத்தான் வேண்டும்.

கண்ணைக் கொண்டும் கருத்தைக் கொண்டும் பார்ப்பது போன்று, அகத்தைக் கொண்டும், நமது கலைஞர்கள் பார்க்கின்ருர்களா என்பதை ஆராய்ந்து பார்ப்போம். ஏனென்ருல், அகத்தைக் கொண்டு பார்க்கும் பார்வையினுல்தான் பாவனை என்பதே உருவாகின்றது. அதுவே கவிஞனுடைய கவிதைக்குப் பொருளாக அமைகின்றது. கவிதையினுடைய கவர்ச்சியும் கவர்ச்சித் தளர்வும் அதைப் பொறுத்த விஷயங்களே.

தமிழ் நாட்டில் எழுந்துள்ள இருபதாம் நூற்ருண்டுக் கவிஞர்களுக்குள் ஒரு சிலரிடமே அதனை, அதாவது அகப்பார்வையை, நன்ருகக் காண முடிகிறது. அந்தக் காலத்தில் மக்கள் கவிஞனிடம் சென்ருர்கள். அவன் சொல்வதை வேதவாக்காக நம்பினுர்கள். அவனையே 'கண்ணுள்ளவன்' (seer) என்றும் கருதினுர்கள். இந்தக் காலத்திலோ கவிஞன் மக்களிடம் வருகின்ருன். மக்களுடைய இச்சை வெறுப்புக்களைத் தனக்குப் பொருளாக வைத்துக் கொள்கிருன். தன்னுடைய அகப்பார்வையைக் கொண்டு இச்சை வெறுப்புக்களை நிதானிப்பதெல்லாம் அத்தனை அழுத்தமாக இல்லை. மேதை வளம் படைத்த காரணத்தினுல் அவனுல் பார்க்க முடியும். ஆயினும் மக்கள் விடுகிருர்களில்லை.

அகப்பார்வை என்பது சில கவிஞர்களுக்கு இளமையிலேயே வாய்த்து விடலாம். சிலருக்கு நாளாவட்டத்தில் உருவாகலாம். பெரும்பாலும் நாளாவட்டத்தில்தான் உருவாகும். முளையிலே திருகுவதைப் போல அது நன்ருக வளர்ந்து முதிர்வதற்குள்ளேயே மக்கள் கசக்கி விடுகிருர்கள். தங்க முட்டையிட்ட வாத்தைக் கொன்ற கதையைத்தான் இந்த இடத்தில் நினைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, கலைஞனுடைய அகப்பார்வையானது நசித்துப் போய்விடுகிறது. மக்களுடைய இச்சை வெறுப்பினுக்கு ஏற்றதான பிரசார வகைகளைப் பாடும் கீழ்நிலைக்கு இறங்கி விடுகிருன். இன்னும் கொஞ்ச காலத்திற்கு இத்தகைய நிலை இருந்துதான் தீரும்.

ஒரு வேளை இத்தகைய குறைபாடு நமது நாட்டில்தான் இருக்கிறதோ என்று எண்ணிவிட வேண்டாம். ரஷ்யாவைப் பார்ப்போம். கம்யூனிசக் கவிஞரான மெயாக்கோவஸ்கி (Maiakovski) பின்வருமாறு சொல்லுகிருர். அவரிடத்தில் (word workshop) பத இயந்திரசாலை இருக்கிறதாம்.

ஒவ்வொரு புரட்சிக்காரனுக்கும் உடனேயும் சுமுகமாகவும் (Promptly and on easy terms) சரக்குகள் அனுப்பிக் கொடுக்கப்படுமாம். நாமும் கவிஞர்களை வெறும்பத இயந்திரசாலைக ளாக மாற்றவே முயல்கிறோம் என்றால் அது புனைந்துரையாகி விடாது. ஒரு சிலர் அகப்பட்டுக் கொண்டனர்.

என்னிடத்திலேயே ஒருவர் பின் வருமாறு சொன்னார். "சார், நீங்கள் ஒரு மெட்டைச் சொல்லுங்கள். என் னுடைய கவிஞர் நண்பரை அதற்கேற்ற படி பாடித்தரச் சொல்கிறேன்" என்றார். கேவலம், இத்தனை நிலைக்கு, அதாவது மக்களுடைய இச்சைக்குத் தாளமிடும் ஈன நிலைக்குக் கவிஞர்கள் வருவார்களே யானல், கவிதையின் வீரிய வளர்ச்சி தடைப்படத்தான் செய்யும். இத் தகைய நிலையானது நம் நாட்டில் இன்னும் கொஞ்சகாலம் வரை நீடிக்கக் கூடும். அதெல்லாம் காலப் போக் கினல் புகுந்த இன்றியமையா நெருக் கடி.

இக்காலம் தத்துவ அவதார காலம். இராமாவதாரம், கிருஷ்ணவதாரம் என் பதான அவதாரங்களைப் போன்று இப் பொழுது கம்யூனிசம், சோஷலிஸம் இன்னும் இவை போன்ற ஒரு சில தத்துவங்களின் அவதார காலம்.

"உதய வெள்ளத்து உச்சியில் நீந்தும்
வண்ணமேகமாய் வானில் பாயவும்,
வானம் பாடியாய்க் கானம் பாடவும்,
தளைகள் நீங்கித் தாவிப்பறக்கவும்,
மீனின விளக்காய் மினுக்கிச்
சிரிக்கவும்,
திங்கள் என்னும் தெப்பத்து
உலாவவும்,
வானவில் பாலத்து வான்கடல்
தாண்டவும்" இப்போது

ஆசை கொள்ள நேரமில்லை. தத்துவங் களைப்பற்றிய பிரசாரமே முக்கியத் திருப்பணியாகக் கருதப்படுகிறது. கால வெள்ளத்தை எப்படி எதிர்ப்பது? பிரசாரம் என்று வரும்போது அகப் பார்வையின் எல்லை அருகும். அறிவுப் பார்வையின் எல்லை பெருகும். கண்ட தை விடுத்து, கொண்டதையே எங்கும் பறையடிக்க வேண்டும். கட்சிகள், கூட்டங்கள் எல்லாம் திரண்டுவிடும். கலையை அவைகளிடம் அடகு வைத் துத்தான் தீரவேண்டும். அப் பொழுதுதான் வாழ்வு. அப்பொழுது தான் லாபம். வித்யா மண்டலத்தி லிருந்த கலை வியாபார மண்டலத்திற்கு வந்துவிட வேண்டும். ஆஸ்கார் ஒயில்ட் (Oscar Wilde) இன்னும் அவர் வழி நின்று சிந்திக்கின்ற அறிஞர் கள் திகைக்கலாம். ஆயினும் காலப் போக்கை எப்படிக் கயிறுகொண்டு கட்டுவது?

தலைவர்கள் என்ற தனி வருணம் உதிக்கின்றது. அவர்களுடைய கட்டை வேதாந்தமோ, நெட்டைவேதாந்தமோ, குள்ளவேதாந்தமோ, வெள்ளை வேதாந் தமோ, அதுதான் மக்களுடைய வேதாந்தம். இந்த இடத்தில மகா அலெக்சாந்தரைப் பற்றிய நினைவு வருகிறது.

தீப்ஸ் (Thebes) என்ற இடத்தை நெருப்புக்கு இரையாக்கி வருகின்றான். தீ எங்கும் பரவுகிறது. எரித்துச் சாம்பராக்குகிறது. ஒரு வீட்டை மட்டிலும் காப்பாற்றும்படி ஆணையிடு கிறான், அதைமட்டிலும் எதற்காகக் காப்பாற்றச் சொன்னன் என்றால், அது பிண்டார் (Pindar) என்ற கவி ஞனுடைய வீடு. அப்படியான முறை யில் இந்தக் காலத்திலுள்ள தலைவர்கள் நடந்து கொள்வார்களா என்பதை வாசகர்கள் சமகால சரித்திரத்தைக் கொண்டு தீர்மானித்துக் கொள்ளலாம். கட்சி வேதாந்தமே கலைஞனின் வேதாந் தம். இது தற்காலத்தில் காணப்படு வது. ஆகவே தனித்ததான அகப் பார்வையை முழு உரிமையுடன் கலை

ஞானல் வளர்த்துக் கொள்ள முடியாது. இன்னும் சிறிது காலத்திற் கெல்லாம், அதாவது எந்தத் தத்துவத்தின் கையா னது மேலோங்கி, அதுவே எலலா ருடைய மதமும் என்ருகிறதோ அந் தக் காலம்வரை, பிரசாரவகையான கவிதைகளுக்கே செல்வாக்கு அதிகம் இருக்கும்.

மாதிரிக்கு இரண்டொரு பாடல் களைப் பார்ப்போம். சைவத்தையும் வைணவத்தையும் எத்தனை ஆர்வத்து டன் பக்தர்கள் பாடி மகிழ்கிருர்களோ அத்தனை ஆர்வத்துடன் நவீன அரசி யல், பொருளாதாரத் தத்துவங்களைப் பற்றிக் கலைஞர்கள் பாடுகின்ருர்கள்.

''மானம் அழிப்பது பாஸிஸம்-வாழ் வின்
மகிமை அழிப்பது பாஸிஸம்;
ஊனம் உற்றது பாஸிஸம்-உலகின்
உளுத்த கொள்கைகள் பாஸிஸம்''

என்பதாக ஓர் கவிஞர், திரு. கோலப்பன் என்பவர், பாடுகிருர். இன்னும் மே தினம்பற்றி அவர் பாடி யிருப்பதைப் பார்ப்போம்.

ரத்தம விட்ட மேதினம்
ரத்தம் விட்ட மேதினம்
நித்த நித்தம் வருகவே
நேர்மை வாழ வாழவே
கண் பிதுங்கி, மனம் பிதுங்கி,
கவலை தன்னில் மூழ்கிடும்
எண்ணிலாத ஏழை மக்கள்
ஏழ்மை போக்கும் மேதினம்
பாஸிஸத்தை ஓட்டிடும்
பான்மை கொண்ட மேதினம்
தேசம் காக்க வருகுது
தீரச்பதம் பூணுவோம்.
பஞ்சம் என்ற கழுவிலே
பாதம் துடித்திடக்
கொஞ்ச மேனும் ஈரமற்ற
கொடியர் போல வாழ்வதோ

இம்மாதிரியான பிரசாரப் பாடல் களுக் கேற்ற காலம் இந்தக் காலம். ஏனென்ருல் காலநிலை அப்படி இருக் கிறது. அந்தக் காலத்திலுள்ள கவி ஞர்களைப் போன்று நிரந்தரமான இலட்சியங்களையும், நீதிகளையும் இயற் கையின் சௌந்தர்ய சீலங்களையும் பற்றிப் பாடாது இவ்வாறு நிலையில்லா நிலையுடையவைகளைப்பற்றிப் பாடுவது பொருந்துமா என்று யாரேனும் கேட் கத் துணிந்தால், அக்கேள்வியையும் எதிர்பார்த்துக் கூறியது போன்றே, தற்காலக் கலைமரபு எதுவாக இருக்க வேண்டும் என்பதை அதே ஆசிரியர் காட்டுகிருர். கவிதையைக் கண்டனம் செய்வதன் மூலம் அவருடைய உள்ளக் கிடக்கை வெளியாகிறது.

'கடவுளரைப் பாடுகின்ற கவிதைத் தாயே,
காதலரைப் போற்றுகின்ற கவிதைத் தாயே,
கடலையும் பேர் அலைகளையும் பாடு வாயே
காடுகள் சூழ் மலைகளையும் பாடு வாயே

* * * * * *

கல்லையும் புல்லையும் பாடினுய்-உன்
கடவுளைப் பாடினுய்-மக்களைக்
கொல்லும் அரக்கனைச் சபித்திலை-உயிர்
கொடுத்தவர் தமக்குநீ இரங்கலை
மண்ணையும் பெண்ணையும் பாடினுய் -உன்
மாதவன் தன்னையும் பாடினுய்
உண்ணும் சோற்றை அளிப்பவர்-உழவர்க்(கு)
உற்ற கதியை நீ அறிந்திலை''

* * * * * *

ஏழைகளை அழிக்கவரும் அரக்கர் கூட்டம்
எரிகவென எரிகவெனப் பாடு வாயோ-நம்
தோழர்களை அழிக்கவரும் அரக்கர் கூட்டம்
தொலைகவெனத் தொலைகவெனப் பாடுவாயோ''

என்று இத்தகைய போக்கில் அமை கின்றது நிந்தனை. இம் மட்டோடு நின்று விடவில்லை. இன்னும் எத்தனை யோ பேர் கஞ்சி மான்மியத்தைப் பாடிக்

கொண்டு கலை ஆக்கத்தைப் புறக்கணித் துவருகிறார்கள். அவர்களைக் குறை கூறுவது சிலாக்கிய மாகாது. அவர்கள் அத்தனை பேரும் கால தத்துவத்தின் சின்னங்கள். அவர்கள் கடமையை அந்தப் போக்கில்தான் ஆற்றுவார்கள்.

அல்லாமலும் இன்னொரு துடியான அம்சமும் இப்பொழுது கலை உலகில் பேராதிக்கம் செலுத்தி வருகின்றது. அதுதான் விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக வந்த பகுத்தறிவு மோகம். ஆத் மீகமான நம்பிக்கையில் திளைத்து நிற் கும் அகத்தின் போக்கு வேறு. பகுத் தறிவில் திளைத்து நிற்கும் அகத்தின் போக்கு வேறு. முன்னையது, பொரு ளின் அழகிலே திளைக்கும். பின்னை யது, பொருளின் அமைப்பிலே திளைக் கும். முன்னையது, எதையும் உணர்ந்து காணும். பின்னையது, எதையும் உற்று நோக்கும். முன்னையது, ரசம் என்னும் பரப்பிலே படரும். பின்னை யது, அறிவென்னும் தடத்திலே ஊரும். இன்னும், முன்னையது, எதனையும் அகத்தால் அளக்கும். பின்னையது எதனையும் அறிவால் அளக்கும்.

பகுத்தறிவின் காரணத்தால் இப் பொழுது கவிதையானது எத்தகைய போக்கை மேற்கொள்கிறது என்பதை ஓர் உதாரணத்தின் மூலம் பார்ப்போம்.

சூரிய உதயத்தை எடுத்துக்கொள் வோம். கம்பர் அதை எவ்வாறு வர் ணிக்கிறார், பாரதியார் எவ்வாறு வர் ணிக்கிறார், பாரதிதாசன் எவ்வாறு வர்ணிக்கிறார் என்பதை இப்பொழுது பார்க்கவேண்டும்.

சிவபெருமானுடைய திருநடக் காட்சி யாகவே தோன்றுகிறது கம்பருக்கு.

''எண்ணரிய மறையினொடும் கின்ன ரர்கள் இசைபாட, உலகம் ஏத்த, விண்ணவரும், முனிவர்களும், வேதியரும், கரம்குவிப்ப வேலை என்னும் மண்ணும் அணி முழவதிர வான ரங்கில் நடம்புரிவாள் இரவியான கண்ணுதல் வானவன் கனகச் சடை விரிந்தால் எனவிரிந்த கதிர்க ளெல்லாம்''

முற்ற முழுக்கிலும் பகுத்தறிவின் எல்லையைத் தாண்டி நிற்கும் பாவனை இயல்பிலும் தெய்வ நம்பிக்கையிலும் தோய்ந்திருக்கும் உள்ளம் கம்பருடைய உள்ளம். ஆகவே, சூரியனின் தோற்றத்தை அந்த உள்ளம் அவ்வாறு பாவிக்கின்றது. மற்றும் அவ்வாறு பாவனைசெய்து திளைப்பதில்தான் அதற்குத் திருப்தியும் ஏற்படுகிறது. ஏன் அவ்வாறு பாவிக்கவேண்டும் என்றால் அதெல்லாம் அகப்பார்வையி னுடைய தனி இயல்பு. மற்றும் அதற் கென்று வாய்த்துள்ள தனிஉரிமை.

இனி, பாரதியாருடைய வர்ண னையைப் பார்ப்போம்.

''நங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி,
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ''

என்கிறார். இந்த அடிகளில் தேக்கப் பெற்றிருக்கும் பாவனையானது முற்ற முழுக்கிலும் வெளிஅழகில் தோய்ந்து கிடந்த ஈடுபட்டால் எழுந்ததாகும்.

இனி, பாரதிதாசனுடைய வர்ண னையைப் பார்ப்போம்.

''ஒளிசெய்தான் கதிர்க் கோமான் வானகத்தில் மண்ணில்,
உயர் மலைகள், சோலை, நதி, இயற்கை எழில்கள் பார்,
களிசெய்தான் பெருமக்கள் உள் ளத்தில், அதனால்
கவிதைகள், கைத்தொழில்கள் என் னென்ன ஆக்கம்;
தெளிவளிக்க இருள்-கதவை உடைத் தெறிந்தான் பரிதி,
திசைமகளை அறிவுலகில் தழுவு கின்றார் மக்கள்;

ஒளியுலகின் ஆதிக்கம் காட்டு
கின்றான்; வானில்
உயர்கின்றான் உதய சூரியன்வாழ்க
நன்றே''

இப்பாடல் நன்றாக அமைந்திருக்கிறது. தெய்வச்சாயல் எதுவும் இதன்பால் கிடையாது. கற்பனை கலந்திருக்கிறது. ஆதிமுதல் அற்றம்வரை பாடலைப் பார்த்து வந்தால், எது பகுத்தறிவுக்கு ஒத்துவரக்கூடிய உண்மையோ அதனையே அழகுசெய்து தருகிறார் கவிஞர் என்பது தெரிகிறது.

முற்றமுழுக்கிலும் பகுத்தறிவையே நம்பிப் போகும் போது ஒரு சங்கடம் ஏற்படுகிறது. பாட்டிற்கு அறிவின் தீட்சண்யமும் வேண்டும். அதற்கும் மேலதாக அகத்தின் பாவனையும் வேண்டும். கருத்தைக் கருத்தாகத் தருவது போதாது. கருத்தை உணர்ச்சியாக்கித் தரவேண்டும். அறிவின் கை ஓங்கும் போது கருத்தானது அறிவொளி பெற்றே மினுங்கும். அகத்தின் கை ஓங்கும்போது கருத்தானது உணர்ச்சிப் பிழம்பாகி ஒளிரும். அறிவின் மாட்சிதான் கவிதையில் பிரதான அம்சம் என்பதில்லை. அகத்தின் அழுத்தமே கவிதையில் பிரதான அம்சம்.

"Poetry is not Truth nor Wisdom
But the rose upon Truth's lips
And the light in wisdom's eyes"

என்று மேதாவிகள் அழகாகக் கூறியுள்ளார்கள். "மெய்தான் கவிதையின்நோக்கம் என்பதில்லை. இன்னும் விவேக விளக்கந்தான் அதன் நோக்கம் என்பதும் இல்லை. மெய்யை அணிசெய்வது கவிதை. விவேகத்தை ஒளிசெய்வது கவிதை'' என்று ஓரளவு அதனை மொழிபெயர்க்கலாம்.

ஆகவே, முன்னர்க் கூறியபடி கவிதைக்கு அறிவின் தீட்சண்யம் மட்டிலும் போதாது. அகத்தின் அழுத்தமான பாவனையும் வேண்டும். இரண்டின் ரஞ்சகத்தில்தான் (Harmony) எழிலானது தங்கிநிற்கிறது.

பொதுவான அனுபவம் என்னவென்றால், பார்த்துத் தெரிவதனால் வரக்கூடிய இலாபத்தைவிட பாவித்துத் திளைப்பதனால் வரக்கூடிய இலாபம் அதிகமே. ஏனென்றால், பார்த்துத் தெரிவதென்பது ஓர் எல்லையில் நின்றுவிடுகிறது. ஆனால், பாவித்துத் திளைப்பதோ பரந்து விரிகிறது. பார்த்துத் தெரிவதனால் வரும் திருப்தி ஓரளவு. ஆனால், பாவித்துத் திளைப்பதனால வரும் திருப்தி அளவற்றது. இன்னும் பார்த்துத் தெரிவதென்பது படிப்படியாகச் சென்றடைவது. பாவித்து உணர்வதென்பது பறந்து பறந்து பற்றுவது. மற்றும் பார்த்துத் தெரிவதென்பது பலர்க்கும் இயலாது. ஆனால், பாவித்து உணர்வதென்பதோ சிலர்க்கே வாய்ப்பது.

கவிஞனிடம் நாம் அதிகமாக வாஞ்சை காட்டுவது அவன் வழங்குகின்ற ஞானக் குவியலுக்காக மட்டிலும் அன்று. எதைக் காட்டுகின்றானோ, அதனிடத்து, அவனுடைய அகப்பார்வையாகிய அழகு முத்திரையை இட்டுத் தருவதற்கும் ஆகும். அவனுடைய மேதையின் போக்கே தனி. அது, சென்று பெற்ற சிலமில்லை. வந்து வாய்த்த வரிசை. இன்னும் அது, அறிவால் பெற்ற திருவில்லை. அருளால் பெற்ற வரம். அதன் பயனாக, உள்ளது காணி என்றாலும் உணர்வது கோடியாக ஓங்கும்; பாய்ந்தது சிறிதென்றாலும் பாவிப்பது பெரிதாகப் படரும்.

இந்த இடத்தில் ஆங்கிலக் கவிஞராகிய வேர்ட்ஸ்வொர்த் (Wordsworth) என்பவருடைய கருத்தைத் தெரிவிப்பது மிகவும் பொருத்தமாக

இருக்கும். அவர் ஒரு பெண்ணைப் பார்த்து

"Yes Thou art fair; yet be not
moved to scorn the declaration
That sometimes I have loved
in Thee
My Fancy's own creation."

என்று கூறுகிறார்.

"பெண்ணே நீ அழகாக இருக்கின்றாய். ஆயினும் ஓர் வேண்டுகோள். சில வேளைகளில் நான் கற்பிதமாகக் காணும் எழிலையெல்லாம் உன்பால் பெய்து மகிழ்ந்ததுண்டு என்று சொன்னால் அதை வெறுத்துவிடாதே". இதனை இவ்வாறு மொழி பெயர்த்துக் கொள்ளலாம்.

அவர் பெண்ணுக்குச் சொன்னதைத் தான் நாம் பலருக்கும் சொல்ல வேண்டும். கவிஞன் என்பவன் கண்ணை மூடிக்கொண்டு கற்பனை செய்பவன், வானத்தை வில்லாக வளைப்பவன், மணலைக் கயிறாகத் திரிப்பவன்; இன்னும் புனைந்துரையிலும் மிகையுரையிலும் திளைப்பவன்; அவனுக்கும் அசலுக்கும் வெகுதூரம் என்று இவ்வாறெல்லாம் குறை கூறுகின்றவர்களுக்கு வேர்ட்ஸ்வொர்த் சொன்னதை நன்றாக எடுத்துச் சொல்லவேண்டும்.

கவிஞனுக்குக் கற்பிதமான அழகெல்லாம் பாவனை வளத்தால் உதிக்கின்றது. அதை அவனாலும் தடுக்க முடியாது. ஏனென்றால் "முன்னிக் கவிதை வெறி மூண்டு நனவழியும் போது" அவன் அவனாக இருப்பதில்லை. கர்த்தா நிலையிலிருந்து கருவி நிலைக்கு மாறிவிடுகிறான். கவிதா சக்தியே கர்த்தா நிலையை எய்துகிறது. அது பேசுகிறது. "He does not possess the Truth but is being possessed by the Truth" என்பது அறிஞர் வாக்கு. "உண்மையை அவன் பற்றி நிற்கவில்லை. உண்மை அவனைப் பற்றி நிற்கிறது" என்பது அதன் பொருள். அந்த நிலையில் இருக்கும் பொழுது ஆறெலாம் கங்கையாகவே தோன்றும். ஆழியும் கூறு பாற்கடலாகவே அமையும். இதெல்லாம் பாவனையால் அடையக்கூடிய பாக்கியம்.

பாவனை கனிய வேண்டுமென்றால் அகப்பார்வை அருகும், அறிவின் ஆட்சி பெருகும். இனித் தோன்றும் கவிஞர்களுக்கு அகப்பார்வையைவிட அறிவின் ஆட்சியே பெரிதாக அமையும். ஆகவே, அக்காலக் கவிஞர்களைப் போல் இக்காலத்திலும் இனி வருங் காலத்திலும் கவிஞர்கள் பாடுவது கொஞ்சம் அருமையாகத்தான் இருக்கும். இனியுள்ள காலம் பகுத்தறிவின் காலம். ஒவ்வொரு முயற்சியிலும் பகுத்தறிவின் முத்திரையே பாரித்துத் தோன்றும். அவ்வாறு ஆகும் போது கவிதையின் அளவு குறையத்தான் செய்யும். ஏனென்றால் அறிவானது எண்ணித்தான் எடுக்கும். ஆனால், அகமோ அள்ளி அணைக்கும். ஆகவே குறைந்து போவதில் வியப்பு எதுவும் இல்லை. பகுத்தறிவின் ஆட்சியோடு அரசியல், பொருளாதாரம் பற்றிய பிரசார காரியங்களும் நடைபெற்று வருவதால், பிரசார இனங்களும் தோன்றிக் கொண்டிருக்கும். ஒரு வேளை இன்னும் நானூறு அல்லது ஐந்நூறு ஆண்டுகளுக்குள் பகுத்தறிவிலேயே ஊறி ஊறி, பகுத்தறிவு மயமான பாவனையே நன்றாக வாய்த்துள்ள கவிஞன் ஒருவன் தோன்றலாம். அவனால் எத்தகைய சகாப்தம் உருவாகுமோ தெரியாது. பீரங்கிகள் மீதும் அணுக்குண்டு மீதும் பிள்ளைத் தமிழ், சிந்து முதலிய பிரபந்தங்களைப் பாடலாம். முற்றிலும் விஞ்ஞான மயமாகவும் இருக்கக்கூடும்.

இதுவரையிலும் விஷயத்தைப் பற்றிப் பார்த்து வந்தோம். இனி மிக மிகச் சுருக்கமாக வடிவத்தைப் பற்றியும் பார்த்து விடுவோம்.

ஏனென்றால், அதைப்பற்றியும் நன்றாகக் கவனிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

அந்தக் காலத்தில் தமிழுக்கும் வடமொழிக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அதன் பயனாக எத்தனையோ புது அம்சங்களெல்லாம் தோன்றின. அதே போன்று இந்தக் காலத்தில் ஆங்கிலத்தின் துணையினாலே உலக இலக்கியங்களோடு உறவாடும் உரிமைவாய்த்திருக்கிறது. இதனால் எத்தனையோ மாற்றங்கள் தலையெடுத்து வருகின்றன. பழைய மரபுகள் தேய்ந்து மறைகின்றன. புதிய மரபுகள் புகுந்து வளர்கின்றன. இப்பொழுது புது மரபுகளைக் கையாளுகின்ற பரிசோதனை நிலையில் (Experimental Stage) நம்மில் பலருடைய இலக்கிய முயற்சி இருந்து வருகின்றது. இச்சோதனை நிலையானது பண்பட வேண்டும். அதுவும் மக்களுடைய நடைப் புழக்கத்தில் இரண்டறக் கலக்கக்கூடிய அளவில் பண்பட வேண்டும். எப்படியிருந்தாலும் மேலைநாட்டுச் சரக்கு ஒட்டுச் சரக்கு. ஒட்டுச் சரக்கு எப்பொழுதும் விட்டுத்தான் காட்டும். காலப் போக்கில்தான் வேறுபாடு மறையவேண்டும். இனி முடிவுக்கு வரலாம்.

இப்பொழுது இருக்கிற நிலையைப் பார்த்தால் பின்வருமாறு ஜோசியம் கூறலாம்போலத் தோன்றுகிறது.

தமிழ்க் கவிதையின் எதிர்காலமானது தமிழ் வசனத்தின் எதிர்காலம் போன்று அத்தனை தாக்குடையதாக இருக்காது. தோன்றுகிற வகைகள் சற்றுக் குறைவாகவே தோன்றும். அவற்றில் பாவனை மணம் தளர்ந்து, பகுத்தறிவு மணமே பாரித்து நிற்கும். மற்றும் உண்மையை உணர்ந்த உணர்வினின்றும் தோன்றாது உண்மையை உணர்த்தும் ஊக்கத்தினின்றே பலவும் தோன்றக்கூடும். பிரசார ரகங்கள் மலியும். இன்னும், வடிவங்களில் பற்பல மாறுதல்கள் ஏற்படும்; வார்த்தைக் கலவையிலும் ஏற்படும். புதுப்புது உவமைகள் தோன்றும். புதுப்புதுப் உருவகங்கள் புகும். புது முறையான வாக்கிய அமைப்பும் ஒருவேளை புகும். அல்லாமலும் அந்தக் காலத்தைப் போன்று ஒன்றையே ஈர்ப்பு மையமாகக் கொண்டு பல அம்சங்களையும் உப அங்கங்களாகக் கொள்வதை விடுவித்து, உதிரி உதிரியான பாடல்களே முளைத்தெழுவதாக இருக்கும். அதிகப்படியான தழுவல்கள் (adaptations) குவியும். என்ன ஆனாலும் பஞ்சம் ஏற்பட்டுவிடாது. உறுதி தான்.

விஞ்ஞானம் நம்முடைய ஆற்றலைப் பெருக்கி இயன்ற அளவு நம்முடைய செருக்கைக் குறைக்கிறது.

— கிளாட் பர்னார்ட்.

விஞ்ஞானத்தில் கருத்தை வெளிப் படுத்துபவனுக்குப் பெருமை சேருவதில்லை. ஆனால் கருத்தை நிலைநாட்டுபவருக்கே அப் பெருமை உரியதாகும்.

— சர். வில்லியம் ஆஸ்லர்.

எத்தனை மனிதர்கள் உண்டோ அத்தனை உள்ளங்களும் உண்டு என்று கார்லைல் கூறினர். அதே கருத்தை இலக்கியத் துறையிலே கண்டு கூறுகிறர் டாக்டர் மு. வ.

உள்ளம் பலவகை

டாக்டர். மு. வரதராசன், M.O.L., PH.D.

★

கூடலையாண்டியின் வண்ண ஓவியம் ஒருவருடைய கண்ணையும் கருத்தையும் கவரும் கலைச்சிறப்பு உள்ளதாக இருக்கின்றது. அதே ஓவியம் இன்னொருவர்க்கு வண்ணங்களைக் கொட்டிக் கலந்த வெறும் படமாகத் தோன்றுகின்றது. 'இந்த இழவுக்கா பத்து முழு ரூபாயைக் கொட்டினய்?'' என்று வெறுப்பைப் புலப்படுத்துகின்றர் ஒருவர். மற்றொருவர் ''நூறு ரூபாய் கொடுத்தாலும் தகுமே'' என்கின்றர்.

பட்டினத்தார் பாடலைத் திரும்பத் திரும்பப் பாடித் திளைக்கின்றர் ஒருவர். ''உனக்கு வயது முப்பதும் நிரம்ப வில்லையே! அறுபது வயதுள்ள கிழவனைப் போல் உதவாப் பாட்டைப் பாடுகின்றயே! என்ன உடம்புக்கு?'' என்கின்றர் மற்றொருவர். அறிவுரை கேட்டாலோ ''அகநானூற்றைப்படி, சிந்தாமணியைப் படி, பால காண்டத்தைப் படி, கோவைகளைப் படி, குயில் பாட்டைப் படி, பாண்டியன் பரிசைப் படி'' என்று அடுக்கிக் கொண்டே போகிறர்.

உலகம் பல வகை என்று சொன்னவர்கள் நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்னும் ஐந்தன் கலப்பினலாகிய வேறுபாடுகளை மட்டும் கண்டு கூறவில்லை; பலவகை உள்ளங்களையும் அவற்றின் விருப்பு வெறுப்பு வகைகளையும் கண்டறிந்தே உலகம் பலவகை என்று கூறியுள்ளனர்.

இலக்கியம் ஒரு கலை; கலைகளில் சிறந்த கலை. உள்ளத்தின் உணர்ச்சியே கலைவடிவமாக அமைவது. இலக்கியம் என்பது உள்ளத்து உணர்ச்சியைச் சொற்களால் தீட்டும் ஓவியம் என்று கூறலாம். ஆகவே, உள்ளத்தின் உணர்ச்சி வேறுபாட்டிற்கு ஏற்ப, இலக்கியம் பல வேறு வகையாக வேறுபட்டு நிற்கும். இலக்கியம் இன்னது என்று கூற வந்தவர்களும், பொதுவான அடிப்படைகளை விளக்கிச் சொல்ல முடிந்ததே தவிர, இலக்கியத்தின் வகைகளையும் உட்பிரிவுகளையும் வரையறுத்து நிறுத்தமுடியவில்லை. இதனல்தான் நாட்டுக்கு நாடு வேறு வேருகவும், நூற்றண்டுக்கு நூற்றண்டு வேறு வேறு வகையாகவும் இலக்கியம் வளர்ந்து வாழக் காண்கின்றேம்.

இலக்கியத்தின் அமைப்புக்கு, பாடப்பட்ட காலத்தின் உணர்ச்சி பொதுக் காரணம்; பாடியவரின் உள்ளத்தின் உணர்ச்சி சிறப்புக் காரணம். உள்ளம் பலவகைப் படுவதால் ஒரே நாட்டில் ஒரே காலத்தில்

எழுந்த நூல்களிலும் இலக்கிய வேறுபாடுகள் காணலாம்.

இலக்கியத்தில் இவ்வாறு காணப்படும் வேறுபாடுகளைவிட, இலக்கிய ஆராய்ச்சியில் காணப் படும் வேறுபாடுகள் மிகப் பல. இது இயற்கை. இலக்கியத்தின் அடிப்படையை வளர்த்தவை அந்தக் கால நிலையும் பாடியவரின் உள்ள நிலையுமாகும். ஆனால், இலக்கிய ஆராய்ச்சியில் வேறு இரண்டு காரணங்கள் புகுகின்றன அவை ஆராய்வோரின் காலநிலை யும் ஆராய்வோரின் உள்ளநிலையு மாகும். ஆகையால் ஒரு காலத் தின் விளைவை மற்றொரு காலத் தின் எல்லையிலிருந்து பார்ப்பதா லும், பாடியவரின் உணர்வுத் திறத்தை ஆராய்வோர் தம் உணர்வு கொண்டு நோக்குவதாலும் வேறு பாடு பெருகுகின்றது.

இலக்கியம் காலநிலைகளால் வேறுபடாத தன்மை உடையது என்றும், யார் யார் கற்றாலும் ஒருவகைக் கற்பனை எல்லையி லிருந்து கண்டால்தான் உணரத் தக்கது என்றும் கூறி, இலக்கியத் தின் ஒருமையை வற்புறுத்திக் கூறுவோரும் உண்டு. இலக்கியத் தின் அடிப்படை ஒரு தன்மையா னது என்பது உண்மைதான். ஆனால், அந்த அடிப்படை ஒன்றே இலக்கியம் ஆகாது. அப்படியாகு மானால், பலவேறு காலங்களில் புலவர்கள் தோன்றிப் பல வேறு நூல்கள் எழுத வேண்டிய காரணம் இருக்காது அல்லவா? ஆகையால் அடிப்படை ஒத்திருந் தாலும், வளர்ச்சியால் பெருகும் வேறுபாடுகள் பல என்பதை உணர வேண்டும்.

அடிப்படை மட்டும் அல்லாமல் நிலையும் தோற்றமும் என்றும் ஒரே தன்மையாய் உள்ள இமயமலை யைச் சென்று காண்போர் பலர். காண்போர் எழுதும் நூல்கள் ஒரே தன்மையாக உள்ளனவா? இல்லை. அந்த நூல்களைக் கற்பவர் பலரும் இமயமலையைக் காணாமலே, இவ் வாறு இருக்கக் கூடும் என்று கற் பனை செய்தல் இயல்பே அல்லவா? அவ்வாறு அவர்கள் காணும் கற் பனைகள் ஒத்திருக்க முடியுமோ? முடியாது அல்லவா?

இலக்கியம் அப்படிப் பட்டதே. அது ஒரு இமயம். அதைப் பலவேறு காலங்களில் பலவேறு சூழலி லிருந்து பற்பலர் காண்கின்றனர். அவர்களுடைய காட்சிப் பொருள் ஒன்றாக இருந்தாலும், அவர்கள் கண்டு உணரும் உணர்ச்சி ஒத் திருக்க முடியாது; அவர்களுடைய உணர்ச்சியைப் பெற முயலும் மற்றவர்களின் உணர்ச்சியும் ஒத் திருக்க முடியாது.

ஆனால், இலக்கிய உலகம் பல் வேறு வகையானது என்பதை உண்மை என்று நம்புகின்றவர்கள் யார்? இலக்கிய ஆராய்ச்சியில் தேர்ந்தவர்களில் ஒரு சிலர் நம்பித் தெளிந்திருக்கலாம். ஆனால், மற் றவர்கள் செய்வது என்ன? "அவ ருடைய ஆராய்ச்சி பொய், இவரு டைய ஆராய்ச்சி குறையுடையது, அன்னாருடைய இலக்கிய அறிவே பாழ், இன்னாருக்கு இலக்கியமே தெரியாது" என்று ஓயாமல் செய் யும் தொண்டுதான்.

இலக்கிய ஆராய்ச்சி என்பது புலவர் ஒருவர் இயற்றிய இலக் கியத்தினுள் புகுந்து மற்றொருவர் காணும் காட்சி யாகும். அந்த இலக்கியப் பூஞ்சோலையின் வெளி யே நின்று, அதன் வேலியையும், வேலியாக வளர்ந்த முட்புதர்களை யும், வேலியை வளர்த்தவர்களை யும், வேலிக்குப் பக்கத்தில் வீழ்ந்து கிடப்பனவற்றையும்

காணும் காட்சிமட்டும் ஆராய்ச்சி அல்ல. ஒரு புலவருடைய காலம், அவர் காலத்துச் சொற்கள், அவர் காலத்துப் புரவலர்கள், அக் காலத்தைப் பற்றி அறியும் மற்றக் குறிப்புக்கள் முதலியவற்றையும் ஆராய்ந்து காண்பது ஒரு சிறு பகுதி; இப்பகுதிமட்டும் இலக்கிய ஆராய்ச்சி ஆகாது. இந்த ஆராய்ச்சியில்மட்டும் நின்றால் கருத்து வேறுபாடு குறைவாகவும் இருக்கும்; பெரும்பாலும் இரு வேறு கட்சி மட்டுமே காணப்படும். ஆனால், நேர்மையான ஆராய்ச்சியில் தலைப்பட்டு, இலக்கியப் பூஞ்சோலையினுள் நுழைந்து கலைவண்டாய்ப் பறந்து பல்வகை மணமும் நுகர்ந்த பிறகுதான் உண்மை விளக்கும்; 'உலகம் பலவகை' என்பது உள்ளத்துணர்ச்சியின் பலவகை வேறுபாட்டைக் காட்டுவதுபோலவே, உணர்ச்சியின் கலை வடிவமான இலக்கியமும் பலவகை, இலக்கிய ஆராய்ச்சியும் பல்வேறு வகை என்றும் விளங்கும்.

அனடோல் பிரான்ஸ் (Anatole France) என்பவர் இலக்கிய ஆராய்ச்சியைப் பற்றிக் கூறிய ஒரு கருத்து இங்கு நினைவுக்கு வருகின்றது. 'இலக்கிய ஆராய்ச்சி என்பது நூலுலகத்தில் நுழைந்து மனித உள்ளம் ஆற்றும் அஞ்சாத செயல்கள்' என்பது அவருடைய கருத்து. ஒருவனுடைய உள்ள நிலையையும் நம்பிக்கைகளையும் அவனே எடுத்துக் கூறுவதால் அறியலாம்; ஆனால், அவனுடைய ஆராய்ச்சியுரைகளில் அவை நன்றாக விளங்கக் காணலாம் என்று ஜான் முரி என்னும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றார். ஆதலின் நூலாராய்ச்சியில் நூலாசிரியரின் உள்ளம் விளங்குவது ஒரு பக்கம் இருக்க, ஆராய்ச்சியாளருடைய உள்ளமே தெளிவாக விளங்குகின்றது எனக் கொள்ள வேண்டும்.

இந்த உண்மை விளங்கியவர்க்கே ஆராய்ச்சிக்கு உரிய தகுதி ஏற்படுகின்றது எனலாம். உலகம் பலவகை என்று உணராத ஒருவன் தனக்கு விருப்பமான பகுதியில் கலந்தும், வெறுப்பான பகுதியில் ஒதுங்கியும் வாழ முற்படுவான்; அவன் உலகில் ஒரு மூலையில் வாழலாம்; ஆனால், உலகை ஆராய முடியாது. அவ்வாறே இலக்கிய ஆராய்ச்சியும் வெவ்வேறு வகையாக அமையக்கூடும் என்று உண்மை உணராதவரும், ஆராய்ச்சியில் தலைப்படுவதற்கு முன்பே தவறநேரும். அவரும் இலக்கியத்தைக் கற்கமுடியும்; ஆனால், ஆராய முடியாது.

நல்ல சொல்லால் நன்மை உண்டாகும்; தீய சொல்லால் தீமை உண்டாகும். ஆக்கமும் கேடும் சொல்லால் வருவனவாக இருப்பதால், பேசும்போது சொல்லை ஆளுவதில் விழிப்பாக இருக்கவேண்டும்; சோர்ந்திருந்து கேட்டுக்கு இடந்தரக்கூடாது.

— மு. வ. (திருவள்ளுவர்)

உள்ளத்தின் உண்மை

திரு. தா. ஏ. சண்முகம், M.A., M. Litt.

★

எனக்கு ஞாபக மறதி அதிகமாக இருக்கிறது. பரீட்சையில் அதிக மார்க்கு வாங்குவதற்கு எனக்குத் திறமையும் அறிவும் இருந்தபோதிலும் ஞாபக மறதியினால் அது தடைப்படுகிறது...........காரணம்?

ஞாபகம் என்பது பொதுவாக நான்கு தனிப்பட்ட, ஆனால் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய, உள்ள சக்திகளைக் குறிப்பிடுவதாகும். நான்கு சக்திகளாவன, கற்றல் (Learning) உள்ளத்தில் பொருத்துதல் (Retention) நினைவுக்குக் கொண்டு வருதல் (Recall) அடையாளம் அறிதல் (Recognition) என்பனவாம். இந் நான்கு சக்திகளில் ஏதாவது ஒன்று வலிமையிழந்தால் ஞாபக சக்தி குறையும். சான்றாக, பாடத்தைத் தெளிவுபடக் கற்காவிட்டால் அது உள்ளத்தில் ஆணித்தரமாகப் பதியாது. அதனால் பிறகு வேண்டியபோது அப்பாடம் நினைவிற்கு வருவதில்லை.

பொதுவாகப் பாடத்தில் ஞாபக மறதி ஏற்படுவது படிக்கும் பொருளில் (Subject) ஆர்வமில்லாமையே யாகும். எப்படிப் பசியில்லாதவன் உணவு உட்கொண்டானாலும் அவ்வுணவு அவன் உடம்பில் கலக்காதோ அதேபோன்று ஆர்வமில்லாது கற்கும் ஒரு பொருள் உள்ளத்தில் பதிவதில்லை. அதனால் அப்பொருள் பற்றிய நினைவாற்றல் குறைகிறது. தங்களுக்கு விருப்பமுள்ள ஒரு விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள் உதாரணமாக, தங்களுக்குத் திரைப்படத்தில் பற்று இருந்தால், ஒரு படத்தை ஒருமுறை பார்த்தபோதிலும் அதில் வரும் சம்பவங்களும் நடிகர்கள் பெயர்களும் பல வருடங்கள்வரை நினைவில் இருக்கின்றன அல்லவா? இதற்குக் காரணம் சினிமாவில் தங்களுக்கிருக்கும் ஆர்வமேயாகும்.

தற்போது பொதுவாக மாணவர்களுக்குத் தங்கள் பாடங்களில் ஆர்வமில்லாமைக்குக் காரணம், அவர்கள் விரும்பும் பாடங்களைப் படிப்பதற்குப் பள்ளிக்கூடங்களிலோ, கல்லூரிகளிலோ இடம் கிடைக்காமையே யாகும். ஒருவனுக்குக் கணிதத்தில் விருப்பமிருந்த போதிலும் இடம் கிடைக்காத காரணத்தால் சரித்திரத்தையோ, வேறு பாடத்தையோ படிக்க நேரிடுகிறது. அதனால் அவன் ஊக்கத்திலும் அறிவிலும் சிறந்தவனாயிருந்தாலும் பாடத்தில் ஆர்வமும் பற்றும் இல்லாததனால் அவன் படிக்கும் கருத்துக்கள் உள்ளத்தில் பதிவதில்லை. எனவே, அவனுக்கு அப்பொருள் பொருத்தவரையில் ஞாபக மறதி ஏற்படுகிறது.

உள வியாதிகள் காரணமாக ஞாபக மறதி ஏற்படலாம், பயங்கரமான சம்பவங்களைப் பார்ப்பதனாலும் பொருள்களை மிகவும் வெறுப்பதினாலும் சிலருக்கு உள்ளத்தில் அதிர்ச்சி ஏற்பட்டு அம்னிசியா (Amnesia) என்ற ஞாபகமறதி ஏற்படுகிறது. மற்றும் ஞாபக சக்திக்குக் காரணமான மூளையின் ஒரு பகுதிக்கு எதிர்பாராத சம்பவங்களினால் பங்கம் ஏற்பட்டால் அபேசியா (Aphasia) என்ற ஞாபக மறதியும் ஏற்படலாம். இவ்விரண்டையும் சிகிச்சை மூலமாகத்தான் குணப்படுத்த முடியும்.

மருந்துவைத்து மயக்குதல் என்ற நம்பிக்கை நமது நாட்டில் அதிகமாக இருக்கிறது. இதில் ஏதாவது உண்மை யுண்டா?

தாயினிடத்தில் மிக்க அன்பு கொண்டிருந்த மகன் தனக்குத் திருமணமானதும் தாயைப் புறக்கணித்துத் தன் மனைவியின் குடும்பத்தவரோடு வாழ்வதைப் பொதுவாக மக்கள், மனைவி தன் கணவனுக்கு மருந்து வைத்து மயக்கி விட்டாள் என்று கூறுவதுண்டு. இதற்குக் காரணம் பின் வருமாறு:-

மகன் தான் தோன்றியது முதற்கொண்டு திருமணம் செய்து கொள்

ளும் வரையில் தாயோடு நெருங்கி வாழ்கிறான். சூழ்நிலையினின்றும் எப்பாகத்திலிருந்து அதிக இன்பம் கிடைக்கிறதோ அங்கேதான் ஒருவனுக்கு மிகுதியாகப் பற்று ஏற்படுகிறது. தாய் தன் மகனுக்குப் பல்வேறு வழிகளில் இன்பத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறாள். அதனால் தாய்மேல் எல்லாப் புதல்வர்களுக்கும் பற்று அதிகமாகிறது. சூழ்நிலையில் வேறு மனிதர்களோ, பொருள்களோ இம் மகிழ்ச்சியை அளித்தால் அம் மனிதர்களிடமும் பொருள்களிடமும் பற்று ஏற்படுகிறது. சில குடும்பங்களில் குழந்தை (மகன்) வளர வளர, வேறு குழந்தைகள் பிறந்ததன் காரணமாகவோ, பிற காரணங்களினாலோ தாய் மகனுக்கு எல்லாச் சமயங்களிலும் மகிழ்ச்சி அளிக்க முடிவதில்லை. திருமணமானதும் இம் மகிழசசியைத் தனது மனைவியிடமிருந்து அடைகிறான். மகனுடைய உள்ளத்தில், தாயிருந்த இடத்தில் மனைவி வருகிறாள். இந்த அன்பு மாற்றம் (Transfer of love) எல்லா மனிதர்களுக்கும இயற்கை. ஆனால், சில மனிதர்களிடத்தில் திடீரென்று ஏற்படுகிறது. கோபம், பயம், காமம் முதலியவைகள் எல்லா மனிதர்களுக்கும் இயற்கையாக இருந்த போதிலும் இக் குணங்களை, வெளிப் படுத்துவதில், மனிதர்களுக்குள்ளேயே வித்தியாசம் இருப்பதைப் போல இந்த அன்பு மாற்றத்திலும் மனிதர்களிடம் வித்தியாசம் ஏற்படுகிறது. சிலரிடம் இந்த அன்பு தம் உள்ளக் கோளாறின் காரணமாகவோ, மனைவியின் குணக் குறைவின் காரணமாகவோ, அல்லது தவறான நடத்தையின் காரணமாகவோ தாயிடமிருந்து மனைவிபால் மாறுவதில்லை. சிலரிடம் இந்த அன்பு மாற்றம் தாயிடமிருந்து மனைவியின் பேரிலோ, அல்லது மனைவியிடமிருந்து தமக்கு வேண்டிய இன்பம் கிட்டாததனால் வேறு பெண்களிடமோ ஏற்படுகிறது. இறுதியாகக் கூறப்பட்ட அன்பு மாற்றம் ஏற்பட்டால்தான் ஒருவன் தன் தாயையும் குடும்பத்தையும் புறக்கணித்துத் தன் மனைவியிடமோ, வேறு பெண்களிடமோ, சென்று வாழ்கிறான். இதைத்தான் மருந்து வைத்து மயக்கிவிட்டதாகக் கூறி விடுகிறார்கள்.

(குறிப்பு :— மனிதனின் குறைபாடுகள் பல. நன்கு ஆராய்ந்தால் இக் குறைகள் பலவற்றிற்கு உள்ளமே காரணமாக அமைந்திருக்கின்றது என்பது புலனாகும். உள்ளத்தைப் பற்றிய கேள்விகளுக்கு உள நூல் ஆசிரியர் திரு. தா. ஏ. சண்முகம் அவர்கள் இப் பகுதியில் தக்க விடையளிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் கேள்விகளை எழுப்பி உள்ளத்தின் உண்மையை உணரலாம்.

கேள்விகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும். கேள்விகளை எழுதி அனுப்புவோர் பெயர்கள் வெளியிடப்பெறா எனினும் கேள்விகளோடு அவர்களுடைய பெயரையும் முழு முகவரியையும் குறித்து ஆசிரியர், ''கலைக்கதிர்'' பூளைமேடு, கோயமுத்தூர், என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.)

● ● ●

திருக்குறள் ஒரு சுரங்கம்.

திருக்குறள் ஒரு சுரங்கம். அஃது அவ்வக்கால உலகைப் புரக்கும் பொருள்களை அவ்வப்போது வழங்கும் பெற்றியது. அதினின்றும் இதுகாறும் அறிஞரால் எடுக்கப்பட்ட பொருள் சிலவே; மிகச் சிலவே. இவ்வேளையில் திரண்டு வரும் புது உலகமும், இனித் திரளப் போகும் பலவகை உலகங்களும் ஏற்கத்தக்க பொருள்கள் இன்னும் திருக்குறளில் மிடைந்து கிடக்கின்றன. திருக்குறட் சுரங்கம் வற்றாதது.

— திரு. வி. க.

- ஆறறிவு படைத்த மக்களினத்தைக் காட்டிலும் தேனீக்கள் மிக்க கட்டுப்பாடான முறையில் தம் வாழ்க்கையை நடத்துகின்றன!
- தேனீக்கள் தாம் கண்டதை அறிவிக்தும் முறையின் விந்தை!

தேனீக்களின் மொழி

திரு. B. R. கிருஷ்ணமூர்த்தி நாயுடு, M.A., L.T.

இவ்வுலகின்கண் பல உயிரினங்கள் வாழ்கின்றன. இவ்வுயிரினங்களைக் கூர்ந்து கவனித்தால் அவற்றின் அரிய செயல்கள் புலனாகும். சில உயிரினங்கள் மிகச் சிறியனவாயினும் அவைகள் வியத்தகு செயல்களை இயற்றுகின்றன. தேனீ மிகச் சிறிய உயிரினங்களுள் ஒன்று. எனினும் தேனீக்கள் நடத்தும் வாழ்க்கை வியப்பிற்குரியது. ஆறறிவு படைத்த மக்களினத்தைக் காட்டிலும் மிக்க கட்டுப்பாடான முறையில் தேனீக்கள் தம் வாழ்க்கையை நடத்துகின்றன. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற மொழிகளின் உண்மையைத் தேனீக்கள் வாழ்க்கையினின்று நன்கு உணரலாம்.

தேனீக்கள் பல ஒன்று சேர்ந்து வாழும் இயல்பின. ஒரு கூட்டில் சுமார் எண்பதினாயிரம் அல்லது தொண்ணூறாயிரம் தேனீக்கள் ஒன்றுபட்டு வாழ்கின்றன. ஒவ்வொரு கூட்டிலும் அரசி (Queen) என்றும் ஆடவர் (drones) என்றும் பணிப் பெண்கள் (workers) என்றும் மூவகையான தேனீக்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றற்கும் தனித்தனி தொழில் உண்டு. இவைகள் தத்தமக்குரிய தொழிலைத் தவறாது செய்து சிறந்த முறையில் உயிர் வாழ்கின்றன.

மங்கைப் பருவம் அடைந்த தேனீ அரசியாக விளங்கும். முட்டையிடுவதே இவ்வரசியாகிய தேனீயின் தொழில். இத்தேனீ ஒரு நாளைக்குச் சுமார் 1800 முட்டைகள் இடும்; சில சமயங்களில் இதைப் போல் இரு மடங்கு முட்டைகளைப் பல நாட்கள் வரை இடும். தேன் கூடு பல அறைகளை யுடையது. ஒவ்வொரு அறையிலும் ஒரு முட்டையே இடப்பெறும். அரசியாதற்குரிய தேனீக்கள் வளர்தற்கெனத் தனி அறைகள் உண்டு. இவ்வறைகள் மற்ற அறைகளை விடப் பெரியனவாக இருக்கும். அரசியாகிய தேனீ பதினாறு நாட்களுக்குள் வளர்ச்சி யடைந்து, கூட்டினின்றும் பறந்து சென்று ஆணோடு புணர்ந்தபின் கூட்டை அடைகின்றது. இரண்டு நாட்களுக்குப் பின்பு அது

முட்டையிடத் தொடங்குகிறது. இத் தேனீ சுமார் மூன்றாண்டுகள் உயிரோடு இருக்கும்.

ஆண் தேனீக்கள் வளர்ச்சி அடைய இருபத்து நான்கு நாட்கள் ஆகின்றன. அரசியாகிய தேனீயொடு சேர்வதைத் தவிர இவைகளுக்கு வேறொரு தொழிலுமில்லை. புணர்ச்சிக்குப் பிறகு ஆண் தேனீக்கள் இறந்து விடுகின்றன. ஆனால், எல்லா ஆண் தேனீக்களும் புணர்ச்சியில் அழிவதில்லை. ஏனென்றால் அரசியைக் கூடும் பேறு எல்லா ஆண்களுக்கும் கிட்டுவதில்லை. ஆண் தேனீக்கள் பணிப் பெண்களாயுள்ள மற்றத் தேனீக்கள் அரிதின் முயன்று சேகரிக்கும் தேனை உண்டு வாழ்வன. தேன் நிரம்பக் கிடைக்கும் வரை ஆண் தேனீக்களுக்குக் கூட்டின்கண் இடமுண்டு. போதுமான அளவு தேன் கிடைக்காமற் போயின் பணி செய்யும் தேனீக்கள் ஆண் தேனீக்களைக் கூட்டினின்றும் துரத்தி விடுகின்றன. உழைப்பில்லையேல் பிழைப்பில்லை அல்லவா? இங்ஙனம் துரத்தப்பெற்ற தேனீக்கள் உணவின்றி உயிர் துறக்கின்றன. பெரும்பாலும் ஆண் தேனீக்கள் இவ்வாறு அழிவுறுகின்றன.

பணிப் பெண்களாகிய தேனீக்களே ஒரு கூட்டின்கண் மிகுதியாக இருக்கும். இவையனைத்தும் முழுப் பக்குவ நிலையடையாத பெண்ணினம். சாதாரணமாக இவைகள் முட்டையிடுவதில்லை. ஆனால், இவை தம் அரசியாகிய தேனீயை இழப்பின் தாமே முட்டையிடத் தொடங்கும். இம் முட்டையினின்றும் வளர்பவை அனைத்தும் ஆண் தேனீக்களேயாம். இவை முழு வளர்ச்சி அடைதற்கு இருபத்தொரு நாட்கள் ஆகும்.

பணிப் பெண்களாகிய தேனீக்களே பெரும்பாலும் எல்லாச் செயல்களையும் இயற்றுகின்றன. கூடு கட்டுவதும், குஞ்சுகளை உண்பிப்பதும், கூட்டினைச் சுத்தம் செய்வதும், பகைவர் அடையா வண்ணம் அதைப் பாதுகாப்பதும், உணவைச் சேகரிப்பதுமாகிய இச் செயல்கள் அனைத்தையும் இத்தேனீக்களே செய்கின்றன.

தேனீக்களுக்கு மலரிலுள்ள தேனும் (Nectar) பூந்தாது (Pollen) வும் உணவு ஆகும். ஒரு தேனீ இவ் வுணவுகள் இருக்கும் இடத்தை அறிந்தால் போதும். உடனே மற்றத் தேனீக்கள் அவ்விடத்திற்கு விரைந்து சென்று உணவைக் கொள்ளுகின்றன. இதனால், உணவிடத்தை முதலில் கண்ட தேனீ மற்றத் தேனீக்களுக்கு அவ்விடத்தை அறிவிக்கின்றதென்பது தெளிவு. அஃது எங்ஙனம் அறிவிக்கின்றது? தேனீக்களுக்குப் பேசத் தெரியுமோ? வான் பிரிஷ் (Von Frisch) என்ற பேரறிஞர் அதைக் கண்டறிந்து கூறுகிறார்.

வான் பிரிஷ் என்பவர் ஆஸ்டிரியா நாட்டைச் சேர்ந்தவர். இவர் கடந்த நாற்பது ஆண்டுகளாகத் தேனீக்களைப் பற்றி அரிய ஆராய்ச்சிகள் நிகழ்த்தி வருகின்றார். இவர் கண்ணாடிகள் அமைத்துச் செய்யப்பெற்றதொரு கூண்டினுள் ஒரு தேன் கூடு வளர்த்தார். இத்தேன் கூட்டைத் தூரத்திலிருந்து கண்ணாடி வழியாகக் கூர்ந்து கவனித்து வந்தார். உணவிடத்தை அறிந்து திரும்பும் தேனீக்கள் நிலைக் குத்தாகத் (Vertical) தொங்கும் தேன்கூட்டின்மேல் அமர்ந்து நடனம் புரிவதைக் கண்டார். அவை இரண்டு வகையான நடனம் புரிந்தன. ஒன்று, சுற்றிவரும் நடனம் (circling dance); மற்றொன்று வயிற்றை ஆட்டும் நடனம் (wagging dance). வயிற்றை ஆட்டும் நடனம் புரிகையில் தேனீ தன் இரு பக்கத்திலும் வயிற்றை மிக விரைவாக ஆட்டிக்கொண்டு சிறிது தூரம் நேராகச் சென்று பிறகு தன் வலப்பக்கமோ இடப்பக்கமோ திரும்புகிறது. நடனத்தைக் காணும் தேனீக்கள்



சுற்றிவரும் நடனம் (Circling Dance) — வயிற்றை யாட்டும் நடனம் (Wagging Dance)

எ - நேராகச் செல்லும் பக்கம்.

தாமும் அங்ஙனமே நடனம் புரிந்து பின் உணவை நாடிப் புறப்படுகின்றன. சுற்றி வரும் நடனம் தேனுணவை அறிவிப்பதென்றும் வயிற்றை ஆட்டும் நடனம் பூந்தாதுவைக் குறிப்பதென்றும் வான் பிரிஷ் முதலில் கருதினார். ஆனால், அவர் பின்னர்ச் செய்த ஆராய்ச்சியால் தாம் அங்ஙனம் கருதியது தவறு என்பதை உணர்ந்தார்.

தேனீ ஒரு மலரிலிருந்து தேனையோ அல்லது பூந்தாதுவையோ சேகரிக்கும் பொழுது அதன் உடம்பில் சிறிது ஒட்டிக்கொள்கிறது. அது தன் கூட்டிற்குத் திரும்பியதும் தான் சேகரித்துக் கொண்டுவந்த உணவின் வாசனையாலும் அதன் உடம்பில் ஒட்டியுள்ள மலரின் மணத்தாலும் பிற தேனீக்கள் தாம் எந்த வகையான உணவை நாட வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்கின்றன.

ஒரு தேனீ கண்டறிந்து வந்த உணவு எத்தன்மையது என்பதைப் பிற தேனீக்கள் குறிப்பாக உணர்ந்து கொள்வதற்கு இவ்விருவகை மணமும் (அவையாவன, உடலில் ஒட்டியுள்ள மணமும், சேகரித்து வந்த உணவின் மணமும்) பெரிதும் துணை செய்கின்றன என்பதைச் சோதனை (Experiment) ஒன்றால் வான் பிரிஷ் கண்டறிந்தார்.

சில தேனீக்கள் மணம் பொருந்திய ஒருவகைத் தேனை உண்ணும்படியாகச் செய்தார். அவை உண்ணும் பொழுது அவற்றின்மீது சிறிதளவு தேனும் படாதவகையில் அவற்றை உண்பித்தார். இத்தேனீக்கள் தம் கூட்டிற்குத் திரும்பிச் சென்றதும் இவை உண்ட தேனின் மணத்தால் இன்ன உணவு என்பதை மற்றத் தேனீக்கள் உணர்ந்து உடனே அவ்வுணவிருக்கும் இடத்தை அடைந்தன.

வான் பிரிஷ் மற்றொரு சோதனையும் செய்தார். அதாவது ஒரு தேன் கூட்டிற்குச் சிறிது தூரத்தில் அல்லி மலர் மீது சிலதேனீக்கள் அமர்ந்தவண்ணம் முல்லை மலரின் மணமுள்ள தேனை உண்ணும்படியாகச் செய்தார். இங்ஙனம் தேனீக்கள் உண்டதால் அவற்றின் உடலின்கண் தாம் அமர்ந்திருந்த அல்லி மலரின் மணமும் வாயினிடத்துத் தாம் சேகரித்துவந்த தேனின் மணமாகிய முல்லை மணமும் பொருந்தி

யிருந்தன. இவை அருகிலுள்ள தம் கூட்டிற்குத் திரும்பியதும் கூட்டிலுள்ள மற்றத் தேனீக்கள் உடனே பறந்து வெளிச்சென்று அல்லிமலரின் மீது அமர்ந்தன. பிறகு இதே சோதனையைத்தேன் கூட்டிற்கு வெகு தூரத்தில் வான் பிரிஷ் நிகழ்த்தினர். அப்பொழுது முன் கூறிய வண்ணம் அல்லியில்அமர்ந்து முல்லைத்தேனைக்கொண்ட தேனீக்கள் தம் கூட்டிற்குத் திரும்பியதும் கூட்டிலிருந்த மற்றத் தேனீக்கள் பறந்து சென்று முல்லைத் தேனையுண்டன. இதனால், தேன்கூடு உணவிடத்தின் அருகிலிருந்த பொழுது தேனீக்களின் உடலில் ஒட்டிய வாசனையால் பிற தேனீக்கள் உணவின் தன்மையை உணர்ந்தன என்றும், தேன்கூடு மிகச் சேய்மையில் இருந்தபோது தேனீக்கள் தம் கூட்டிற்குப்பறந்து வருவதற்குள் அவற்றின் உடலில் ஒட்டிய மணம் மறைந்துவிட்ட தென்றும்; ஆதலால அவை சேகரித்துவந்த தேனின் மணத்தையே பிற தேனீக்கள் உணர்ந்து அத்தேனுள்ள இடத்திற்குச் சென்றன என்றும் தெளியலாம்.

எனவே, தேனீக்களின் இருவகையான நடனம் இன்ன உணவு என்பதை உணர்த்துவது அல்ல. உணவின் தன்மையை உணர்த்துவது தேனீக்கள் உண்டுவந்த உணவின் வாசனையேயாம். பின்னை இருவகை நடனங்கள் எதை உணர்த்துகின்றன? வான் பிரிஷ் தம் கூர்த்த மதியால் ஆராய்ந்து இந்நடனங்கள் உணவு இருக்கும் தூரத்தை உணர்த்துகின்றன என்பதைக் கண்டறிந்தார். ஒரே கூட்டைச் சேர்ந்த தேனீக்களை வான் பிரிஷ் இரு பிரிவாகப்பிரித்து ஒவ்வொரு பிரிவையும் தனித்தனியான இடங்களில் உணவு கொள்ளும்படிப் பயிற்சி தந்தார். ஒரு பிரிவுத்தேனீக்களுக்கு நீல நிறத்தையும் மற்றொரு பிரிவுத் தேனீக்களுக்குச் சிவப்பு நிறத்தையும் அடையாளமாக இட்டார். நீல நிறத் தேனீக்களுக்குரிய உணவைக் கூட்டிற்கு ஒரு சில கஜதூரத்தில் வைத்தார். சிவப்பு நிறத்தேனீக்களுக்குச் சுமார் முந்நூறு கஜ தூரத்தில் உணவை இட்டார். உணவை உண்டு திரும்பிய நீல நிறத் தேனீக்கள் சுற்றிவரும் நடனத்தைச் செய்தன. சிவப்பு நிறத் தேனீக்கள் வயிற்றையாட்டும் நடனம் புரிந்தன. பிறகு வான் பிரிஷ் கூட்டிற்கு அருகில் இருந்த உணவை மெல்ல மெல்ல நகர்த்தி இறுதியில் சுமார் நூறு கஜ தூரத்தில் இறுத்தினர். முதலில் சுற்றிவரும் நடம் புரிந்த நீல நிறத் தேனீக்கள் இப்போது வயிற்றையாட்டும் நடனத்தைப் புரியலாயின. இங்ஙனமே முந்நூறு கஜ தூரத்திலிருந்த உணவைக் கூட்டிற்கு அருகில் கொண்டுவந்து நிறுத்தினர் வான் பிரிஷ். முன்பு வயிற்றையாட்டும் நடம்புரிந்த சிவப்புநிறத்தேனீக்கள் இப்போது சுற்றிவரும் நடனம் செய்தன. இதனால் சுற்றிவரும் நடனம் உணவு அருகிலுள்ளதென்பதை உணர்த்துகின்றதெனவும், வயிற்றை யாட்டும் நடனம் உணவு சேய்மையிலுள்ளதென்பதை உணர்த்துகின்றதெனவும் புலனும். உணவு நிரம்பவும் எளிதாகவும் கிடைப்பதாயிருந்தால், தேனீக்கள் மிகவும் உற்சாகத்தோடு விரைந்து நடனம் புரிகின்றன. உணவு குறையக் குறைய நடனத்தின் வேகமும் குறைகிறது.

தேனீ உணவிற்காக இரண்டு கல் தூரம்வரை செல்லும் இயல்புடையது. ஒரு பவுண்டு தேனைச்சேகரிக்க தேனீக்கள் சுற்றிச் சுற்றி அலையும் தூரத்தைக் கணக்கிட்டால் 50,000 மைலாகும். இது பூமியை இரண்டுமுறைக்குமேல் சுற்றி வருவதற்கு ஒப்பாகும். உணவு நூறு கஜ தூரத்திற்கு மேல் இருந்தால் அத்தூரத்தைத் தேனீக்கள் வயிற்றையாட்டும் நடனத்தால் அறிவிக்கின்றன என்பதை மேலே கண்டோம். வான் பிரிஷ் இந்நடனத்தை மேலும் நுணுகி ஆய்ந்து மற்றொரு உண்மையைக்கண்டார். உணவு இடம் நூறு கஜ தூரத்

தில் இருந்தால் தேனீ வயிற்றை ஆட்டிக்கொண்டு பதினைந்து வினாடியில் பத்து முறை பக்கமாகத்திரும்பி வந்து வந்து நடம்புரிகிறது. ஆனால், உணவு சுமார் மூவாயிரம் கஜ தூரத்தில் இருப்பின் தேனீ அதே நேரத்தில் மூன்று முறையே திரும்பி நடம்புரிகிறது. எனவே, தேனீ வயிற்றை ஆட்டிக்கொண்டு அடிக்கடி திரும்பி நடனம் செய்வது உணவிடம் அருகிலுள்ளது (அதாவது நூறுகஜதூரத்தில்) என்பதைக்குறிப்பதாகும். உணவு மிக்க சேய்மையிலுள்ளதென்பதைத் தேனீ மெதுவாக இரண்டு மூன்று முறை திரும்புவதி லிருந்து அறியலாம்.

இந்நடனங்கள் உணவிடத்தின் தூரத்தை மட்டும் அறிவிப்பதன்றி அது எந்த திசையில் உள்ளதென்பதையும் உணர்த்துகின்றன என்பதை வான் பிரிஷ் தொடர்ந்து இயற்றிய சோதனைகளிலிருந்து அறிந்தார். தேனீக்கள் சூரியனைக் கொண்டு திக்கை உணர்த்துகின்றன. தேன் கூடு நிலைக்குத்தாகத் (Vertical) தொங்கினாலும் அது சூரியனுக்குக் கிடைநிலையாக (Hori zontal) இருப்பதாகத் தேனீக்கள் பாவித்துக்கொள்கின்றன. தேன்கூண்டிலிருந்து பார்க்கும்பொழுது உணவு இருக்குமிடம் சூரியனுக்கு நேர்கீழாக இருந்தால் நடனத்தில் தேனீ நேராகச் செல்லும் பாகத்தை (படத்தில் எ-குறியிட்ட பாகத்தைக் காண்க) நிலைக்குத்தாகச் (Vertical) சென்று நடிக்கும். இங்ஙனம் தேனீ நிலைக்குத்தாகச் செல்லும்பொழுது அதன் தலைமேலாக இருக்கும். உணவிடம் சூரியனுக்கு எதிர்த் திக்கில் இருந்தால் தேனீ தலைகீழாக நிலைக்குத்து (Vertical with head down) நடனம் புரியும். உணவானது சூரியனுக்கு நேர் கீழாகவோ அல்லதுஎதிராகவோ இல்லாமற் போனால், சூரியனுக்கு உணவு எந்தக் கோணத்தில் இருக்கின்றதென்பதைத் தேன் கூட்டின் மேல் நிலைக்குத்தாக நின்று அக்கோண அளவையைக் காட்டும். கருமேகத்தால் சூரியன் முழுதும் மறைந்தாலும் தேனீக்கள் சூரியன் இருக்கும் இடத்தை அறிந்து கொள்கின்றன. மேகத்தை ஊடுருவிக் கொண்டுவரும் சூரியனின் கதிர்களால் (infra-red rays) தேனீக்கள் மறைப்புண்ட சூரியனின் இருப்பிடத்தை அறிகின்றன போலும்.

இங்ஙனம், தேனீக்கள் தம் வாழ்க்கைத்தொழில்களைப் பாகுபடுத்தி அவற்றை முறையே செய்துவருவதும், பணிபுரியும் தேனீக்களில் ஒரு சில உணவைத்தேடிவெளிச்சென்று திரும்புவதும், திரும்பிய தேனீக்கள் உண்ட உணவின் வாசனையால் மற்ற தேனீக்கள் இன்ன உணவு என்பதை அறிவதும், உணவு உண்டு வந்த தேனீக்கள் தம்முடைய இருவகையான நடனங்களால் உணவு இருக்கும் இடத்தின் தூரத்தையும் திக்கையும் தம் இனத்திற்கு அறிவுறுத்துவதும் ஆகிய இவ்வரிய செயல்கள் நினைந்து நினைந்து வியப்படைதற்குரியனவாம். இயற்கையில் தேனீக்களைப் போன்று நாம் அற்பமென்று கருதும் பல உயிரினங்கள் அரிய செயல்கள் நிகழ்த்துகின்றன. இச்செயல்கள் அனைத்தும் மக்களுக்குச் சிறந்த படிப்பினை நல்குவனவாகும்.

நாகரிகத்தின் அளவுகோல்

நாமக்கல் கவிஞர்

மனிதனுடைய வாழ்க்கைக்கு இன்பம் ஊட்டுவது கலை. 'கலை' யென்றால் 'வித்தை' என்பது பொருள். மனிதனுடைய புலன்களுக்கு இன்பம் தருதற்கே செய்யப்படுகிற எல்லாக் காரியங்களும் கலை இனத்தைச் சேர்ந்தவை. அவைகள், வாழ்க்கைக்கு அவசியமான, சாதாரண மற்றெல்லாக் காரியங்களைக்காட்டிலும் அதிகமான புத்திகூர்மையோடும், சாதுரியத்தோடும் அப்பியாசத்தோடும் செய்யப்படுவதால்தான் அவற்றை 'வித்தைகள்' என்கிறோம்.

இன்பங்களை நாடுவதே சரீரத்தின் இயல்பு. இடையிடையே எத்தனை துன்பங்கள் நேரிட்டாலும்! அவற்றைப் பொருட்படுத்தாமல் மீண்டும் மீண்டும் தான் கோரிய இன்பத்தையேதான் மனம் நாடுகின்றது. மேலும் நாம் தேடிய ஒரு இன்பம் நுகரக் கிடைத்து விட்ட பின்னும் அந்த ஒரே இன்பத்தை வெவ்வேறு விதமாக அநுபவிக்கவே அது ஆசைப்படுகிறது. உதாரணமாகச் சர்க்கரை நம்முடைய நாக்கிற்குத் 'தித்திப்பு' என்ற சுவையைத் தருகிற ஒரு நல்ல பொருள். ஆனால், இந்தச் சர்க்கரையை வெறும் சர்க்கரை வடிவத்திலோ அல்லது சுவையிலோமட்டும் அநுபவித்துவிடுவதில் நமக்குத் திருப்தி உண்டாவதில்லை. அந்தச் சர்க்கரையை வேறு என்னென்னவோ உருவங்களுக்கு மாற்றி, வேறு எத்தனையோ பொருள்களுடன் வெவ்வேறு தினுசிலும் அளவிலும் கலந்து, 'சர்க்கரைக்கு எத்தனையோ விதமான தித்திப்பு இருக்கிறது' என்று நினைக்கும்படி அத்தனை வெவ்வேறு விதங்களில் அநுபவிக்க ஆசை உண்டாகிறது. அந்தச் சர்க்கரை என்ற ஒரே பொருளை எத்தனை வேறுவேறு ரூபத்திலும் வேறுவேறு ருசியிலும் அமைத்து நமக்குத் தரப்படுகிறதோ அத்தனை வேலைகளும் அத்தனை கலைகள்.

இதைப்போலவே மற்றப் புலன்கள் விரும்புகின்ற இன்பங்களையும் எத்தனை வேறுவேறு தினுசுகளில் அநுபவிக்க முடிகின்றதோ அத்தனை விதக் 'கலை' வேறுபாடுகளும் இருக்கின்றன.

ஒவ்வொருவிதக்கலைக்கும் ஒவ்வொரு விதமான தனிச்சாமர்த்தியமும், தனிப் பழக்கமும் வேண்டியிருக்கும். அத்தனை விதமான தனிப்பட்ட கலையறிவுகளையும், மனிதவர்க்கம் அறிவறிந்த நாள்தொட்டுப் பாராட்டிப் பாதுகாத்து அநுபவிக்க ஆசைப்பட்டிருப்பதை அறிகிறோம். காலப்போக்குகளுக்கும் மாறுதல்களுக்கும் ஏற்றவாறு கலைகளும் வெளித்தோற்றங்களில் மாறினாலும் கோரிக்கையிலும் குறிகளிலும் மாறினதாகத் தெரியவில்லை.

இந்தக் கலை-ஆசையும், அதன் ரசனையும் அறிவின் அளவுக்குத் தக்கபடியே அதிகமாகவோ கம்மியாகவோ இருக்கிறது. அறிவு குறைந்த இடத்தில் கலை உணர்ச்சியோ கலை வளர்ச்சியோ காணமுடியாது. இதை வெகு எளிதாக அறியலாம். எப்படியெனில் மனிதனுக்குமட்டும் என்று சொல்ல முடியாதபடி -கண், மூக்கு, நாக்கு, காது, உடலுணர்ச்சி-என்ற இந்த ஐம்புல ஆசைகளும் எல்லா விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இருக்கின்றன.

அந்த ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்ள மனிதன் அலைவதைப்போல்தான் அவைகளும் தேடித் திரிகின்றன. ஆனால், ஒரே இன்பத்தைப் பல ரூபத்தில் அநுபவிக்கவேண்டும் என்று மனிதன் முயற்சிப்பதைப்போல் மற்ற ஜீவராசிகள் முயல்வதில்லை.

ஒரு பசுவோ அல்லது குதிரையோ அதற்கு ஆகாரமாக வைக்கப்படுகிற புல், தவிடு, கொள்ளு அல்லது வேறு எதையும் அந்தந்தப் பொருளை அப்படியே மென்று சுவைத்து அப்பொருள்களில் இயற்கையாக அமைந்திருக்கிற ருசியை ரசித்து அத்துடன் திருப்தியடைகின்றன.

ஆனால், இந்த மனிதன் ஒருவன்தான் எந்தத் தின்பண்டம் சிக்கினாலும் அதில் இயல்பாக இருக்கிற சுவையை விட்டுவிட்டு, அதில் இல்லாத சுவையை அதில் இருக்க விரும்புகின்றான். கரும்பு இனிப்பான சாறுள்ள பொருள். அதைக் கடித்து மென்று சப்பினால் கரும்பின் ருசியை அனுபவிக்கிறோம். ஆனால், கரும்பின் ருசியை அப்படி மென்று சுவைப்பதோடு நாம் விட்டுவிடுவதில்லை. அதே கரும்பை ஆலையில் நசுக்கிச் சாறுபிழிந்து அந்தக் கருப்பஞ்சாற்றைத் தண்ணீரைப்போல் குடித்து ருசிக்கிறோம். அதிலும் திருப்தி ஏற்படாமல் அந்த ஆலைச் சாற்றில் கொஞ்சம் தேங்காயின் இளநீரைக் கலந்து உண்டு பார்க்கிறோம். அதையும்விட்டு ஆலைச்சாற்றில் கொஞ்சம் எலுமிச்சம்பழ ரசத்தைக் கலந்து சாப்பிட்டுப் பார்க்கிறோம். பிறகு அதில் கொஞ்சம் ஏலக்காய்ப் பொடி தூவி அந்த வாசனையோடு கூடிய கருப்பஞ்சாற்றின் சிறப்பைக் கவனிக்கிறோம். அத்தோடு விடுவோமா! கருப்பஞ்சாற்றில் தனித் தனியே இளநீரையும் எலுமிச்சம்பழ ரசத்தையும், ஏலக்காய் வாசனை முதலியவைகளையும் கலந்து பார்த்தது போதாதென்று இவை எல்லாவற்றையும் ஏககாலத்தில் கருப்பஞ்சாற்றில் கலந்து இன்னும் - கிடைக்குமானால் - நல்ல கொம்புத்தேன், உயர்ந்த பன்னீர் இவற்றையுங்கூட அந்தக் கருப்பஞ் சாற்றில் கொட்டிக் கலந்து உலகத்திலில்லாத ஒரு நூதனமான சுவையை உண்டாக்க ஆசைப்படுகிறோம்.

இது மனித இயல்பு. ஆனால், மிருகங்களும் மற்ற ஜந்துக்களும்கூட, கிடைக்கிற இன்பங்களைக் கிடைக்கிறபடியே அநுபவித்து ஆசை தீர்ந்து நிம்மதியடைகின்றபோது, இந்த மனிதன் மட்டும் எது எவ்வளவு கிடைத்தாலும் அதில் திருப்தி அடைந்துவிடாமல் மேலும் மேலும் வெவ்வேறு இன்பங்களில் விருப்பம் கொண்டு அலைந்து திரிந்து, அல்லற்பட்டும் அலுத்துவிடாமல் புதுப்புது இன்பங்களைத் தேடிப் புகைந்து கொண்டேயிருக்கிறானே! —என்ற அவமதிப்பும் அடிக்கடி தோன்றுகின்றது. இந்த அவமதிப்பு மனப்பான்மை வருகிறபோதெல்லாம் மனிதப் பிறவி மற்றப் பிறவிகளைவிட மிகவும் மட்டமானது என்றுகூட ஏளனம் செய்ய நாம் கூசுவதில்லை.

ஆனால், உண்மையில் மனிதன் மற்றப் பிறவிகளைக்காட்டிலும் எல்லா விதத்திலும் ஏற்றமுள்ளவன். மிருகங்களுக்கும் மனிதனுக்கும் பொதுவாக உள்ள பஞ்சேந்திரிய ஆசைகளைமட்டும் வைத்துக்கொண்டு மனிதனையும் மிருகத்தையும் ஒத்திட்டுப் பார்க்கக் கூடாது. மனிதனைத் தவிர மற்ற எல்லாப் பிராணிகளுக்கும் பஞ்சேந்திரிய உணர்ச்சிகளைப் பற்றிய ஐந்து அறிவுகள்தான் உண்டு. மனிதனுக்குத் தான் இந்த ஐந்து இந்திரிய உணர்ச்சிகளுக்கும் அப்பாற்பட்ட ஆறாவது அறிவு என்று சொல்லப்படுகிற பகுத்தறிவு உண்டு. தக்கது - தகாதது, நல்லது - கெட்டது, உயர்வு - தாழ்வு என்று பகுத்துப் பார்த்து எதையும் சீர்தூக்க முயலுகின்ற இயல்பு இந்தப் பகுத்தறிவைச் சேர்ந்ததே.

மற்றப் பிராணிகளிடத்தில் இல்லாமல் மனிதனிடத்தில்மட்டும் இருக்கிற இந்தப் பகுத்தறிவுதான் இன்பங்களைத் தேடி அலைவது. ஒரே இன்பத்தை வெவ்வேறு விதமாக அநுபவிக்க விரும்புவதும் இந்தப் பகுத்தறிவுதான். மனிதன் அனுபவிக்கக்கூடிய ஐவகை இன்பங்களை ஐயாயிர வகை இன்பங்கள்போல எண்ணிக்கொள்ளப் பரபரத்து அலைவதுமட்டும் அல்லாமல் இந்த ஐந்து புலன்களுக்கும் அப்பாற்பட்டதாக ஏதேனும் புது இன்பம் இருக்கிறதா என்று ஏங்குவதும் இந்தப் பகுத்தறிவுதான்.

நம்முடைய புலன்களுக்குத் தட்டுப்படாமல் மறைந்து கிடக்கிற சக்திகளைக் கண்டுபிடித்து அந்தச்சக்திகளைக் கொண்டு வேறு புதிய இன்பங்களையோ, அல்லது இப்போதுள்ள இன்பங்களையேயானாலும் வேறு புது தினுசாக அனுபவிக்கும் முறைகளையோ அறிவதற்குத் துடிப்பதும் இந்தப் பகுத்தறிவுதான். அதற்காகப் புதுப் புது சக்திகளைக் கண்டுபிடிக்க விடா முயற்சியோடு வேலை செய்கிறபோது எதிர்பாராத பலவித நூதன எந்திர தந்திர சாதனங்களையும் கண்டுபிடித்து விட நேர்வதும்கூட இந்தப் பகுத்தறிவின் இன்ப வேட்டையின் விளைவேயாகும்.

இன்றளவும் மனிதன் கண்டுபிடித்துள்ள எல்லாவிதமான எந்திர தந்திர விஞ்ஞான விருத்திகளும், இன்பத்தை நாடி, சுகபோக சாதனங்களைத் தேடி, மனிதனுடைய பகுத்தறிவு பட்ட பாடுகளின் இடையில் இரண்டாம்பக்ஷமாகச் சல்லிவேர்கள் போல் (By products) கிடைத்த சரக்குகளேயாகும். மனித வர்க்கத்தின் இன்பத்தை எண்ணிச் செய்த முயற்சிகளின் இடையே கிடைத்த இந்த எந்திர தந்திர விஞ்ஞான வித்தைகள் (இப்போதுள்ள சூழ்நிலையில்) அடிக்கடி மனித வர்க்கத்துக்குத் துன்பம் செய்யவே உபயோகப்படுகின்றன என்பது வேறு விஷயம். அதைப் பற்றி இப்போது ஆராய்ச்சியில்லை. கொலைக்கருவியாக உபயோகப்படுத்தப்படுகிற ஒரு துப்பாக்கியும்கூட அதை வைத்திருக்கிறவன் அவனுடைய மனைவி மக்கள், பந்துமித்திரர், முதலானவர்களோடு தான் அனுபவித்து வருகிற இன்பத்தைக் கெடுத்துவிடக்கூடிய அன்னிய காரணங்கள் ஏற்பட்டால் அந்தக் காரணங்களைத் தொலைத்துத் தன்னுடைய இன்ப வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு உதவியாகத் துப்பாக்கி கருதப்பட்டதேயன்றி வெறும் கொலைக்கென்று மட்டும் கொண்டதல்ல.

மனிதன் கண்டுபிடித்துள்ள எல்லாக் கருவிகளும் பகுத்தறிவு தேடுகின்ற இன்ப வாழ்வைக் கோரியே ஏற்பட்டவை என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆதலால் அவைகளும் 'கலை'களின் கணக்கில் சேர்ந்தனவேயாகும். எனவே, மனிதனுடைய இன்ப நுகர்ச்சிக்குத் துணைபுரிகின்ற எல்லாச் செயல்களும் கருவிகளும் கலையறிவைச் சேர்வன.

புலன்களின் இன்ப நுகர்ச்சிக்கு உதவுகின்ற எல்லா வித்தைகளும் கலைகள் என்பது உண்மையானாலும் எல்லாக் கலைகளும் ஒரே தரத்தைச் சேர்ந்தவை அல்ல. எல்லாக் கலைகளும் ஒரேவிதமான பலனைக் கொடுக்கக்கூடியனவும் அல்ல.

மொத்தமாக இந்தக் கலைகளை இரண்டு இனங்களாகப் பிரிக்கலாம். ஒன்று புலன்களுக்கு இன்பம் உண்டாக்குவதோடு நின்றுவிடும். இன்னொன்று புலன்களுக்கு இன்பம் ஊட்டுவதை ஆரம்பமாக வைத்துக்கொண்டு புத்தியைக் கிளரச் செய்து செயலைத் தூண்டும்; அமைதியையும் அளிக்கும். முதலில் சொல்லப்பட்ட 'கலை' அறிவிற் கலக்காது. இரண்டாவது சொல்லப்பட்ட கலை அறிவிற் கலந்து சிந்தையைக் கிளப்பிச் செயலைப் பண்படுத்தும்.

வெறும் இன்ப நுகர்ச்சியைமட்டும் நாடிப் பல கலைகளைக் கண்ட பகுத்தறிவானது, பண்புகள் நிறைந்து பக்குவம் முதிர முதிர அந்த இன்பங்களை நிறுத்துப் பார்க்கக்கூடிய சுத்த அறிவாகத் தெளிவடைகின்றது. அந்த முதிர்ந்து தெளிந்த அறிவு எந்த இன்பம் எப்படிப்பட்டது என்று ஆராய ஆரம்பிக்கிறது. அப்படி ஆராயப் புகுந்தபின் அந்த அறிவு தான் இதுவரை அனுபவித்த எண்ணிறைந்த கலை வித்தியாசங்களில் எந்தக் கலை நெடு நேரம் அனுபவிக்கக்கூடிய உயர்ந்த இன்பத்தைத் தரவல்லது என்று தேடுகின்றது. அப்படித் தேடுகிறபோது, தான் இதுவரை அனுபவித்து வந்த எந்தக் கலை இன்பமும் தன் அறிவு இப்போது நாடுகின்ற உயர்ந்த நுகர்ச்சியைத் தரத்தக்கதாக இல்லாதிருப்பதைக் கண்டு, இந்தக் கலைகளை ஒவ்வொன்றாக ஆய்ந்து ஒதுக்கித் தள்ளிவிட்டு இவைகளுக்கு எட்டாத வேறு இன்பத்தை விரும்புகின்றது. அந்தப் புது இன்பம் எது என்று இந்த அறிவுக்கும்கூடச்சொல்ல முடிவதில்லை. தான் தேடுகின்ற புது இன்பம் இதுவரையில் தான் அனுபவித்த எந்தக் கலையிலும் இல்லையென்பது மட்டும்தான் தெரிகிறதேயல்லாமல் அந்தப் புது இன்பம் எப்படிப்பட்டது, எங்கே கிடைக்கும் என்று சொல்ல முடிவதில்லை.

இதை ஒரு நல்ல சரித்திர உதாரணத்தால விளக்குவது பயனுடைத்தாகும்:—

அமெரிக்காவில் 'ராக்வெல்லா' என்ற ஒரு மாபெரும் பணக்காரர் இருந்ததை அறிவோம். அவர் உண்மையாகவே கணக்குக்கு எட்டாத அளவு செல்வம் சம்பாதித்தவர். உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் இன்றைக்கும் அவர் பேரால் பலவிதமான தான தர்ம நிலையங்கள் நடந்து வருவதை அறிவோம். அவர் பணம் சம்பாதிக்க என்னென்ன வழிகளைக் கையாண்டார் என்று எவராலும் சொல்ல முடியாதென்று அவரைப்பற்றிச் சரித்திரம் எழுதின எல்லாரும் சொல்லுகிறார்கள். புகழத் தக்கதோ இகழத் தக்கதோ எந்த வழியிலானாலும் சரி, பொருள் சம்பாதிப்பது ஒன்றேதான் அவர் நோக்கமாம்.

இப்படி எல்லை காணமுடியாதபடி ஏராளமான குபேர சம்பத்தைக் குவித்து மூப்படைந்தபின் அவர் அத்தனைப் பணத்தையும் என்ன செய்வதென்று தெரியாமல் அதைப் பற்றிப் பல நண்பர்களிடம் ஆலோசனை கேட்டுக்கொண்டு வயது முதிர்ந்து தளர்ச்சியும் தள்ளாமையும் மேலிட்டுத் தம்முடைய கடைசிக் காலத்தைப் பல விதச் சிந்தனைகளில் கழித்துக்கொண்டு ஓய்ந்திருந்தார்.

ஒரு நாள் அவருக்கே ஏதோ ஒரு எண்ணம் தோன்றி, என்றும் இல்லாத மாதிரி கிறிஸ்துவ வேதமாகிய 'பைபிள்' என்ற புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு ஏகாந்தத்தில் அதைப் புரட்டிப் புரட்டிப் படித்துக்கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் அவருக்கு மிகவும் ஆப்தரான ஒரு நண்பர் அவரைப் பார்க்க வந்தார். மிகவும் நெருங்கிய நண்பரானதால் 'ராக்வெல்லரைத்' தேடிக்கொண்டு அவருடைய ஏகாந்த அறைக்கு வந்தார். ராக்வெல்லர் தலையைக் கவிழ்ந்தபடியே பைபிளைப் பார்த்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்து, நண்பர்வந்ததையும் கவனிக்கவில்லை. வந்த நண்பர் அசைவற்று நின்று ராக்வெல்லர் எந்தப் புத்தகத்தை வைத்துக்கொண்டு இவ்வளவு மெய்மறந்து இருக்கிறார் என்பதைக் கவனித்தார். கையிலிருக்கும் புத்தகம் பைபிள் என்பதைக் கண்டார் வந்த நண்பர். அது அவரை அதிசயத்தில் மூழ்கடித்து விட்டதாம். அதுநாள் வரையிலும் 'பைபிள்' போன்ற புத்தகங்களை வேலையற்ற வீணர்கள் வாசிக்கும் புத்தகம் என்று வெறுத்துப் பேசி வந்த ராக்வெல்லர் அதை விரித்து

வைத்துக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் மெய்மறந்திருப்பதைக் கண்ட நண்பர் அதிசயத்தில அமுழ்ந்திவிட்டது ஆச்சரியமல்ல.

நெடுநேரம் சென்றபின் ராக்வெல்லர் தாமாகவே தலையை நிமிர்ந்தபோது நண்பர் நிற்பதைக் கண்டு, வழக்கம் போல வரவேற்ருர். வரவேற்பு முடிந்தபின் வந்த நண்பர்
"அதென்ன பைபிளா?" என்ருர்
"ஆம்" என்ருர் ராக்வெல்லர்
"எது! வெகு புதுமையாக இருக்கிறதே! பைபிளில அவ்வளவு ஆழ்ந்த சிந்தனையோடு என்ன பார்த்துக் கொண்டிருந்தீர்கள்?" என்ருர் நண்பர்.

அதற்கு ராக்வெல்லர் புன்னகை செய்துவிட்டு "இவ்வளவு செல்வத்தைச் சேகரித்தும் இந்தச் செல்வத்தினுல் கிடைக்காமற்போன நிம்மதி இந்தப் புத்தகத்திலாவது இருக்குமா என்று பார்த்தேன்" என்ருராம்......

அதைப்போல, எவ்வளவோ கலைகளை அனுபவித்து இன்பம் நுகர்ந்த அறிவு அவற்றையெல்லாம் ஒவ்வொன்ருக உதறிவிட்டு நிலையான இன்பத்தைத் தரக்கூடிய கலை ஏதேனும் உண்டா என்று நினைக்கக்கூடிய நிலையையும் அடைகின்றது.

அந்த நிலையில், மனத்துக்கு ஒரு ஆறுதலைக் கொடுக்கக்கூடிய கலைதான் அறிவை இன்புறுத்தும் கலை. இந்தக் கலைதான் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட அறிவிற் கலந்து அறிவிற்கு இன்பமூட்டும் கலை. முதலிற் சொலலப்பட்ட கலை புலன்களுக்கு மட்டும் இன்பமூட்டும் சாதாரண வித்தை.

உலகத்தில் கலைகள்தான் நாகரிகத்தின் அளவு கோல. எல்லாக் கலைகளும் நாகரிகத்தைக் காட்டுவனவே. ஆனுலும் அறிவிற்கு இன்ப மளிக்கும் கலைதான் நாகரிகத்தின் சிகரம்.

தமிழர்கள் கலைகளிற் சிறந்தவர்கள் என்பது சரித்திர உண்மை. தமிழர்கள் நெடுங்காலமாகப் போற்றி வளர்த்து உலகுக்கு உதவியாயிருக்கின்ற எல்லாக் கலைகளும் அறிவுக்கு ஆக்கமும் அமைதியும் தரக்கூடியவை என்பதில் தடையில்லை. கலைகளைத் தெய்வத்துக்குச் சமானமாக எண்ணிக் கோயில்களில வைத்துக் கும்பிட்டவர்கள் தமிழர்கள். தமிழ்நாட்டிலுள்ள கோயில்களை யெல்லாம் கவனித்தால் அவற்றில் அறிவுக்கு நிம்மதி யளிக்கும் எல்லாக் கலைகளும் (fine arts) இன்னும் போற்றப்பட்டு வருவதைக் காணலாம். சிற்பம், சித்திரம், நடனம், நாட்டியம், சங்கீதம், இசைக் கருவிகளின் இனங்கள் முதலிய எல்லாக் கலைகளும் இந்தக் கோயில்களில் இன்னும் வரிசை பெற்று வாழ்ந்து வருவதைக் கண்டால் தமிழர் நாகரிகத்தின் சிறப்பையும் அந்த நாகரிகத்தின் பலனுகவே இவ்வளவு சீர்குலைந்துழலும் உலகப்போக்கில் இன்னும் தமிழ்நாடுதான் அமைதியிலும் அன்பிலும் சமரச சன்மார்க்க உணர்ச்சியிலும் தலைசிறந்து விளங்குகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆதலால் கலைகளின் முக்கிய நோக்கம் இன்பத்தை ஊட்டி, அத்துடன் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி, அறிவைத் துலக்கி, சிந்தனையைச் சுத்தப் படுத்தி, அன்பைப் பெருக்கி அமைதிக்கு வழி காட்ட உதவவேண்டும். அப்படிப்பட்ட கலைகளே சமாதானமுள்ள சமுதாயத்தை உண்டாக்கிச் சச்சரவுகளைக் குறைத்து மக்களின் இன்பத்தை வளர்க்கும். ஆகையினுல்

கலைஎன்ருல் உணர்ச்சிகளைக் கவர
வேண்டும்
களிப்பூட்டி அறிவினைப்போய்க்
கவ்வவேண்டும்
நிலைகொள்ளாச் சிந்தனையை நிற்கச்
செய்து
நீதிநெறி தெய்வநினைப் பூட்ட
வேண்டும்

அதுதான் கலை. அந்தக் கலைதான் நாகரிகத்தின் சரியான அளவுகோல்.

❖ வள்ளுவரைத் தமிழ் நாடு பெற்றெடுத்தது. ஆனால், அவரை உலகத்துக் கொடுத்தது.

❖ தமிழன் ஒரு செல்வத்தைக் கண்டான். அதனை உலகத்துக்கே வழங்க விரும்புகின்றான்.

தமிழன் கண்ட செல்வம்

●

திரு. அ. ச. ஞானசம்பந்தம், M.A.

★

இப்படி ஒரு செல்வம் இருக்கிறதா? அது எத்தகையது? இன்றைய உலகச் சந்தையில் செலாவணி ஆகக்கூடியதா அது? இத்தகைய வினாக்களை எழுப்பத் தோன்றுகிறதல்லவா? இத்தகைய ஒரு செல்வம் உண்டு என்பதை யாரும், தமிழறிந்த யாரும், மறுத்தல் இயலாது. அது எத்தகையது என்பதைப் பின்னர்க் காண்போம். ஆனால், இறுதி வினாவிற்கு விடை அளித்தல் ஒரு சிறிது கடினமாகவே இருக்கும். இன்றைய உலகச் சந்தையில் இச் செல்வம் செல்லாது. செல்லுமாறு செய்துவிட்டால் பின்னர் உலகம், சொர்க்கமாகவே மாறிவிடும். அணுக் குண்டைப் பற்றி யாரும் அஞ்சமாட்டார்கள். ஒருவரை ஒருவர் நம்பாமல் இருந்துகொண்டு, நம்புவதுபோல் நடித்துக்கொண்டு ஐக்கிய நாட்டுச் சபையில் கூடமாட்டார்கள். பெர்லின் பிரச்சினை இல்லாமல் போய் விடும். பாலஸ்தீனப் பிரச்சினை தீர்ந்து விடும். ஆம்! சுருங்கக் கூறுமிடத்து இவ்வுலகம் மனிதர்கள் வாழத்தக்கதாக மாறிவிடும். எப்பொழுது என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? தமிழன் கண்ட இச்செல்வத்தை, உலகோர் அனைவரும் பகிர்ந்து பெற்று அனுபவிக்கத் தொடங்கியவுடன் மேற்கண்ட நிலை தானே வந்து விடும். இதில் எவ்வித ஐயமும் யாரும் கொள்ளவேண்டியதில்லை.

தமிழர் பல பொருள்களைச் செல்வம் என்று கூறி இருக்கின்றனர். இன்று மேலை நாட்டார் பொருளை மட்டும் செல்வம் என்று கூறுவதைக் காண்கிறோம். ஆனால், தமிழில்தான் குழந்தைச் செல்வம், சொற் செல்வம் என்பன போன்ற தொடர்களைக் காண்கிறோம். அனுபவத்தைத் தரும் பொருள் எதுவாயினும் அதைச் செல்வம் என்று தமிழர் கருதிக் கூறினர் என்று நினைக்கவேண்டியுள்ளது. மேலே கூறிய இரண்டனுள் சொற் செல்வம் எல்லாருக்கும் கிடைப்பது ஒன்றன்று. அதனைப் பெற்ற அனைவரும் உலகம் போற்றும் பெரியார்களாகத் திகழ்ந்து இருக்கின்றனர். அத்தகைய செல்வத்தைப் பெற்றவர்கள் உலகை ஆட்டிவைக்கும் திறம் படைத்திருந்தனர். இது கருதியே வள்ளுவப் பெருந்தகை "விரைந்து தொழில் கேட்கும் ஞாலம், நிரந்(து) இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்று கூறிப் போந்தார்.

ஆனால், இத்தகைய சொற்செல்வங் கூட மேலே நாம் கூறிய பெரும் பயனைத் தருதல் என்பது இயலாத காரியம். மேலும், இச் செல்வத்தைப் பெற்றவர் உலகின் பல பாகங்களிலும் இருந்தனர்; இருக்கின்றனர்; இருப்பர். எனவே, தமிழன் கண்ட தனிச் செல்வம் இது என்று கூறுதல் பொருந்தாக் கூற்றாகும். இதனையடுத்து ஒருவகைச் செல்வத்தைத் தமிழ்ப் பெரியார் ஒருவர் குறிக்கிறார். "செல்வம் என்பது சிந்தையின் நிறைவு" என்ற முதுமொழி தமிழன் கண்டதுதான். உண்மையை ஆராயுமிடத்து, சிந்தையின் நிறைவை மிகச் சிறந்த செல்வம் என்று குறிக்க வேண்டும். ஏன் எனில், மற்றைய

பொருட் செல்வம் மதிப்பைப் (value) பெறுவது இச் சிந்தையின் காரணமாகவே அல்லவா? எவ்வளவு பொருள் இருப்பினும் நிறைந்த மனம் இல்லையாயின் என்ன பயன்? மேலும் பொருட் செல்வம் சிறிதும் இல்லாவிடினும், மனம் நிறைந்திருப்பின் அதுவே போதுமானதன்றோ? வாழ்க்கையை இன்பமாக நடத்தப் பொருட் செல்வம் பயன்படுகிறது. ஆனால், பொருள் நேரடியாக இன்பத்தைப் பயப்பதில்லை யல்லவா? மனம்தான் இன்பமும் துன்பமும் உண்டாகும் நிலைக்களன். எனவே, மனம் நிறைந்திருக்குமாயின் இன்பம் இடையறாமல் இருக்கும். செல்வத்தால் பெறும் பயன் இல்லையெனில் செல்வம் இருந்தும் ஒன்றுதான்; இல்லாமலும் ஒன்றுதான். பொருட் செல்வம் கிடைத்தமாத்திரத்தில் அதன் பயனாகிய இன்பம் வந்தே தீரும் என்று உறுதி கூறல் இயலாது. எனவே, ஐயப்பாட்டிற்கு இடமான பொருட் செல்வத்தைவிட, உறுதியாக இன்பந் தரவல்ல சிந்தையின் நிறைவைச் செல்வம் என்று பெரியார் கூறினார். இதுவும் சிறந்த கருத்துத்தான். ஆனால், சிந்தையின் நிறைவு இருந்தால் மட்டும் நாம் முன்னர்க் கூறிய பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? தீரா! சிந்தையில் நிறைவு இருப்பின் அமெரிக்கர், இரஷியர்களைக் கண்டு அஞ்சாமல் இருத்தல் கூடுமா? கூடாது. மேலும் சிந்தையின் நிறைவைப் பெற்று வாழ்க்கையில் மகிழ்ச்சி கிட்டாவிடினும், 'கிட்டாதாயின் வெட்டென மற' என்ற முதுமொழிக்கிணங்க அமைதியைப் பெற்று வாழும் சிறந்தார் உலகிடைப் பல பாகங்களிலும் இருந்தனர்; இருக்கின்றனர்; இருப்பர். எனவே, இதனைத் தமிழன் கண்ட தனிப் பெருஞ் செல்வம் என்று கூறுதல் ஒல்லாது.

வள்ளுவப் பெருந்தகை 'செவிச் செல்வம்' என்ற ஒன்றுபற்றியும் புகழ்ந்துரைக்கிறார். 'அச்செல்வம், செல்வத்துள் எல்லாம் தலை' என்றும் குறிக்கிறார். உண்மையிலேயே இது சிறந்த ஒன்றுதான். கேள்விச் செல்வம் எல்லார்க்கும் வாய்ப்பது ஒன்று அன்று. மேலே கூறிய 'சொற் செல்வம்' 'சிந்தை நிறைவுச் செல்வம்' முதலியன பெற்றவர்கட்குக் கூட இது வாய்ப்பது அரிதேயாம். செவியுடையார் அனைவரும் கேள்வி உடையார் என்று கூறுதற்கில்லை. காதில் விழும் ஓசை அலைகளை எல்லாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய காதுகள் நம்பால் இருக்கின்றனவே தவிரக் கேட்கவேண்டுவனவற்றை மட்டும் விரும்பித் தேடிச் சென்று பெறும் கேள்விச் செல்வம் நம்பால் இல்லை. இஃதுடையாரைப் பெரியார் என்று குறிக்கலாம். ஆனால், வெறும் கேள்வி அளவால் மட்டும் மனிதன் சிறந்துவிடுவான் என்று கூறுவதற்கில்லை. சிறந்த கேள்விச் செல்வம் பெற்றும், பிறருக்கு எடுத்துரைக்கும் அளவோடு நின்று தாம் பயனடையாதவர் உலகிடை நிறையவுளர். இவர்களை நோக்கிய பெரியார் 'ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையிற் பேதையார் இல்' என்று கூறிப் போந்தார். இக்கருத்தைத் தமிழர் பலகாலமாக அனுபவித்து அறிந்திருந்தனர். எனவே, வெறும் அறிவு வன்மை மட்டும் பெற்றவரைப் புகழும் வழக்கம் இந்நாட்டில் இல்லை. கேள்விச் செல்வத்தால் பெறவேண்டிய உண்மைப் பயனைப் பெறாமல் வெறும் அறிவை மட்டும் வளர்த்திருப்போரை இந்நாடு மதிக்கவில்லை. 'கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும், கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனி அமையும்' என்று மணிவாசகப் பெருந்தகையும், 'எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் என் இதயமும் ஒடுங்கவில்லை' எனத் தாயுமான அடிகளும் 'பலகற்றும் பல கேட்டும்............மனம் வெளுக்க வழியில்லையே' என்று கவிஞர் பாரதியாரும் கூறிச்சென்றமை மேற்கூறிய கருத்தை வலியுறுத்தல் காண்க. எனவே, கல்விச் செல்வத்தையுங் கூடத் தமிழன் கண்ட தனிப் பெருஞ் செல்வம் என்று கூறல் இயலாது. மேலும் இவற்றை உலகம் ஓரளவிற்குப் பெற்றுத்தான் இருக்கிறது. பெற்றிருந்தும் பயன் ஒன்றும் விளையவில்லை என்பது அனுபவம்.

பின்னர் எதனைத்தான் தமிழன் கண்ட செல்வம் என்று குறிக்கிறோம்? மேலே கூறிய அனைத்தும், கட்டுரையின் தொடக்கத்தில் கூறிய குறைகளைப் போக்கக் கூடியன அல்ல என்பதைக் கண்டோம். எனவே, அவற்றைப் போக்கக்கூடிய பொருள் ஒன்று உண்டா என்று ஆராய்தல் தக்கதே

யாம். துன்பம் ஒன்றைப் போக்குதற்கு இரு வழிகள் உண்டு. ஒன்று, அந்தச் சமயத்திற்கு ஏற்படும் துன்பத்தைமட்டும் நீக்கும் வழியாகும். இவ்வகை முயற்சியால் துன்பம் அப்பொழுது நீங்கினும் பின்னர் இரட்டிப்பு வலிவுடன் வந்து தாக்கும். ஆனால், அடுத்துள்ள வழி யாதெனில் துன்பத்தின் அடிப்படையை ஆராய்ந்து அதையே போக்க முயலுதல் ஆகும். மருத்துவ முறையிலும் இவ்வழியே சிறந்தது என்பதை 'நோய் நாடி, நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்' என்று குறித்தார் பொதுமறைப் பெரியார். உடல் பற்றிய நோய்கட்குமட்டும் இவ்வழி சிறப்பு என்று கொள்ள வேண்டுவதின்று. மனம் பற்றிய நோய்கட்கும் இதுவே சிறந்த வழியாகும்.

இன்று உலகைப் பிடித்து ஆட்டும் துன்பங்களும், துயரங்களும், எத்தனை என்று கணக்கிடுதல் ஒல்லாது. ஆனால், துன்பம், துயரம் என்ற முறையில் அவை பல திறப்படினும் அவற்றின் காரணத்தை அல்லது அடிப்படையை ஆராய்ந்தால் ஒரே பொருளில் அது அடங்கி விடும். அப் பொருள் எது எனில், அதுவே 'ஆசை' என்பதாகும். நாடு பிடிக்கும் ஆசை கொண்ட வல்லரசுகள் சில. தாங்கள் கொண்ட ஆட்சி முறையே சிறந்ததென்று நம்பிக்கொண்டு அம்முறையைப் பிற நாடுகளிடம் திணிக்க ஆசை கொண்டுள்ள வல்லரசுகள் சில. இவற்றின் இடைப்பட்டு அல்லற்பட்டு வாழ ஆசை கொண்டு வழி தெரியாமல் தவிக்கும் நாடுகள் சில. எல்லாருக்கும் ஆசையே அடிப்படையாக இருத்தல் கண்கூடு. அதனால் ஒன்றை ஒன்று நம்பாமல் நம்புவது போல் நடித்து ஏமாற்ற முயல்கின்றன. இந்நிலை எப்பொழுது நீங்கும்? உலகில் அமைதியை எவ்வாற்றானும் நிலைநிறுத்த வேண்டும் என்று தொண்டை கிழிய ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதியும் அலறிக் கொண்டிருக்கும் பொழுதே அவரவர்கள் நாட்டில் ஆயுத உற்பத்திப் பெருக்கம் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. இரும்பு பிடித்தவன் கை சும்மா இருக்கப்போவதில்லை.

உலகில் அமைதி நிலவ வேண்டுமாயின் வழி என்ன? இதற்கு வழியே இல்லையா? அணுக் குண்டிற்கு இரையாகி உலகம் அழிய வேண்டுவதுதானா? இன்று உலகைப் பிடித்து ஆட்டுவிக்கும் சூழ்நிலையிலிருந்து விடுபடும் வழி யாது? இந்த ஒரு ஐக்கிய நாடுகள் சபை அல்ல, இதைப் போல ஆயிரம் சபைகள் தோன்றினாலும் சரி. உலகில் அமைதி நிலவச் செய்ய இயலாது. இவற்றின் கதி பழைய உலக நாடுகளின் கழகம் 'லீக் ஆப் நேஷன்ஸ்' அடைந்த கதிதான். பின்னர் எப்பொழுது வழி பிறக்கும்? பழந்தமிழன் கண்ட ஒரு செல்வத்தை இவர்கள் பெற வேண்டும். பெற்றால் உய்ய வழி உண்டு. 'அது வேண்டும், இது வேண்டும், பாதுகாப்பு வேண்டும் படை வேண்டும்' என்று கூக்குரலிடும் இன்றைய உலகம் அத் தமிழன் செல்வத்தைப் பெற வேண்டும். அது எத்தகைய செல்வம்? ஏனைய செல்வங்கள் அனைத்தினும் விழுமிய தொன்றாகும் அது. அச்செல்வம் ஒன்றை மட்டுந்தான் பொய்யா மொழி புகன்ற பெரியார் 'விழுச் செல்வம்' என்று குறிப்பிடுகிறார். அதனை ஒத்த செல்வம் இவ்வுலகில் மட்டுமன்று, வேறு எவ்வுலகிலும் இல்லை என்றும் அறுதியிட்டுக் கூறுகிறார். **"வேண்டாமை யன்ன விழுச் செல்வம் ஈண்(டு) இல்லை, யாண்டும் அஃ(து) ஒப்ப(து) இல்"** என்ற குறளால் தமிழன் கண்ட அப் பெருஞ் செல்வம், விழுமிய செல்வம், உலகின் துயர் போக்குஞ் செல்வம், மனித சமுதாயத்தின் துயர் துடைக்குஞ் செல்வம், ஒப்புவமை இல்லாத செல்வம் எது என அறிகிறோம்.

'வேண்டாம்' என்பது ஒரு செல்வமா! என்னே இத்தமிழன் பெருமை! செல்வத்தைப் பெற்றால் கிடைப்பது இன்பம். இன்பம் என்பது அமைதி. எனவே, அமைதியைத் தவருது எதுவாயினும் அது செல்வந்தானே? வேண்டாம் என்பதைக் காட்டிலும் அமைதி தருவது எது? ஒரு பொருள் வேண்டும் என்று ஆசை தோன்றினால் உடனே அதனை அடைவதற்குரிய முயற்சிகள் தொடங்குகிறோம். முயற்சியில் துன்பம். முயற்சி முற்றுப்பெறுமற் போமேயானால் துன்பம். ஒரோவழி முயற்சி முற்றுப்பெறினும் பயனைப் பெறும் பொழுது வெறுப்புத் தோன்றி அமைதியை இழக்க நேரிடுகிறது. எனவே அடிப்படையிலேயே 'வேண்டும்' என்ற ஆசையைக் கிள்ளிவிடின் முற்றிலும் அமைதியை அடையலாமன்றோ?

ஏனைய செல்வங்கள் ஒரோவழி இன்பந் தந்து பல சமயம் இன்பந் தாரா தொழிதலானும், இச்செல்வம் ஒன்றுமட்டுமே எப்பொழுதும் இன்பந் தருதலானும் இதனை 'விழுச் செல்வம்' எனத் தமிழன் கூறினான்.

இப்பொழுது நினைத்துப் பாருங்கள். இன்று ஐக்கிய நாடுகளின் சபையில் கூடி இருக்கும் பெரியோர்களும் அவர்களை அனுப்பி வைத்த நாடுகளும் வேண்டாமை என்னும் விழுச் செல்வத்தைப் பெற்றிருப்பார்களேயாயின் இப்படி அச்சபை பயனற்றுப் போகுமா? உலகில் பிறனுக்கும்-வாழ, அதுவும் அவன் விருப்பம்போல் வாழ, உரிமை உண்டு என்று நினைப்பதே போதுமானது. அதிலும் தன் நலன்களைக் குறைத்துக்கொண்டாயினும் பிறன் வாழட்டும் என்று நினைத்தால் உலகம் சொர்க்கமாக மாறிவிடாதா? அப்படி வாழுவதற்கு எத்தகைய மனப்பான்மை வேண்டும்? 'வேண்டாமை' நிறைந்த மனப்பான்மை என்பதில் தடை கூறல் முடியுமா? இவ்வொரு செல்வம் இல்லாமல் ஏனைய செல்வங்கள் எவ்வளவு நிறைந்திருப்பினும் பயனில்லை யல்லவா? உலகை உய்விக்க வந்த பெரியார்கள் அனைவரும் போற்றிக் கொண்ட செல்வம் இஃதொன்றே யாகும். இச்செல்வத்தைப் பெற்ற பின்னரே அவர்கள் பெரியார்கள் ஆனார்கள்,

சாவா மருந்தாகிய நெல்லிக் கனியைத் தான் உண்ணாமல் அவ்வைப் பிராட்டிக்கு அளித்துப் புகழ் பெற்ற அதியமானும், குமண வள்ளலும், பாரி முதலாயினவர்களும், சமயத் துறையில் உலகிற்கு நல்வழி காட்டிய ஏசு. புத்தர் போன்ற பெரியார்களும் பெற்றிருந்த பெருஞ் செல்வம் இதுவே தான். இதனையே 'துறவு' (அகத் துறவு) என்று தமிழன் கொண்டான். எனவே, இத்தகைய ஓந அருஞ் செல்வத்தை, விழுமிய செல்வத்தை இன்றைய உலகம் போற்றி ஏற்றுக் கொண்டால் ஒழிய அது வாழ வழி இல்லை. அந்த அழிவு நிலை வருமுன்னர்த் தமிழன் கண்ட 'வேண்டாமை' என்ற விழுச் செல்வத்தை உலகம் ஏற்றுக் கொள்வதாக

●

"கலைக் கதிர்"

மாத வெளியீடு

செந்தமிழ்க்குத் தொண்டு	பயன்மிக்க கட்டுரைகள்
சிந்தனைக்கு நல்விருந்து	சுவைமலிந்த கற்பனைகள்

முழுவதும் கிளேஸ் காகிதம்.

சந்தா விபரம்

வெளி நாடு	உள் நாடு
ஆண்டுச் சந்தா ரூ. 9.	ஆண்டுச் சந்தா ரூ. 6.
தனிப்பிரதி அணா. 12.	தனிப்பிரதி அணா. 8.

"கலைக் கதிர்"

பூளைமேடு போஸ்ட், கோவை.

ஏற்றத் தாழ்வு மலிந்துபோய்க் கிடக்கும் இந்த நாற்றச் சமுதாயத்திலே 'உயரப்ப'ருக்கும் 'ஒடப்ப'ருக்கும் – பணக்காரனுக்கும் ஏழைக்கும் – இடையேதான் போராட்டம் ஏற்படும் என்பதில்லை. ஏழைக்கும் பரம ஏழைக்கும், தரித்திரத்துக்கும் மகா தரித்திரத்துக்கும் இடையிலேகூட அந்தப் போராட்டம் நிகழலாம்............

எச்சில் இலை

திரு. ரா. கி. ரங்கராஜன்

பூட்டிக் கிடந்த கடையின் கதவு இடுக்குகள் வழியாக உள்ளே கடியாரம் மணி அடிக்கும் சத்தம் அரைகுறையாகக் காதில் விழுந்தது. பாதித் தூக்கமும் பாதி விழிப்புமாக இருந்தேன் அப்போது.

கண்ணைப் பாதி திறந்தேன்; சாலையில் நல்ல வெளிச்சம் பரவிவிட்டது. ஆனால், ஜனநடமாட்டம்தான் இன்னும் காணோம். குடுகுடுப்பைக்காரன் தன் தொழிலைக் கவனிக்கப் புறப்பட்டுவிட்டான்; கடியாரம் ஏழு அடித்து முடிவதற்குள் இவனையும் பார்த்துவிடலாம். அவனுடைய 'ரூட்டி'த் தெருவெல்லாம்கூட எனக்குத் தெரியும்...... முதலில் மேல வீதி; அதைத் தாண்டிப் புதுத் தெரு; அப்புறம்.........அப்புறம், சோலையப்பன் தெருவா, இல்லை அக்கிரகாரமா? சரியாய் நினைவு இல்லை...... அவனுக்கென்ன குறைவு? கொடுத்து வைத்தவன் .... சரியாய்ப் பன்னிரண்டு மணிக்கு இதே வழியாய்த்தான் திரும்பி வருகிறான். 'ரூட்டி'க்குக் கிளம்பும்போது என்னைப்போல இருந்த அந்தக் கந்தல் பை, திரும்பும்போது நம்ம ஓட்டல் அய்யர் வயிறு மாதிரி.........

சைகிள் பால்காரனும் மணியடித்துக்கொண்டு கிளம்பிவிட்டானே? குடுகுடுப்பைக்காரன் சைகிள்காரனைப் பார்த்துக்கொண்டு கிளம்புகிறானா அல்லது சைகிள்காரன் குடுகுடுப்பைக்காரனை.........

புரண்டு படுத்துக்கொண்டேன்; அநியாயக் குளிர்! இதென்ன இப்படி ஆளைக் கொல்லுகிறது? இந்த அஞ்சு வருஷத்தில் இப்படிப்பட்ட குளிரைக் கண்டதேயில்லை. ஆனால், கோடி விட்டுப் பஜனை அய்யர் மட்டும் இந்தக் குளிரிலேயே ஆற்றங்கரைக்குப் போய்க் குளித்துவிட்டு, விபூதி பட்டை பட்டையாய்ப் போட்டுக்கொண்டு இதற்குள்ளே திரும்பிவிடுகிறாரே! அய்யர் தேகம் நல்ல வயிரம் பாய்ந்த கட்டை – எதையும் தாங்கும்!

கையை மடித்து வைத்துக்கொண்டு காலையும் மடக்கிக்கொள்ள வேண்டியதுதான்...... என்ன செய்து என்ன? மேல் துணியிலே நூலைவிடக் கிழிசல்தானே அதிகமாயிருக்கிறது? குடுகுடுப்பைச் சாயபுவும் எத்தனை தடவைதான் ஊசியும் நூலும் கொடுப்பான்?...... நேற்று மாட்டவே மாட்டேன் என்று சொல்லிவிட்டான்......

சரி, சரி; எழுந்திருக்கவேண்டியதுதான். பொழுது நன்றாக விடிந்துவிட்டது. வண்டிச் சத்தம், மாட்டுச் சத்தம், மனுசன் சத்தம் எல்லாம் கிளம்பிவிட்டன வழக்கம்போல. கடைக்கார நாயுடு வருவதற்குமுன்னே எழுந்து நடையைக் கட்டவேண்டும். இந்த அஞ்சு வருஷத்தில் ஒரு முறைகூட அவன்கிட்டே திட்டுக் கேட்டது கிடையாது. இன்றைக்கு மட்டும் கெட்ட பெயர் சம்பாதித்துக் கொள்ளுவானேன்...... அதோ, அவனும் வந்து

விட்டான். கோடிக் கடையிலே சாவியை வாங்கிக்கொள்ள நுழைகிறான். அந்த முதலியிடம் இவனுக்கு என்ன அவ்வளவு நம்பிக்கை? கடையைப் பூட்டுகிறவன் சாவியைத் தன் வீட்டுக்கே எடுத்துப்போகக்கூடாதோ? ராத்திரி பதினொரு மணிக்குக் கடையைப் பூட்டிச் சாவியை முதலியிடம் கொடுத்துவிட்டுப் போவான்; காலையில் ஏழே கால் மணிக்கெல்லாம் வந்து அவனிடம் சாவியை வாங்கிக்கொண்டு கடைக்கு வருகிறான். இது ஏன் என்று மட்டும் எனக்கு இன்றுவரை விளங்கவேயில்லை. நாயுடு வீடு எங்கே இருக்கிறது? அதுவும் தெரியவில்லை. முதலிக்கு மட்டும் வீடு, கடை எல்லாம் அந்தப் பத்தொன்பதாம் நம்பர்தான். பயலுக்குக் காசிலேயே குறி – ராத்திரி பன்னிரண்டு மணிக்குக் கடையைப் பூட்டிக் காலை ஆறு மணிக்குத் திறந்துவிடுகிறான்.

ஓகோகோ, நாயுடு இதோ வந்துவிட்டானே, புறப்படவேண்டியதுதான். எழுந்து உட்கார்ந்து, ஒரு தடவை நன்றாய்ச் சோம்பல் முறித்துக் கொள்ளலாம் - பாழும் கட்டை என்ன வலி வலிக்கிறது!

குளிர் வெடவெடவென்று நடுக்குகிறது; ஆற்றங்கரைக்குப் புறப்பட்டேன். காலையில் குளிக்காமல் என்னால் ஒன்றும் செய்யமுடியாது. இருக்கிற கந்தையையும் கசக்கிவிட்டுத்தான் கட்டிக்கொள்வது. இது அஞ்சு வருஷப் பழக்கம். அப்போதும் இப்படித்தான் ஊர் சுற்றிக்கொண்டிருந்தேன். மத்தியானம் மூன்று மணி இருக்கும். திடீரென்று மழை பிடித்துக்கொண்டது. காலத்தில் பெய்யாத மழையெல்லாம் அகாலத்தில் பெய்வதுதான் வழக்கமாகிவிட்டதே! சட்டென்று பக்கத்தில் தெரிந்த சுவர் ஓரமாக ஒண்டிக்கொண்டேன். தலைக்கு மேலே, கட்டிடத்தின் ஓட்டுக் கூரை நீட்டிக்கொண்டு, கொஞ்சம் பாதுகாப்பு அளித்தது. அதற்கும் ஏழே ஒரு சன்னல். உள்ளேயிருந்து வந்த சத்தத்திலிருந்து அது ஒரு பள்ளிக்கூடம் என்று தெரிந்துகொண்டேன். சத்தம் திடீரென ஓய்ந்தது. "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்று வாத்தியாரின் அடிக்கோ அல்லது வேறு எதற்கோ பயந்துகொண்டே ஒரு பையன் அழுத குரலில் சொன்னான். மழைநின்றுவிட்டது; நானும் மேலே நடையைக் கட்டினேன். ஆனால், இந்தப் புதிய பழக்கம் மட்டும் பிடித்துக்கொண்டது.

ஆற்றங்கரைக்கு இவ்வளவு சீக்கிரமாக யார் வரப்போகிறார்கள்? அக்கிரகாரத்துக்குப் போகவேண்டிய தயிர்க்காரி மட்டும், வழக்கம்போலச் சட்டியிலே ஆற்றுத் தண்ணீரை எடுத்து ஊற்றிக்கொண்டிருந்தாள். அவளும் பிழைக்கவேண்டுமே, பாவம்! எப்போதும்போல ஓட்டல் அய்யரும் சற்றுத் தள்ளி நின்றுகொண்டிருந்தார். காலைக் கடன்களுக்கு அவர் கண்டுபிடித்த சரியான இடம், 'லயன் கரை' தான்.

படித்துறை வழியாக இறங்காமல், அந்தண்டைப் பக்கமாக இறங்கினேன். என்னுடைய வழக்கமான இடம் அதுதான். இஷ்டப்பட்டால் அங்கே நீச்சல் அடிக்கலாம்; அமர்ந்தும் குளிக்கலாம். இந்த மாசத்திலே தண்ணீர் என்ன வெள்ளமாகவா ஓடும்? கரையை அரித்தாற்போல ஓரமாகச் 'சள சள' வென்று ஓடிக்கொண்டிருக்கிறது; குளிருக்கு இதமாக இளவெயில் கிளம்பிவிட்டது. ஆகா! இந்தக் காட்சி கண்ணுக்கு எவ்வளவு அழகாயிருக்கிறது! நம்ம கன்னையா தாஸ் இதைப் பார்த்துவிட்டு, காலணாப் புத்தகம் போட்டு, அன்றைக்குக் கடைத்தெரு முடுக்கிலே பாடினானே? என்னமாயிருந்தது! அடடா...... கன்னையா தாஸ் பாட்டுக்கு ஈடு இணை ஏது?

குளித்துக் கரையேறி, கந்தையையும் நன்றாய்க் கசக்கினேன். படித்துறைக் கைப்பிடிச் சுரிவன் மேலே ஏறி, தென்னை மட்டையில் வேட்டியின் இரு நுனியையும் கட்டினேன். உலருகிற வரையில் உட்கார்ந்திருக்கவேண்டியதுதான். வெயில் போதாது; கொஞ்சம் மெல்லத்தான் துணி உலரும்.

ஒரு மணி நேரம் வெட்டியாக உட்கார்ந்திருக்கவேண்டியதாயிற்று. சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. ஆற்றில் நடக்கும் வேடிக்கை விநோதங்களையெல்லாம் பார்த்துக்கொண்டுதான் உட்கார்ந்திருந்தேன். கடைசியில் வேட்டியும், மேல் துணியும் ஒருவழியாகக் காய்ந்து உலர்ந்தன. வெயில் அதிகம் இல்லாவிட்டாலும், நல்ல காற்றாவது இருந்ததே.

ஆற்றங்கரை வேலை முடிந்ததும், ஊரைச் சுற்றப்புறப்பட்டேன். மணி

பத்துத்தான் ஆகிறது. பன்னிரண்டு மணிக்குத்தான் எனக்குச் சாப்பாட்டு வேளை.

சுற்றினேன், சுற்றினேன், சுற்றினேன் – மணியும் பதினொன்றரை ஆகிவிட்டது. அய்யர் ஓட்டலுக்குப் போய்ச் சேரும்போது வேளை சரியாயிருக்கும். இவ்வளவு தூரம் நடந்ததில் பசியும் எடுத்துவிட்டது. இதோ, ஒரு நாய்... கல்லை எடுத்தேன் – சரியான குறி, பேஷ்!...... ஊரிலே நாயே இல்லாமல் பண்ணிவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

அய்யர் 'ஓட்டல்' வந்தாகிவிட்டது. வெள்ளைச் சட்டை, வெள்ளை வேட்டி கட்டிக்கொண்டு, மேஜை முன்னால், நாயுடு கடைப் பூட்டைப் போலக் கறுத்துப் பெருத்த ஒரு உருவம் உட்கார்ந்திருக்கிறதே, அதுதான் அய்யர். அய்யருக்கு இந்த ஓட்டலில் ரொம்பச் சுமாரான வருமானம்தான். பெண்டாட்டியைப் பறிகொடுத்தவன், ஊருக்கு அனுப்பியவன், கல்யாணமே பண்ணிக்கொள்ளாதவன் ஆகிய ஆசாமிகளுக்கெல்லாம் அய்யர் கடைதான் 'மாமியா வூடு'. வழக்கமாகச் சாப்பிடுகிறவர்கள் பத்துப்பேர் – நான் உள்பட – இருப்பார்கள். உதிரியாக இரண்டு மூன்று – அத்தோடு சரி. உதவிக்கு ஒரு மலையாள வேலைக்காரன், இரண்டு பார்ப்பான். ஏதோ தானும் சாப்பிட்டுப் பிறனுக்கும் போடுகிறான். ஊரில் ஒரே ஓட்டல் – சாப்பாடும் மோசமில்லை. வேறே என்ன வேண்டும்?

இப்படி – வாசலிலேயே, முனிசிபாலிட்டி குப்பைத்தொட்டிக்குப் பக்கத்திலேதான் 'நம்ம' வழக்கமான ஆசனம்; இந்த ஊருக்கு வந்தநாள் முதற்கொண்டு அஞ்சு வருஷமாக இந்த அய்யர்தான் சாப்பாடு போடுகிறார். அய்யர் போடுகிறார் என்றா சொன்னேன்? அதுகூடச் சரியில்லை – அய்யர் ஓட்டலில் சாப்பிடுகிறவர்கள் எனக்கும் ஏதோ மிச்சம் வைத்துப் போட்டுவிட்டுப் போகிறார்கள். அவர்கள் குடும்பம் – அப்படி ஒன்று இருந்தால் – நன்றாக இருக்கட்டும்! எத்தனையோ பெரிய மனிதன்களும், பெரிய கடைகளும், பெரிய கம்பெனிகளும், என்னை ஒன்றுக்குமே உதவாதவன் என்று உதறித் தள்ளிய பிறகு இங்கே வந்துதான் தஞ்சம் அடைந்தேன்.

இந்த ஓட்டல் என்னைக் கைவிடவில்லை; காப்பாற்றுகிறது.

600 008

இதற்கும் இப்போது இரண்டு வருஷமாய்ப் பஞ்சம வந்துவிட்டதே! என்னமோ ரேஷனாம, பஞ்சமாம். கடைத்தெரு நொண்டி சொல்லுகிறான். முன்போல இலைகளில் அவ்வளவு சோறோ, கறியோ மிஞ்சுவது கிடையாது. இருந்தாலும் இது போதும எனக்கு.

இதைவிடச் சுகமான வாழ்க்கை வேறு எங்கே கிடைக்கப்போகிறது? அய்யர் ஓட்டலில் பகல் சாப்பாடு முடிந்ததும் தெம்மாங்கு மண்டபத்தில் களைப்புத் திரப் படுக்கை; மாலை வேளையில் மறுபடி ஊர் சுற்றப் போவேன்; இரவு மறுபடி அய்யர் கடை; பிறகு நாயுடு கடை வாசலில் சுகமான தூக்கம்...... ஆகா, என்ன சுகம்!

சில பைத்தியக்காரர்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள். அன்றொரு நாள் சாயங்காலம திடல் பக்கம் போயிருந்தேன். பெரிய கூட்டம் கூடியிருந்தது. ஏதோ ஒரு கொடி பறந்து கொண்டிருந்தது. யாருக்கோ உணவு இல்லாவிட்டால் எதையோ அழித்து விடுவோம் என்று ஒரு ஆசாமி பாடிக் கொண்டிருந்தான. அதற்குப் பிறகு ஒரு நோஞ்சல் ஆசாமி பேசினான். 'உலகத்திலே பசியே இருக்கக்கூடாது' என்றெல்லாம் தொண்டை - கிழியக் கத்தினான். என் பக்கத்தில் நின்றிருந்த கடைத்தெரு நொண்டி "ஏலே, பாத்தியாடா எப்படிப் பேசுறான்னு?" என்று கேட்டான். "போடா! நீ ஒரு மடையன்; அவன் ஒரு மடையன்" என்று சொல்லிவிட்டு, விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டே வந்துவிட்டேன். சுத்தப் பைத்தியம்! பசி என்று யாருக்கு எங்கே இருக்கிறது? பிச்சைக்காரன் என்று எவன் இருக்கிறான்?...... நல்ல வேடிக்கை - இந்தச் சுகமான வாழ்க்கை உள்ள வரையிலும் வேறே என்ன வேண்டும்? இதிலே......

இல்லை, இல்லை; ஆனால், ஆனால்... இன்னும் ஒரே ஒரு தடை இருக்கிறது. அதை எப்படித் தாண்டுவது என்றுதான் தெரியாமல் தவிக்கிறேன். ஒரு நாளா, இரண்டு நாளா, ஒரு வருஷம் ஆகிவிட்டதே! முழு வயிறுச் சோறு தின்னவொட்டாமல் அடிக்கிறதே, இந்தச் சொறி நாய்? இதை எப்படித்

தொலைத்துத் தலை முழுகுவது? எப்பொழுதோ ஒரு நாள் போனால் போகிறதென்று தூக்கியெறிந்த ஒரு கவளச் சோறு எனக்கே விரோதியாக முளைத்துவிட்டதே? இதை.........

ஆள் அரவம் கேட்கிறது. ஓட்டலுக்கு உள்ளேயும் சத்தம் கேட்கத் தொடங்கிவிட்டது. இதோ சிலுக்கு ஜிப்பாக்காரன்– இரண்டு வருஷத்துக்கு முந்தி முதல் தடவையாகப் பார்த்தபோது இருந்த அதே ஜோரில்- வருகிறான, வண்ணான் மடிப்புக் கலையாத சட்டை வேட்டி! தங்க மூக்குக் கண்ணாடி..................வழக்கமாக ஒரு இலையிலே மட்டும் நிறையச் சோறும் கறியும் மிஞ்சிக் கிடக்கிறதே, அது இவன் இலைதான் போல் இருக்கிறது. பணக்காரனே வயிற்று வலிக்காரன்தானே?

இந்தப் பள்ளிக்கூட வாத்தியார் நாலு மாசத்துக்த் முன்னே பெண்டாட்டியைச் சர்க்கரைப் படித்துறைக்கு எடுத்துப்போனார். (சர்க்கரைப் படித்துறைதான் எங்கள் ஊர்க்காரர்களின் கடைசி வாசஸ்தலம்.) மறுநாள் முதல் இங்கேதான் சாப்பிடுகிறார். ஆள் அப்போதைக்கு இப்போது ஒரு சற்றுப் பருத்திருக்கிறார் என்றுதான் தோன்றுகிறது... ... சரி, சரி; சட சட வென்று ஏகப்பட்ட பேர் நுழைய ஆரம்பித்துவிட்டார்கள் ... ...

எல்லோரும் போன பிறகு அரை மணி கழித்துச் சாவதானமாக வருகிறானே, இந்தப் பையன், அவனை என் அண்ணனாகவே மனசுக்குள் நினைக்கிறேன். இந்தப் பையன் எங்கே இருக்கிறான், என்ன பண்ணுகிறான் என்பது மட்டும் தெரியவில்லை. கிழிசல் சட்டையும், அழுக்கு வேட்டியும், பரட்டைத் தலையும், ஒட்டி விழுந்த கன்னமும்— பரவாயில்லை; இவனுக்கு நான் மன்மதன்தான். எப்போதும் சட்டைப் பையிலும் கையிலும் ஒரே மசியாயிருக்கிறது. வரும்போதெல்லாம் கையில் ஏதாவது ஒரு புத்தகமோ, கட்டுக் கடுதாசிக் குப்பையோ வைத்திருக்கிறான். வழக்கமாக ஒரு மிளகாய், கருவேப்பிலைகூட மிச்சம் இல்லாமல் இலையைச் சுரண்டி விட்டது போல வந்து விழுகிறதே, அது இவனுடைய தாய்த்தான் இருக்கவேண்டும்......

பொத்தென்று முதல் கத்தை விழுந்தது. நாலு இலை... அரை வயிற்றுச் சோறும், கொஞ்சம் கத்தரிக்காய்க் கூட்டும் தான் கிடைத்தன– ஓ! இன்று வெள்ளிக்கிழமையோ? கூட்டுத்தான்— ஐயோ, அந்தச் சொறி நாய், என் ஜன்ம விரோதி வந்துவிட்டதே? இதோ கவ்வுகிறது– அடிக்கக் கையை ஓங்கினேன்— வள்ளென்று குலைத்துக் கொண்டே மேலே பாய்ந்தது; வழக்கம்போல் பயந்து ஒதுங்கி விட்டேன். இலையை இழுத்துக் கொண்டே ஓடிற்று– இருந்த சோறெல்லாம், கூட்டெல்லாம், மண்ணோடு மண்ணாய் புரண்டன– அவ்வளவும், அவ்வளவும் போய்விட்டது. இனி விழப்போகிற இலைகளில் ஏதாவது இருக்குமோ, இருக்காதோ?

வாரத்தில் பாதி நாளைக்குமேல் இதே கதைதான்; அரைவயிற்றுச் சோறு! இதற்கு வழி என்ன? நாலு மாசம் முன்னே பட்ட அனுபவம் மறக்கவில்லை. அன்று ஒரு கல்லை எடுத்து அடித்தேன், சாதாரண நாய்தானே என்று! மேலே விழுந்து, கையில் வெடுக்கென்று பிடுங்கிவிட்டது. எச்சில் இலையிலே பங்குக்கு வரும் இந்த மிருகம், ரோசமுள்ள, பைத்தியம் பிடித்த சொறி நாய்! அந்தக் காயத்துக்கு மருந்து போட்டுக்கொள்ளத் தர்ம ஆஸ்பத்திரிக்குப் போகும்படி குடுகுடுப்பைக்காரன் சொன்னான்; ஒரு வாரம் எதையோ மருந்தைத் தடவிவிட்டு விட்டுப் "போடா!" என்று அனுப்பிவிட்டார்கள். ஆனால், காயம் முழுவதும் ஆற இரண்டு மாதங்கள் பிடித்தது. மறுபடியும் இதன் வம்புக்கு எப்படித் துணிந்து போவேன்?...

சில்லென்று முதுகில் ஏதோ தெறித்தது–திரும்பிப் பார்த்தேன். சிலுக்குச் சட்டை மைனர், சாப்பாட்டை முடித்துக்கொண்டு திரும்பும் போது, தெரு ஓரத்திலே ஆள் உட்கார்ந்திருப்பது தெரியாமல் எச்சில் துப்பிவிட்டுப்போகிறான். ஒரு நிமிஷம் கோபமும் ஆத்திரமும் வந்தன. ஒரு நிமிஷம்தான்– அப்புறம், முதுகைத் துடைத்துவிட்டுக் கொண்டேன். இரண்டு வருஷமாக இந்தப் புண்ணியவானின் எச்சிலை உள்ளேயே செலுத்திவருகிறேன். அதுதான் என் உடம்பையும் உயிரையும் வளர்த்து வருகிறது. அந்த எச்சில் உள்ளே

போனால் என்ன, மேலே பட்டால் என்ன?

பிறகு வந்து விழுந்த இலைகள் ஒன்றும் சாரம் இல்லை. இன்று பகல் சாப்பாடு அவ்வளவுதான்; எழுந்து புறப்பட்டேன். வெளிச்சம் மங்கி, இருட்டுக் கவிந்து, மறுபடியும் முனிசிபல் விளக்கின் வெளிச்சமும் வந்தாகி விட்டது மணி எட்டு, ஒன்பது இருக்கலாம் மனசில் ஒரே வேதனை – ஒன்றுமே தோன்றவில்லை. அய்யர் ஓட்டலுக்குப் போகவும் பிடிக்கவில்லை. மறுபடியும் அந்த 'எச்சக்கலை' நாயுடன் போராடி மன்றாட வேண்டும் என்பதை நினைக்கும்போதே வெறுப்பாயிருக்கிறது.

வழக்கம்போலச் சுற்றினேன். மணி பத்து, பதினொன்று, பன்னிரண்டு ஆகிவிட்டது. நாயுடு கடை வாசலில் வந்து விழுந்தேன்; கடை நிலைப்படி விளிம்பில் தலை வைத்துப் படுத்தேன். தூக்கம் வரவில்லை. லேசாகப் பசி எடுப்பதுபோலவும் தோன்றிற்று – வயிற்றுப் பசிகூடப் பெரிதாகத் தெரியவில்லை.

இந்தப் போட்டி –என் எமன் - இதை எப்படி ஒழிப்பது? என் சுக வாழ்க்கையைக் கெடுக்க வந்த சத்துரு இது. இது இருக்கும் வரை எனக்கு நிம்மதியில்லை. இந்த ஊரில் ஒன்று இது இருக்க வேண்டும்; அல்லது நான் இருக்க வேண்டும். இரண்டு பேரும் இரண்டு எதிரெதிர் வர்க்கங்கள். இரண்டு பேருக்கும் சேர்ந்தாற்போல், ஒரே காலத்தில், அய்யர் ஓட்டல் வாசலில் இடம் இருக்க முடியாது– இருக்கக் கூடாது. இதில் சந்தேகமேயில்லை......

ஒரு யோசனை தோன்றிற்று; மெல்ல எழுந்து உட்கார்ந்தேன். காலடியிலே கனமான ஒரு பொருள் கிடந்தது. நாயுடு, கடையை 'ரிப்பேர்' பார்த்து எத்தனையோ நாளாயிற்று. கடையின் வாசல் படியில் இருந்த ஒரு குழியை அடைப்பதற்காக, எங்கிருந்தோ ஒரு சிறு பாறுங்கல்லைக் கொண்டு வந்து, அந்தக் குழியை அடைத்திருந்தார். ஆமாம், அதுதான் எனக்குச் சரியான ஆயுதம். இது ஒன்றே போதும் என் திட்டம் நிறைவேறுவதற்கு.

கொஞ்சம் கனமாய்த்தான் இருந்தது; பெயர்த்துக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். ஊரெல்லாம் ஓய்ந்து உறங்கிக் கிடந்தது. நிலாக் கிளம்பும் நேரமாகி விட்டதால், முனிசிபல் விளக்கெல்லாம் அணைந்துவிட்டன. கிளம்பிக் கொண்டிருந்த நிலாவின் மங்கலான வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாகச் சாலையில் பரவிக்கொண்டே வந்தது.

எனக்குப் போட்டியாக முளைத்த அந்தப் பாவி இரவு வேளையில் வழக்கமாக விழுந்து கிடக்கும் இடம் எனக்குத் தெரியும். பஜனை அய்யர் வீட்டுத் திண்ணை ஓரமாகத்தான் ஒண்டிக் கிடக்கும்– அதோ, அந்தப் பிசாசு படுத்திருக்கிறதே?......

சத்தம் செய்யாமல், அடிமேல் அடி வைத்து நகர்ந்தேன். மிருகமானாலும் படு அறிவு அதற்கு. சட்டென்று விழித்துக் கொண்டுவிட்டால் —? அவ்வளவு தூரம் கவலைப்பட்டிருக்க வேண்டியதில்லை. கண்ணை மூடிக் கொண்டு நிஜமாகவே தூக்கத்தில்தான் இருந்தது. இன்று இரவு அதற்குப் போட்டியே இல்லையல்லவா? வயிறு புடைக்க உண்ட களைப்போ?

படுபாவி! எத்தனை நாளாக என் சோற்றைத் திருடிக் கொண்டு வருகிறாய்? எத்தனை நாள் என்னை அரை வயிறு– சில நாட்கள் அதுவும் இல்லாமல் – ஆக்கினாய்? இந்தா அதற்கெல்லாம்—

ஆத்திரமும், அசூயையும், வெறியும் என்னுள்ளே குமுறிக்கொண்டே வந்தன. அதன் தலைக்கு மேலே கையைத் தூக்கினேன். வீசிக் கீழே போட்டேன — 'வீல்' என்ற பெரிய கூச்சலுடன், ஒரு துடிதுடித்து அப்பால் போய் விழுந்தது, என் விரோதி. திண்ணையில் தூங்கிக்கொண்டிருந்த அய்யர் அலறிக் கொண்டு எழுந்து, "ஓ, சீ! சனியன்!" என்று கத்தினார். நாயிடமிருந்து கூச்சல் மறுபடி வரவில்லை; முனகல் ஒரு வினாடியோ, இரண்டு வினாடியோ வந்தது– அவ்வளவுதான், அப்பாடா!

ஒரே ஓட்டமாக ஓடி நாயுடு கடைக்கு வந்து சேர்ந்தேன். நெஞ்சு 'படக் படக்' கென்று அடித்துக் கொண்டது. கனவிலே கேட்பது போல எங்கேயோ-எங்கேயோ-எங்கே? –மணி ஒன்றடித்தது. ஒரு புறத்தில் அமைதியும், ஒரு புறத்தில் கொந்தளிப்புமாகத் தவித்தது மனசு. ஏன்?......

"யாரடா அது?" என்று நாயுடு ஒரு குச்சியை எடுத்துத் தட்டியதும்தான

சுய நினைவு வந்தது. விழுந்தடித்துக் கொண்டு எழுந்து நகர்ந்தேன். மனசில் நேற்று ராத்திரி இருந்த சங்கடங்கள் எல்லாம் ஓய்ந்து விட்டன. ஒரு வருஷத்துக்குப் பிறகு மறுபடியும் எனது சுக வாழ்வு இன்று முதல் ஆரம்பமாகிறது. "பாவம்! என்று எதையோ குறித்து அனுதாபப்பட்டேன்.

ஆற்றங் கரையில் நித்தியப்படி அலுவல்களை முடித்துக்கொண்டு, ஊரைச் சுற்றிவிட்டுத் தேவையான பசியுடன் அய்யர் ஓட்டலுக்குத் திரும்பினேன். இன்றைக்கு என்ன சனிக்கிழமையா? வெங்காயசாம்பாரும், ஏதாவது ஒரு கறியும் இருக்கும். இன்றைய 'ஸ்பெஷல்' தயிர்ப் பச்சடி; இலை காம்பவுண்டுச் சுவரில்மேலே யிருந்து விழும்போதே ஜாக்கிரதையாகப் பிடித்து வாங்கிக்கொள்ள வேண்டும்—

அய்யர் கடை வாசலுக்கு வந்தேன். குப்பைத் தொட்டிக்குப் பக்கத்தில் இருந்த 'கேட்டு'- என் இருதயமே நின்றுபோயிற்று; என் கண்கள் குருடாகின; தெருவிலே போகும் வண்டியும், எதிரில் உள்ள மாடி விடும். நிலைத்து நிற்கும் இந்த [மரங்களும்- எல்லாம் சுழன்றன.

இந்த அஞ்சு வருஷத்தில் ஒரு நாளும் இல்லாத வழக்கமாக, அய்யர் ஓட்டல் பூட்டிக் கிடந்தது. வாசல் பக்கத்தில் இருந்துவந்த போர்டைக் காணோம். 'கேட்'டின் மரக் கதவு இழுத்துச் சாத்தப்பட்டு, பெரிய பூட்டுப் போட்டிருந்தது. கட்டிடத்தின முன் வராந்தாவில் இருந்த மேசை, நாற்காலி, பீரோ, கடியாரம் ஒன்றுமே காணவில்லை. எல்லாக் கதவுகளுக்குமே பூட்டு, பூட்டு, பூட்டுத்தான்.

சலனமற்று, சத்தமற்று, உயிரற்று, உடலற்று, செத்துச் சுடுகாடாய்க் காட்சியழித்தது ஓட்டல் கட்டிடம்.

ஏதோ ஒரு உலகத்தின் எந்தத் தெருவிலோ யாரோ பேசிக்கொண்டே போனார்கள்: "இந்த அஞ்சு வருஷத்திலே அய்யர் என்ன லாபம் கண்டார்? நஷ்டம்தான் அதிகம்; அதனால்தான ....

சீ! என்ன நாய் ஜன்மமடா இது! யாருக்கு உணவு இல்லையெனறால் எதை அழித்து விடுவோம் என்று அன்றைக்குப் பாடினான்?........

●

வறுமையால் வருந்துகின்றவர்களுக்கு வாழ்வில் நுகரத்தக்க பொருள் ஒன்றும் இல்லை; எல்லாப் பற்றும் அவர்களை விட்டுவிட்டன என்று கோள்ளலாம்; ஆனால், மன உறுதி இல்லாத [காரணத்தால், அவர்களுக்கு அந்தப் பொருள்களின்மேல் ஆசை நீங்கவில்லை; இதுவே அவர்கள் முற்றத் துறக்காமல் வருந்துவதற்குக் காரணம்; இதனால் அவர்கள் இன்னும் உப்பையும் கஞ்சியையும் தேடி அவற்றிற்கு எமனாகத் திரிகின்றார்கள்.

துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

— டாக்டர். மு. வ. (வள்ளுவர்)

சூழ்நிலை மனிதனின் பண்பு வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைகின்றது. ஒவ்வொரு குழந்தையும் முதற்கண் குடும்பமாகிய சூழ்நிலையில் வாழ்கிறது. பெற்றோர்களின் பழக்க வழக்கங்களும் பண்பும் குழந்தை உள்ளத்தில் பதிந்து விடுகின்றன.

'குருட்டு நம்பிக்கைகளையும் மனித வளர்ச்சிக்குத் தகாத பண்பையும் பாவனைகளையும் உடைய ஒரு சூழ்நிலையைக் குழந்தைகள் பெற்றால் இத் தீமை பயக்கும் பண்புகள் இவ்வுலகத்தில் என்றும் அழியாது தலை தூக்கி நிற்கும்' என்று எச்சரிக்கை செய்கிறார் இக்கட்டுரை ஆசிரியர்.

மனிதனும் சூழ்நிலையும்

திரு. T. E. சண்முகம், M. A., M. Litt.

●

மனிதன் முதன் முதலில் தாயின் வயிறாகிய சூழ் நிலையில் வாழ்கிறான். அங்கு அவன் ஒன்பது மாத காலமே வாழ்கிறான். ஆனால், அவனுடைய வெளியுலக வாழ்வு பல்லாண்டுகளாகும். அவனுடைய வெளியுலக வாழ்வை நோக்கின், தாய் வயிற்றிடத்து வாழ்வு மிகக் குறுகியதன்றோ? மனிதன் தன் முக்கியமான பருவமாகிய குழந்தைப் பருவத்தைக் குடும்பமாகிய சூழ் நிலையில் கழிக்கிறான். குடும்பமே பலவகையில் அவன் பிற்கால குணத்தையும் நடத்தையும் நிர்மாணிப்பதாம்.

குழந்தை பிறந்து பல வருடங்கள் வரை இப்பரந்த உலகிலே தன்னைத் தானே காத்துக் கொள்ளுதற்குரிய ஆற்றல் இல்லாமலிருக்கிறது. அதற்குச் சூழ்நிலையே உதவியாய் அமைகின்றது. மழை, குளிர், வெயில் முதலியவைகளிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும், கொடிய விலங்குகளினின்றும் தப்பித்துக் கொள்ளவும் குழந்தைக்கு வழி தெரியாது அன்றோ? மற்றும், தானே உணவு தேடி உண்டு உயிர் வாழ அக் குழந்தையால் முடியாது. இதற்குக் காரணம் இயற்கையாக ஏற்பட்ட குழந்தையின் உடல்

நிலைமையேயாம். இந் நிலைமையில் தான் பெற்றோர்கள் தம் குழந்தை இந் நில உலகில் நீடு வாழப் பேருதவி செய்கிறார்கள்.

முதலிலே குழந்தை ஒரு குடும்பத்தில்தான் தோன்றுகிறது. அஃது உயர் குடும்பமாயிருக்கலாம்; அல்லது தாழ்ந்த குடும்பமாயுமிருக்கலாம்; அல்லது பண்பட்ட குடும்பமாகவோ, நோய்வாய்ப் பட்ட குடும்பமாகவோ இருக்கலாம். எக் குடும்பமாய் இருந்தாலும் அக் குடும்பத்தின் நிலைமைக்கு ஏற்றவாறு குழந்தையும் வளர்ச்சி அடைகிறது.

ஒரு குழந்தை செல்வச் சிறப்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய குடும்பத்தில் பிறந்தால் அஃது உயர் குடும்பத்தில் பிறந்ததாகவும், கூலி வேலை செய்யும் குடும்பத்தில் பிறந்தால் எளிய குடும்பத்தில் பிறந்ததாகவும் நாம் குறிப்பிடுகிறோம். இங்ஙனம் குறிப்பிடுவதனால் அக் குடும்பங்களில் பிறந்த குழந்தைகள் அந்தந்தக் குடும்பத்தின் பண்பையும் கலையையும், மொழியையும் அடைந்திருக்கும் என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால் பெற்றோர்கள் குழந்தையின் உடலமைப்புக்குக் காரணமேயொழிய மற்றவைகளுக் காரணமாகார். அக் குழந்தைகள் அச் சூழ் நிலைகளில் வளர வளர அந்தந்தக் குடும்பத்தின் பண்பையும், மொழியையும், கலையையும் பெறுகின்றன. சான்றாக, தமிழ் நாட்டில் தமிழர் மரபிலே தோன்றிய ஒரு குழந்தையைப் பிறந்தவுடன் வேறு நாட்டிற்கு எடுத்துச் சென்று வளர்த்தால், அந் நாட்டுப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் மொழியையும் நடையுடை பாவனைகளையும் அக் குழந்தை பெறும். இது, குழந்தை வளரும் குடும்பமாகிய சூழ் நிலையின் பயனேயாகும். இவ்வுண்மையை வலியுறுத்த ஜே. பி. வாட்சன் (J. B. Watson) என்பார் தம்மிடம் தாம் வேண்டும் சூழ்நிலையைக் கொடுத்து முப்பது குழந்தைகளையும் கொடுத்தால் அக் குழந்தைகளை ஆசிரியர்களாகவோ, மருத்துவர்களாகவோ, வாணிபர்களாகவோ, இராஜதந்திரிகளாகவோ, அல்லது திருடர்களாகவோ, பிச்சைக் காரர்களாகவோ தம்மால் ஆக்க முடியும் என்று கூறுகிறார்.

பிறந்த உடனே குழந்தையின் உடலமைப்பு முழு வளர்ச்சி யடைந்திருக்கிறது. ஆனால், உளவளர்ச்சி அப்போதுதான் ஆரம்பிக்கிறது. மற்றவர்கள் சுகமாக வாழ்தற்குரிய ஒரு குடும்பச் சூழ்நிலை, குழந்தையின் உடலமைப்புக் காரணமாக அதற்குக் கொடியதாகக் காணப்படுகிறது. குழந்தை எல்லா உதவிகளுக்கும் பெற்றோர்களை நாடுவதால் தன்னம்பிக்கை யற்றதாகிறது. இதனால் சிறிது வளர்ந்த குழந்தைகள் தாமே செய்து கொள்ளக்கூடிய காரியங்களையும் தம்மால் செய்யமுடியாது என்று எண்ணிப் பிறர் உதவியை நாடுகின்றன. இச் சமயங்களில் பெற்றோர்கள் குழந்தைகள் மனப்பக்குவம் அறிந்து அதற்கேற்றபடி நடந்துகொள்ள வேண்டும். சில பெற்றோர்கள் தம் அறியாமையினால் குழந்தை செய்ய முடியாத காரியங்களைச் செய்யும்படியாகச் செய்து, செய்யாவிட்டால் கடிந்து பேசி அதனுடைய உதவியற்ற நிலையை அதனுள்ளத்தில் பதிய வைக்கிறார்கள். மற்றும் சிலர் தங்கள் குழந்தைகளைப் பொம்மைகள் என நினைத்துக் குழந்தைகளே செய்துகொள்ளக்கூடிய காரியங்களையும் அவர்கள் செய்யவொட்டாது தடுத்துத் தாமே செய்து விடுகிறார்கள். சிலர் தம் குழந்தைகளை விலை மதிக்கமுடியாத பொருளென மதித்து அவர்களைச் சிறந்த பாதுகாப்போடு வளர்க்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். பெற்றோர்களின் இத்தகைய நடத்தையினால் குழந்தை தான் உரிமையற்றதென்றும், பார்ப்பதற்கு உரிமையுடையதே அன்றிக் கேட்பதற்குத் தனக்கு உரிமையில்லை என்றும் நினைக்

கிறது. இவ்வெண்ணம் குழந்தையின் ஆழ்ந்த உள்ளத்திலும் (unconscious mind) நனவு உள்ளத்திலும் (conscious mind) ஏற்படுகின்றது.

குழந்தை பிறந்தவுடன் இவ் வாழ்க்கை அதற்கு விசித்திரமாகத் தோன்றுகிறது. சூழ்நிலையிலுள்ள பொருள்கள் எல்லாம் அதற்கு அர்த்த மற்றவைகளாக விளங்குகின்றன; குடும்பத்தி லுள்ளவர்களின், முக்கியமாகப் பெற்றோர்களின், உதவியைக் கொண்டு தான் சுற்றியிருக்கும் பொருள்களின் உண்மையை அறிகிறது. குழந்தைகள் தாம் பேசும் வன்மை அடைந்ததும் பெற்றோர்களையும் உற்றார்களையும் பல கேள்விகள் கேட்கின்றன அல்லவா? இது குழந்தைகளுக்கு இயற்கை. குழந்தைகள் பேசுந்தன்மை அடையும் முன்பே அவைகளுக்குப் பல ஐயங்கள் எழுகின்றன. ஐயங்களைத் தம் சைகை மூலமாகக் குழந்தைகள் அறிவிப்பதைப் பார்க்கலாம். இச் சமயங்களில் பெற்றோர்கள் பக்குவமாகத் தம் குழந்தைகளுக்குப் பதிலளிக்கவேண்டும். குழந்தைகளின் கேள்விக்குப் பெற்றோர்கள் பதிலளிக்க முடியாத காரணத்தினலோ, தகுந்த பதில் அளிக்கக்கூடாது என்ற எண்ணத்தினலோ, அல்லது தொந்தரவாகக் கருதியோ அவைகளுக்குத் தவறான பதிலளித்து விடுவார்கள்; அல்லது கடுஞ் சொல் கூறியோ பயமுறுத்தியோ அனுப்பி விடுவார்கள். இது மிகவும் தவறான முறை. இத்தகைய பெற்றோர்களின் செயல்கள் பிற்காலத்தில் சிறுவர்களிடமும் பெரியோர்களிடமும் காணப்படும் காரணமற்ற அச்சங்களுக்கும் குருட்டு நம்பிக்கைகளுக்கும் விபரீதமான நடத்தைகளுக்கும் காரணங்களாகின்றன.

உதாரணமாக, "நாங்கள் எப்படிப் பிறந்தோம்; எம்முடைய தம்பியும் தங்கையும் எப்படிப் பிறந்தார்கள்?" என்ற கேள்விகளை எல்லாக் குழந்தைகளும் தம் பெற்றோர்களைக் கேட்பது இயற்கையாகும். பெற்றோர்கள் சாதாரணமாகக் குழந்தையை ஏமாற்றியோ அல்லது பதிலளிக்காமலோ இருந்து விடுவார்கள். இதனல் குழந்தை தானே அதன் உண்மையைக் கண்டு பிடிக்க முயலுகிறது? அதன் வளர்ச்சியடையாத அனுபவத்தைக் கொண்டு கற்பனைசெய்து ஒரு தவருன முடிவைக் கொள்கிறது. மற்றும், பெற்றோர்கள் உதவி செய்யாததனல பாலைப் (Sex) பற்றிய விஷயங்களையும், தன்னைப் போன்று கற்பனைசெய்து ஒரு முடிவுக்கு வந்த பிற குழந்தைகளிடமிருந்தும், கெட்ட நடவடிக்கையையும் தவறான கருத்துக்களையுமுடைய மற்ற மூத்தவர்களிடமிருந்தும் குழந்தை ஒரு சிறிது அறிகிறது. இதனல் பிற்காலத்தில் குழந்தைக்கு எவ்வளவு ஆபத்து ஏற்படுகிறது என்பது பெரும்பாலோர்க்குத் தெரியாமல இருக்கலாம். பிற்காலத்தில் ஒருசிலர் திருமணத்தை வெறுத்துப் பிரம்மச்சாரிகளாகவும் கன்னியர்களாகவும் வாழ்வதற்கும், இல்லறத்தில் புகுந்தாலும் வாழ்க்கையில அமைதியற்றுச் சண்டை சச்சரவுகளோடு இருப்பதற்கும் மேலை நாடுகளில் கணவன் மனைவிப் பிரிவுகள் (divorce) அதிகம் ஏற்படுவதற்கும், மற்றும் பல விபரீதமான கொள்கைகளும் நடத்தைகளும் காணப்படுவதற்கும் காரணமாய் அமைவது குழந்தைப் பருவத்தில் பாலைப்பற்றித் தவறான கருத்துக்களைத் தம் கற்பனையினலோ அல்லது பெற்றோர்கள் துணைகொண்டோ தம் உள்ளத்தில் பதியவைத்துக் கொள்ளுதலேயாகும். இவ்வுண்மையை உளப்பாகுபாடு அறிஞர்கள் (Psycho-analysts) தங்களிடம் உளக் கோளாறுகளுக்கும் (Mental disorders) உள வியாதிகளுக்கும் (Mental diseases) சிகிச்சை பெறுவதற்காக வருபவர்களிடம் காண்கிறார்கள்.

பிறவியைப் பற்றிக் குழந்தைகளுக்குப் பல ஐயங்கள் தோன்றுவது போல இறப்பைப் பற்றியும் அவர்களுக்கு

ஞயங்கள் ஏற்படுகின்றன. தம்முடைய நெருங்கிய உறவினர்கள் இறக்கும் போது பெற்றோர்கள் அழுவதைக் கண்டும் அவர்கள் துயரம் தாங்காது செய்யும் செய்கைகளைக் கண்டும் குழந்தைகள் தாமே ஒரு கருத்தைக் கற்பனை செய்து கொள்ளுகின்றன. குழந்தைகள் அச்சமயங்களில் பெற்றோர்களைக் கேள்வி கேட்டாலும் அவர்கள் பொறுமையோடு பதிலளிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். சில சமயங்களில் குழந்தைகளுக்குக் கடுஞ்சொற்களும் தண்டனையுமே கிடைக்கின்றன. இதனால் குழந்தையின் உள்ளத்தில் என்ன ஏற்படுகிறது என்பதைப் பின் வரும் ஓர் உள நோயாளியின் வாழ்க்கைச் சம்பவத்தினின்றும் தெளியலாம்.

அவர் முப்பத்தாறு வயதுடையவர்; உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். அவருடன் பிறந்தவர், இரண்டு சகோதரிகளும் மூன்று சகோதரர்களும் ஆவர். அவர் மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவர். அவருக்குத் தம்முடைய மார்பு வெடித்து அதனால் இறப்பு நேரும் என்ற அச்சம் சில மாதங்களுக்கு முன்னே ஏற்பட்டது. அவ்வெண்ணம் நாளாக நாளாக அவரது உள்ளத்தில் அடிக்கடித் தோன்றி அவருக்குப் பெரும் பயத்தைக் கொடுத்து வந்தது. அப்பேரச்சம் அவருடைய உடலை வாட்டியது. அவர் வீட்டை விட்டு வெளியே செல்ல மறுத்தார். எப்போதும் தம் இரு கைகளையும் மார்பில் பொத்தி அழுத்திப் பிடித்துக் கொள்வார். இந்த வேதனையால உணவு உட் செல்லவில்லை. அவர் உடல் உருத்தெரியாமல் ஆகிவிட்டது. மார்பு வெடித்து இறந்து விடுவேன், என்ற பயம்தான் எப்போதும் அவர் மனத்தி லிருந்தது.

இங்கிலேயில் அவரது உறவினர் பல கைதேர்ந்த மருத்துவர்களைக் கொண்டு அவரது மார்பைச் சோதனை செய்து பார்த்ததில் அவருக்கு உடல் நோய் இல்லை என்பதைத் திட்டமாகக் கண்டார்கள். இதை நோயாளி நம்பவில்லை. இறுதியாக அவர் உளப் பாகுபாட்டில் கைதேர்ந்த ஒரு மருத்துவரை (Psycho-analyst) அணுகிச் சிகிச்சை பெற்று நான்கு மாதத்தில் குணமடைந்தார்.

இந்த விபரீதமான உளக் கோளாறு எப்படி ஏற்பட்டது என்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. எனினும் முக்கியமாகிய முதற் காரணத்தை ஈண்டுக் கவனிப்போம்.

உளப் பாகுபாட்டினால், குழந்தைப் பருவத்திலிருந்து இதுவரை ஒருவனுக்கு என்னென்ன நேர்ந்தனவோ அவற்றை அவன் நினைவிற்குக் கொண்டுவரச் செய்யலாம். இம் முறையைக் கொண்டு உளப் பாகுபாடு அறிஞர் அந்த நோய்க்குக் காரணங்களை ஆராய்ந்த போது அந்நோயாளியின் நான்காவது வயதில் நேர்ந்த ஒரு சம்பவமே மூலகாரணமாக அமைந்ததைக் கண்டார். நோயாளியின் நான்காவது வயதில் அவனுடைய அண்ணன் ஏழு வயதுடையவனாக இருந்தான். அண்ணன் ஒருநாள் வீட்டிற்கு எதிரே தெருவில் நின்றுகொண்டு ஏதோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது வேகமாக அந்தப் பக்கம் ஓடி வந்த ஒரு காளை முட்டி அவன் மார்பில் படுகாயம் படுத்தியது. அவன் வீட்டில் கிடத்தப்பட்டு மரண வேதனையில் இருந்ததையும் அங்கே கூடிய நூற்றுக் கணக்கான மக்களின் அலங்கோல நிலையையும் கண்ட நான்கு வயதுக் குழந்தையின் உள்ளத்தில் ஒரு பெரும் பயங்கரமான உணர்ச்சி ஏற்பட்டது. அண்ணனும் இறந்தான். பெற்றோர்களும் மற்றவர்களும் கதறி அழுதது குழந்தை உள்ளத்தில் ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சிறிது நாட்களுக்குப் பிறகு 'அண்ணன் எங்கே' என்று குழந்தை பெற்றோர்களைக் கேட்டதற்கு அவர்கள் அவன் இறந்து விட்டான் என்று பதிலளித்தார்கள். அவன் தாயும் மற்ற உற

வினர்களும் அழுததைக் கண்டு அவனே ஒரு கருத்தைக் கற்பனை செய்து கொண்டான். 'அண்ணன் மார்பு வெடித்து இறந்தான்; சாவு என்பது பயங்கரமானது; யானும் அப்படித்தான் இறப் பேன்', என்ற எண்ணம் அக் குழந்தை யின் உள்ளத்தில் பதிந்து விட்டது. வருடங்கள் பல கடந்தன. இத்துன்ப நிகழ்ச்சியையும் அவன் மறந்து விட் டான். எனினும் எப்போதாவது அவன் வழியில் பிணத்தைப் பார்த் தாலும் பிறர் சாவைப் பற்றிப் பேசிக் கொண்டாலும் அவனுக்கு ஒருவித மான பயங்கர உணர்ச்சி ஏற்படும். ஆனால், அவன் அதை மறக்க முயல் வான். இப்பயங்கர உணர்ச்சி அவனுக்கு அடிக்கடி ஏற்பட்டது. கடைசியாக முப்பத்திரண்டு வருடங் கள் கழித்து அவன் உளநோய் வாய்ப் பட்டான். குழந்தைப் பருவத்தில் நடந்த நிகழ்ச்சியை அவன் மறந்தாலும் அது அவன் உள்ளத்திலிருந்து மறையவில்லை. அது அவனது நனவு உள்ளத்தினின்றும் (Couscious mind) நீங்கிய போதிலும் ஆழ்ந்த உள் ளத்தில் (Unconscious mind) வேலை செய்துகொண்டேயிருந்து, முடிவிலே இந்நோயை உண்டாக்கியது.

மேற்கூறிய சான்றினால் குழந்தைப் பருவம் எவ்வளவு முக்கியமானது என்பது தெளிவு. குழந்தையின் உள் ளம் மிகவும் மென்மைத் தன்மை வாய்ந்தது. குழந்தை விஷயங்களை நல் லனவென்றும் தீயனவென்றும் ஆரா யும் சக்தியற்றது; பெற்றோர்கள் என்ன சொல்கிறார்களோ அதை நம்பி அவர் கள் நடப்பதைப் போலவே நடக்கிறது. எல்லா விஷயங்களும் எளிதாக அதனுள்ளத்தில் பதிந்து விடுகின்றன.

முதன்முதலிலே குழந்தை தாயோடு தான் அதிகம் பழகுகிறது. தாயோடு குழந்தையின் தொடர்பு, அது அவள் வயிற்றில் தோன்றியதிலிருந்து ஆரம் பிக்கிறது. சூழ்நிலையினின்றும் எப் பாகத்திலிருந்து அதற்கு மகிழ்ச்சி கிட்டுகிறதோ அப்பாகத்தில் அதற்குப் பற்றும் ஏற்படுகிறது. குடும்பச் சூழ் நிலையில் குழந்தைக்குப் பலவிதத்தில் மகிழ்ச்சியளிப்பவள் தாயன்றோ? அவள்தான் குழந்தைக்குப் பசித்த போது பாலூட்டியும், அதைத் தாலாட் டித் தூங்கவைத்தும் வெயிலினின்றும் மழையினின்றும் மற்றும்பல தீங்குக ளினின்றும் பாதுகாக்கிறாள். அதனால் தான் எல்லாக் குழந்தைகளுக்கும் தாயினிடம் மிகுதியான பற்று ஏற்படு கிறது. எனவே, தாய் குழந்தையின் பக்குவமறிந்து நடந்து கொள்ளவேண் டும்.

தந்தை குழந்தையின் உள்ளத்தில் சிறிது காலம் கழித்தே இடம் பெறுகி றான். என்றாலும், குழந்தையின் உள் ளம் நல்ல முறையில் வளர்ச்சி யடை தற்குத் தந்தையும் காரணமாக அமை கிறான். குழந்தை வளர்ச்சி யடைய அடையத் தந்தையைச் சிறிய இயற்கைக் குழுவாகிய (Natural group) குடும் பத்திற்குத் தலைவனாகக் கருதி அவனி டம் மரியாதையாக நடந்துகொள்கிறது. மேலும், அவன் செய்வதையே செய்து அவனைப்போலத் தானும் இருக்க முயற்சி செய்கிறது. இதோடு குழந்தை தந்தைபால் வெறுப்பும் பொறாமையும் கொள்ளுகின்றது. சில குழந்தைகள் தந்தை இறந்தால் தாய் தன்னோடே இருப்பாள் என்று அடிக் கடி நினைப்பதும், தம் வயது குழந்தை களிடம் கூறுவதும் உண்டு. இதற்குக் காரணம் தாய் தன்னிடம் காட்டும் அன்பைத் தந்தை பங்கு கொள்கிறான் என்ற எண்ணமே யாகும். எனவே குழந்தை தந்தையிடம் நடந்துகொள் ளும் முறை விருப்பும்வெறுப்பும் கலந்த ததாகும் (ambivalent). இதன் காரணமாகக் குழந்தைகள் தந்தையிடம் பணிவுடன் நடந்து கொள்ளும். தந்தை யின் அதிகாரத்தை நேரே எதிர்க்க முடி யாத குழந்தைகள் வேறு வகையில் தங் களுடைய எதிர்ப்பைக் காண்பிக்கும்.

இச்சமயங்களில் பெற்றோர் குழந்தைகளிடத்தில் நல்ல முறையில் நடந்து கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாகக் குழந்தை தன்னுடன் பிறந்த குழந்தைகளோடு பழக ஆரம்பிக்கிறது. குழந்தைகளுக்குள்ளே அடிக்கடிச் சண்டை ஏற்படுவது இயற்கை. இது முதலிலே உணவுக்காகவோ, தின்பண்டங்களுக்காகவோ, விளையாட்டுக் கருவிகளுக்காகவோ ஏற்படும். இதற்கு மூல காரணத்தை ஆராய்ந்தால் ஒரு குழந்தை தாயின் அன்பை முழுதும் பெற முயற்சிக்கையில் மற்றக் குழந்தைகள் தடையாக இருப்பதனால் பொறாமை ஏற்பட்டுச் சண்டை தொடங்குகிறது. இதனால் தானே தாயின் அன்பை முழுதும் அடையவேண்டும் என்ற எண்ணம் அதன் உள்ளத்தில் பதிந்து, பின்பு அப்பற்று மற்றப் பொருள்களுக்கும் பரவுகிறது. பிற்காலத்தில் உடன் பிறந்தோர்களுக்குள் நிலத்தையொட்டியோ, நிதியையொட்டியோ சண்டையும் சச்சரவும் ஏற்படுவதற்கு மேற்கூறிய உண்மையே அடிப்படையான காரணமாகும். இவ்வுண்மையைப் பெற்றோர்கள் உணர்ந்து தமது குழந்தைகளுக்கு விளையாட்டுப் பந்தயங்கள் மூலமாகவும், வேறு கல்வி முறை மூலமாகவும் அவர்களது அடிப்படையான தன்னல உணர்ச்சியையும் பொறாமை உணர்ச்சியையும் நீக்க முயலவேண்டும்.

மேற்கூறிய காரணங்களால் குடும்பச் சூழ்நிலை எவ்வளவு முக்கியமானது என்பது புலனாகும். குடும்பமே ஒருவனை மனிதனாக்குகிறது. ஒருவன் திருடனாக மாறுவதற்கும், பல உள்ளியாதிகளையும் உளக்கோளாறுகளையும் அடைவதற்கும் காரணம் அவன் குழந்தைப் பருவத்தில் தன் குடும்பத்தில் அமைதியாக வாழாததேயாம். குழந்தைகள் நல் வளர்ச்சிக்குப் பெற்றோர்களே பொறுப்பாளிகள். பெற்றோர்களும் உறவினர்களும் தங்களுடைய பழக்கவழக்கங்களையும், நடையுடை பாவனைகளையும் குருட்டு நம்பிக்கைகளையும் தங்களுடன் இருக்கும் குழந்தைகளுக்கும் பழக்கி விடுகிறார்கள். இத்தன்மைகள் குழந்தைகள் தம அறிவு கொண்டு ஆராயும் சக்தி அடையுமுன்னே அவர்கள் உள்ளத்தில் நன்றாகப் பதிந்து விடுகின்றன. எனவே குழந்தைகள் உள்ளத்தில் பதிந்துள்ள பண்புகள் தம் குடும்பத்திற்குரியவையாம். பெற்றோர்கள் தம் குழந்தைகள் மூலம் தம்முடைய சந்ததியை என்றும் இந்நிலவுலகில் நிலைத்திருக்கும்படியாய்ச் செய்கிறார்கள்; தம் பழக்கவழக்கங்களையும் பண்பையும் அவர்கள் மூலம் அழியாது காப்பாற்றுகிறார்கள். ஆனால் குருட்டு நம்பிக்கைகளையும் மனிதவளர்ச்சிக்குத் தகாத பண்பையும் பாவனைகளையும் உடைய ஒரு சூழ்நிலையைக் குடும்பத்தின் மூலமாகக் குழந்தைகள் பெற்றால் அத்தீமை பயக்கும் பண்புகள் இந்நிலவுலகத்தில் என்றும் அழியாது தலை தூக்கி நிற்கும். இவ்வுண்மையைப் பெற்றோர்கள் அறிவார்களாக!

பொங்கலே பொங்கல்

★

வானம் வளம்சுரக்க வையக் கழனியிலே
தேனும் செழுங்கனியும் செந்நெல்லும் நின்றேறும்
நின்றேறும் செம்பயிர்க்கு நீரிறைத்தார் ஆயிரவர்
ஆயிரவர் வீடும் அறம்செழிக்கப் பாலூறும்
பாலூறப் பொங்குகின்ற பொங்கலே பொங்கல்!
பாவைமார் செங்கையிடும் பொங்கலே பொங்கல்!

நீலக் கடல்முனையில் நீள்வானம் கூடிநிற்கும்
கோலக் கலவியிலே கொள்ளைமது ஊற்றெடுக்கும்
ஊற்றெடுக்கும் காலை உணர்வெடுக்கும் தீங்கவிதை
தீங்கவிதைப் பாடலுக்குத் தேன்மொழியார் ஆடிடுவார்!
ஆடலுக்குப் பொங்கிவரும் பொங்கலே பொங்கல்!
ஆயிழையார் செங்கையிடும் பொங்கலே பொங்கல்!

காலப் பெருவெளியில் கண்ணூன்றி நிற்கையிலே
ஞாலப் பரப்பிலொரு ஞானநிலை தேன்பிலிற்றும்
தேன்மாந்தி நிற்பவர்க்குச் சிந்தனையே வாழ்வாகும்
வாழ்வாகும் கோலத்தில் வையமெலாம் ஒன்றாகும்
ஒன்றாகிப் பொங்கிவரும் பொங்கலே பொங்கல்!
ஒண்டொடியார் செங்கையிடும் பொங்கலே பொரங்கல்!

—: க. தங்கவேலன் :—

தங்கள் கருத்தைக் கவர்ந்ததன் காரணம்

★

டாக்டர் மு. வ.: " 'கலைக்கதிர்' படித்தேன். அறிவுக்கும் உணர்வுக்கும் விருந்தாகும் பகுதிகள் உள்ளன. தமிழ்த் தாய்க்கு அணி செய்யும் என நம்புகிறேன். "

❀ சிந்தனை: " சிறந்த தொண்டு. முதல் இதழில் இடம் பெற்றிருக்கும் விஞ்ஞானக் கட்டுரைகளின் எண்ணிக்கையையும் தரத்தையும் பார்க்கும்போது 'கலைக்கதிர்' தமிழில் அறிவொளி வீசும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. ஆகவே 'சிந்தனை' 'கலைக் கதிரை' வரவேற்கிறது. "

❀ ❀ தினமணி: " ஸ்ரீ வேலாயுத முதலியார் எழுதியுள்ள கட்டுரையும் இனி எழுதப் போகும் கட்டுரைகளும் தமிழன் அறிவு விருத்திக்கு அவசியமான கட்டுரைகளாகும். இந்த மாதிரிப் பத்திரிகைகள் தமிழருக்கு ரொம்ப அவசியமான பத்திரிகைகளாகும்.

❀ ❀ ❀ தினசரி: " மகாகவி பாரதியார் கட்டளையை நிறைவேற்றி வைப்பதில் ஆசிரியருக்கு உள்ள ஆர்வமும் முயற்சியும் இந்த இதழிலிருந்து நன்கு வெளியாகின்றன. இந்தக் கதிரில் வெளி வந்துள்ள ஒவ்வொரு கட்டுரையும் மக்களுக்குப் பயன்படும். தமிழ் மணம் கமழச் சிறந்த முறையில் வெளி வந்துள்ள இந்தப் பத்திரிகை, தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் உயர்ந்த சேவை செய்யும் என்று எதிர்பார்க்கிறோம். "

★

இத்தகைய வரவேற்பெல்லாம் பெற்றிருப்பதுதான்
தங்கள் கருத்தைக் கவர்ந்துள்ள

'கலைக்கதிர்'

தைப் பொங்கல்—தமிழர் பொங்கல்

பண்டிதர் திரு. அ. கிருஷ்ணசாமி நாயுடு

★

“**தை** ஒரு திங்களும் தரை விளக்கித்
தண் மண்டலம் இட்டு”

என ஆண்டாளம்மையார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஒப்பற்ற தைத்திங்களை வரவேற்றார். ஆண்டிற்கு முதல் திங்களாகச் சித்திரையைக் கொள்ளாததற்கு முன்பு தைத் திங்களை ஆண்டிற்கு முதல் திங்களாகக் கொண்டிருந்தனர் பண்டைத் தமிழ் மக்கள். மேலும் ஆடி, ஆவணி மாதங்களில் பெய்வதுவும் அம் மாதங்களில் பல வகைத் தானியங்களை விதைப்பதுவும் தமிழ் நாட்டிற்கே உரிய பருவங்களாகும். ஆடி, ஆவணியில் பயிரிட்ட எல்லாத் தானியங்களும் விளைந்து தை மாதத்தில் வீடு வந்து சேருவதும் இத் தைத் திங்களிலேயாம். தங்கள் உழைப்பின் பயனாகிய உணவைக் கண்டு உள்ளத்தில் பொங்கிய உவகைப் பொங்கலே தைப்பொங்கலாகும். இத் திங்களில் விளைவுகளைத் தமிழ் நாட்டார் கண்டு களிப்பதைப் போல வேறு நாட்டார் கண்டு களிப்பதற்குத் தைத் திங்களில் விளைவுகள் காண்பதின்மையானும் அதற்காகத் திருவிழாக் கொண்டாடும் அவசியம் இன்மையானும் தைத் திருவிழா தமிழ் நாட்டிற்கே உரியதாயிற்று. இரண்டு மூன்று திங்கள் மழையாலும் குளிராலும் வருந்தியிருந்த மக்களின் குளிரைப் போக்குவதற்குக் கதிரவன் வட திசை நோக்கிப் பெயர்கின்றான். கதிரவன் மகரக் கோட்டிலிருந்து நடுக் கோட்டிற்கு வரும் காட்சியையும் களிப்பையும் முதல் முதல் காண்கிறவர் தமிழ் நாட்டாரேயாவார். எனவே, இத் தகைய காரணங்களால் தைத் திங்கள் திருவிழா தமிழர்க்கு மிகவும் உரியதாயிற்று. ஆகவே, தமது பொங்கல் திருவிழாவை உளமுவந்து மூன்று நாள் கொண்டாடுவாராயினர்.

முதல் நாள் பண்டிகை

முதல் நாள் பண்டிகையைக் காப்புக் கட்டல் என்பர். ஆனால் பஞ்சாங்கத்தார் சங்கிராந்தி என்பர்.

காப்புக் கட்டல் என்பது மார்கழி மாதத்துக் கடைசி நாளில் பூசியும் வழித்தும் அலங்காரம் செய்துள்ள வீடுகளின் கூரைகளில் மருந்து மரத்துத் தழைக்கொத்துக்களும் பூளைப் பூவும் சேர்த்துச் சொருகி விடுதல். மருந்து மரத் தழைகளைச் சொருகி விட்டால் நோய் அணுகாது. பிற்காலத்தார் பேயும் அணுகாதென்பர். தைப் பண்டிகையை முன்னிட்டு வீடுகளில் உள்ள துணிகள் பாத்திரங்கள் மற்ற எல்லா ஏனங்களையும் வெளுத்தும் விளக்கியும் தூய்மை செய்வார்கள். தைப் பண்டிகைக்குச் சுத்தம் செய்யப்படாத பண்டம் வீட்டில் ஒன்றுமேயிருக்காது.

தை மாதத்தில்மட்டும் ஏன் வீடுகளைத் தூய்மை செய்யவேண்டுமென்றால் தை மாதம் வரையும் மழைக் காலம். கார்த்திகையில் சிறிது பெய்து, மார்கழியில் மழைபெய்யாவிட்டாலும் பனி அதிகம் பெய்யும். அன்றியும் நாட்டுப்புறத்தார்க்கு விளைநிலங்களில் வேலைகள் மிகுதியும் உண்டு. மழைக் காலத்தில் வீடுகளைத் தூய்மை செய்

தாலும் அத் தூய்மை மழையினுல் மாசுபடும். எனவே, மழை நின்றபின் வீடுகளைத் தூய்மைசெய்வதே பொருத்தமானது. பல காரணங்களையும் ஆராய்ந்து ஆன்ருேர் பழங்காலக் கிராம சமுதாய தருமத்தை ஏற்படுத்தினர். அத்தருமப்படி தை முதலில் வீடுகளையும் பண்டங்களையும் தூய்மை செய்யும் வழக்கம் தலைமுறை தலைமுறையாகக் கொண்டிருக்கின்றனர். சமுதாய தர்மப்படி நடப்பது கட்டாயம் அன்று; கடமை. மேலும், மழைக் காலத்தில் தோன்றிய நச்சுப் புழுக்களைத் தொலைப்பதற்கும் வீடு வாசல்களைத் தூய்மை செய்யவேண்டும். மழையினுல் பாசம் பிடித்த வீடு வாசல்களும் பண்டங்களும் தூய்மை செய்தபின் மறுபடியும் நச்சுப் புழுக்களோ நச்சுக் காற்ருே வந்து நோய்களைப் பெருக்காமல் காத்தல்வேண்டும். காப்பு, காத்தல் என்பன ஒரு பொருளன. காப்புக் கட்டல் என்பது காத்தலைச் செய்தல அல்லது காப்பாற்றுதல் என்று பொருள்படும். எதைக் காப்பாற்றுதல்? வீடு வாசல்களிலும் பண்டங்களிலும் நச்சுப் புழுக்கள் தங்கி நோய்களைப் பெருக்காமல் காப்பாற்றுதல் அவ்வாறு நோய்கள் வராமல் தடுத்துத் திக் காப்பற்றுவன (மருந்து) மரத் தழைகளே.

"மருந்தாகித் தப்பா மரம்" என்று திருவள்ளுவர் பாடுவாராயினர். ஆசிரியர் பரிமேலழகர் முதற்கொண்டு எல்லா உரையாசிரியரும் ஆராய்ச்சியாளரும் மருந்தாகித் தபபா மரம்— ஓர் மரம் எனக் குறித்தனரேயன்றி அம் மரம் இன்ன மரம் என எவரும் குறித்திலர் அதைப்பற்றியென்! திருவள்ளுவஞர் திருவுள்ளத்தில் கருதினது மருந்து மரம் என்பது வேப்ப மரமே யாகும். வேப்ப மரத்தின் எல்லாஉறுப்புக்களும் மருந்துக்குப் பயன்படுகின்றன. அதைப்பற்றி ஐயம் வேண்டாம்.

தூய்மை செய்யப்பெற்ற வீடுகளுக்கு நோய்ப் புழுக்கள் அணுகாமல் காப்பாற்றுவதற்காக வீட்டைச் சுற்றியும் தாழ்வாரங்களின் கூரைகளில் வேப்பந் தழைகளையும் பூளைப் பூவும் சொருகி வைத்தார்கள். ஆனுல் இப்பொழுது வேப் பந்தழைகளுக்கு மாருக, துளசித் தழைகளை வைணவரும் வில்வத் தழைகளைச் சைவரும் சொருகி வைக்கிருர்கள். துளசியும் வில்வமும் சொருகுவது மதத்தினுல் ஏற்பட்டதேயன்றி மதியினுல் ஏற்பட்ட தன்று. மேலும், காப்புக் கட்டும் நாளன்று ஒவ்வொருவரும் தமது நிலங்களுக்குச் சென்று தமது நிலங்களின் வரம்புகளைக் கவனித்து அந் நிலத்தின் வரம்புக் கற்களின்மேல் காப்புக் கட்டி வருவார்கள். ஏன்? ஆண்டில் பலமுறை போய் நிலத்தின் வரம்புகளைக் கவனிக்க முடியாமற் போயினும் ஆண்டிற்கொரு முறையாவது வரம்புகளைக் கவனிக்கவேண்டுமென்பதற்காகவே யாகும். வரம்புகளைக் கவனிக் ாமல் போனுல் எல்லாம் வரம்பு மீறிப் போகும்.

(வரம்புகள் மீறுவதை "பொழித் தகராறு" என்றும் கெட்டுத் தகராறு என்றும் சொல்வர்.)

இரண்டாம் நாள் பண்டிகை

இரண்டாம் நாள் பண்டிகையைப் பெரும் பண்டிகை என்பர். அது தான் பொங்கல் பண்டிகை. அப்பொங்கல்தான் பால் பொங்கல். தை முதல் நாளில் நிலமும் பொங்கிற்று. மக்கள் மனமும் பொங்கிற்று. நிலம் மகிழ்ந்து பொங்கி விளைந்த தானியங்களை வீடு கொண்டுவந்து சேர்த்தபின் அத் தானியங்களைச் சமைக்கிருர்கள். புதிதாகத் தாமே விளைவித்த தானியத்தைச் சமைக்கும்போ துண்டாகும் மகிழ்ச்சியை அநுபவித்தாலன்றி வாயால் சொல்ல முடியாது.

பால் பொங்கல் வைக்கக் காரணம் என்னவெனில், பசுக்கள் தைமாதத்தில்

தான் பால் அதிகம் கறக்கும் புல்வெளிகளில் பசும்புல்லை மேய்வதாலும் பச்சைத் தீனியைத் தின்பதாலும் பால் அதிகம் கறக்கும். ஆவினங்களின் எண்ணெய் வழியும் மேனிகளையும், திரண்டு சுரந்த பால் மடிகளையும், காணும் பாக்கியம் வாய்க்கவேண்டுமே! வாய்த்தால் பால பொங்கலின் பெருமை பெருமையுடையதாகும். தமது நிலத்தில் விளைந்த விளைபொருளைத் தமது புலத்தில் மேய்ந்த பசுவின்பாலில் பொங்கல் வைப்பதின்மேல் வேறு என்ன மகிழ்ச்சி வேண்டும்? என்னென்ன பொங்கல் எப்படி எப்படிப் பொங்கவைக்கிறார்கள் என்பதைக் கண்டாயிற்று; களித்தாயிற்று. ஆகையால் தைப் பொங்கலில் மகிழ்ச்சி பொங்குதற்குரிய நிகழ்ச்சிகள் என்ன என்பதையே சுருக்கமாகக் காண்போம்.

பொங்கல் இட்ட பிற்பாடு அப்பொங்கல் சோற்றைத் தட்டுக்களில் வைத்துக்கொண்டு பெண்மக்களும் அவரவர் நிலங்களில் விளைந்த பொருள்களையும் கதிர்களையும் கரும்புகளையும் கொண்டு ஆண் மக்களும் பொது மன்றத்திற்கு வருவர். பொதுமன்றத்திற்கு வந்ததும் முதலில் ஒவ்வொருவர் கொண்டு வந்த பொங்கலையும் ஓரிடத்தில் வரிசை வரிசையாக வைத்து எல்லாப் பெண்மக்களும் சேர்ந்து பொங்கல் பாட்டுப் பாடுவார்கள். பாடிமுடிந்தபின், அப் பொங்கல் சோற்றினைப் பகிர்ந்து ஒவ்வொருவரும் உண்பார்கள். உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடும் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடும் இல்லாமல் எல்லார் பொங்கலையும் எல்லாரும் பகிர்ந்து சுவைபார்ப்பார்கள். இங்ஙனம் சமூகத்தில் ஏற்றமும் தாழ்வும் இல்லாமைக்காகப் பொது மன்றத்தில் பொங்கலைப் பகிர்ந்துண்ணும் வழக்கம் ஏற்பட்டது. ஆண் மக்கள் கொண்டுவந்த விளைவுகளையும் கதிர்களையும் ஓரிடத்தில் வரிசையாக வைப்பார்கள்; வைத்தபின்னர் யாவர் விளைவித்த தானியம் முதன்மையானது, எக்கதிர்களும் கரும்புகளும் நன்றாக விளைந்துள்ளன என ஆராய்ச்சி செய்வார்கள்; சொல்லாடல செய்வார்கள்; விளைவுகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெறும். எவ்வெவ்வாறு பயிர் செய்தால் நல்ல விளைவும் ஆதாயமும் கிடைக்கும் என்பதைப் பற்றி அவரவர் அநுபவத்தைத் தெரிவிப்பார்கள். பின்னர்ச் செவ்வையாக விளைவித்தவருக்குப் பரிசுகள் வழங்கப்படும். இவ்வாறு திருவிழாவை அந்திவரையும் நடத்தி ஊர்வலமாக விளைவுப் பாட்டுப் பாடிக்கொண்டு செல்வர்.

மூன்றாவதுநாள் பண்டிகை

மூன்றாவதுநாள் பண்டிகை இப் பொங்கலுக்குக் காரணமான பண்டிகை; எவையின்றேல உழவில்லையோ விளைவில்லையோ உணவில்லையோ உடல் இல்லையோ உயிர் இலலையோ அவற்றைப் பற்றிய பண்டிகை ஒன்றுவருமேயானல் அவற்றின் சிறப்பைச் சொலலவா வேண்டும்? இவையனைத்திற்கும் காரணமானவை, துணைக்காரணமானவை மாடுகள். எனவே, மாடுகளைக் கொண்டாடுவதற்கான பண்டிகையை மாட்டுப் பொங்கல என்பர். அன்றைக்கு எந்த உழவனும் எருதுகளை வேலைக்குப் பிடிக்கமாட்டான். எந்த உழத்தியும் பசுவைப் பால கறக்கமாட்டாள். கன்றுகளே குடிக்கும்படியாக விட்டுவிடுவர்.

அன்றைக்குக் கால்நடைகளை நன்றாக மேய்ப்பர், தீனிபோடுவர். எருதுகளையும் பசுக்களையும் கழுவுவர். அலங்காரம் செய்வர். பசுக்களுக்கு மஞ்சள் பூசிப் பூச் சூடுவர். மாடுகள் கட்டியுள்ள தொழுவங்களிலேயே பொங்கல் வைப்பர். பின்னர்ச் சாணத்தால் சிறு பட்டி கட்டி அப்பட்டியில் அறைகள் அமைத்து அவ்வறைகளில் தண்ணீரை நிரப்பியபின் பசுவையோ காளையையோ கொண்டுவந்து பட்டியின் பக்கல் நிறுத்தி அதை வழிபட்டு அதற்குப்

பொங்கல் சோறு வைத்துப் பின்பு அப்பட்டியை அதனால் மிதிக்க வைப்பார்கள். அப்பட்டி மிதிக்கப்படும் பொழுது சங்கூதுவார்கள்; பறை கொட்டுவார்கள்; ஆர்ப்பரிப்பார்கள்; பாட்டுப் பாடுவார்கள். இம் மகிழ்ச்சிக்குப் பட்டிப் பொங்கல் என்பர். கம்மவார் "தொட்டிப் பொங்கல்" என்பர். தொழுவம் என்ற சொல் தொட்டி எனத் தெலுங்கில் மருவிற்று போலும். கனுப் பொங்கல் என்றும் சொல்வர்.

உழவுக்கும் விளைவுக்கும் அறுப்புக்கும் அடிப்பிற்கும் எல்லாம் எந்திரங்கள் வந்தபின் எருதுகளுக்கும் பசுக்களுக்கும் பெருமை ஏது? அயல் நாட்டுக் கட்டிப் பால் குடித்துவரும் மக்களுக்குப் பசுக்களாலும் யாது பயன்? இன்று பெருகிவரும் எந்திரங்கள் உழவுத் தொழில்களையும் வென்று விடுமேயானால் மாட்டுப் பொங்கல் மாண்டு எந்திரப் பொங்கல் தோன்றி விடும்.

பசுக்களை வளர்ப்பது பாலுக்கு அன்று; தோலுக்கும் ஊனுக்கும் ஆகும். இதைப்பற்றித் தமிழர் காவியத்தில், "வால்விசிறிக் காதசைத்து வாய்நிறையப்புல்லாகும், மால்வலத்தா மீதமர்ந்த வான்குருவி — சால்வயிற்றீர், பாலுக்கன் றும்மைப் படுகளத்துக் கொன்றான், தோலுக்காப் போற்றுகின்றார் சொல்" என வருவதைச் சிந்தித்தல் வேண்டும்.

மூன்றாவதுநாள் பிற்பகலில் பெற்றோரும் பெற்றோரைப் பெற்றோரும் மாட்டுப் பொங்கலில் ஈடுபட்டிருக்க, வாலிபப் பெண்கள்மட்டும் கூட்டம் கூட்டமாகக் கூடிப் பூப்பறித்தலுக் கென்று புறப்படுவார்கள். ஆடை, ஆபரண மலர்கள் ஆகியவற்றால் அலங்காரம் செய்துகொண்டு கையில் ஒரு சிறு கூடையை வைத்துக்கொண்டு புறப்படுவார்கள். தமக்குப் பிரியமாக வழக்கப்படி செல்லும் காட்டிற்குச் சென்று மரத்தினடியில் தங்குவார்கள். எல்லாரும் ஒன்றுகூடியபின் பூப்பறித்தல் என்னும் சடங்கு நிகழும். பின்பு அவரவர் கொண்டுவந்திருந்த கடலை, பொரி, அவல், தேங்காய், பழம், பணியாரம் முதலியவற்றை எல்லோரும் சேர்ந்து அவற்றை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு உண்பார்கள். உண்டாட்டத்தின்பின் கொண்டாட்டம் நடக்கும். முன்னர்ப் பாடுவார்கள்; பின்னர்க் கும்மி தட்டுவார்கள். மாலைப் பொழுதில் இக்காட்சி விண்ணுலகத்தை மண்ணுலகமாக்கும் பெரு மகிழ்ச்சிக் குரியதாகும்.

இப்பூக் கொய்யும் பூவையர் கூட்டத்தில் எவ்வாண் மகனும் கலப்பதில்லை. கலக்கவும் கூடாது. எனினும் வாலிபர் சும்மா இருப்பார்களா? பக்கங்களில் ஆங்காங்கிருந்து அவ்வாடலையும் பாடலையும் கண்டு கண்டு களிப்பார்கள்.

இதனால் வீடுகளிலே யிருந்து பல பேருடன் கலந்து பேசுவதற்கு வாய்ப்பில்லாத பெண்மக்கள் பலருடன் கலந்துபேசவும், பாடவும் ஆடவும் வாய்ப்புக் கிடைக்கிறது. மகளிரின் உள்ளம் புதுப்புதுச் செய்திகளால் மலர்கின்றது. விண்பொங்க மண்பொங்க மக்கள் பொங்க தைப் பொங்கல் வருகின்றது.

★ "கலைக்கதிரி"ன் அடுத்த இதழ்

காந்தியடிகள் பற்றிய விழுமிய கட்டுரை கவிதைகளுடன் வெளிவரும். அண்ணலின் திருவுருவம் அழகொழுகும் மூவண்ண ஓவியமாக அட்டையில் ஒளிரும்.

---

* *வேலையின்மையால் வாழ்க்கை இழந்து வாடும் மக்கள் எத்துணைப் பேர் !*
* *வேலையின்மை ஏன் ஏற்படுகின்றது?*
* *இதற்குரிய காரணங்களை ஆராய்ந்து வேலையின்மையைத் தடுப்பதற்கேற்ற வழிகளை விளக்கிக் கூறுகின்றது இச்சிறு கட்டுரை.*

வேலையின்மை

திரு. P. இராமச்சந்திரன், M. A.

மக்கள் நிலை உயரவேண்டும் என்றும் மனித சமுதாயம் வறுமையற்று வளம்பட வாழ வேண்டும் என்றும் உலகோர் கருதுகின்றனர். இதற்காகப் பல திட்டங்கள் வகுக்கப் படுகின்றன. இத்திட்டங்கள் நிறைவேறுதற்குப் பல செயற்குழுக்களும் நியமிக்கப் படுகின்றன. எத்துணை முயன்றாலும் மனித சமுதாயம் வறுமையினின்றும் நீங்க முடியுமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. வறுமை ஒழிய வேண்டுமாயின் மக்கள் உழைக்க வேண்டும். உழைக்க வேண்டுமானல் அதற்கேற்ற வாய்ப்புக்கள் வேண்டுமன்றோ? தக்க சமுதாய அமைப்பு இருந்தாலன்றி இவ்வாய்ப்புக்கள் ஏற்படா. எனவே, வறுமையைப் போக்குதற்கு அடிப்படையாக வேண்டுவது சிறந்த சமுதாய அமைப்பேயாம். இச்சமுதாய அமைப்பு இன்மையால் உழைக்க வாய்ப்பும் இல்லாமற் போகிறது. இதனல் வேலையின்மை ஏற்பட்டு, மக்கள் வறுமை மிகுந்து வாடுகின்றனர்.

சாதாரணமாக வேலையின்மைக்குக் காரணம் உழைப்பைக் குறைக்கும் பல பொறிகளின் தோற்றமே என்று பலர் கருதுகின்றனர். ஆனல் பொறிகள் பலகுவதால் வேலையின்மை ஏற்படுகிறது என்று சொல்வதற்கில்லை. மக்களுக்கு இன்றியமையாத பொருள்கள் பல. ஆனல் இப்பொருள்கள் அனைத்தும் வேண்டிய அளவு உற்பத்தி செய்யப்படுவதில்லை. இப்பொருள்களைப் போதுமான அளவு உண்டாக்கினல் ஒருவாறு வேலையைப் போக்கலாம். வேலையின்மைக்கு இது ஒன்றே காரணம் ஆகாது. வேலையின்மையானது பொருளாதாரக் குறைபாடுகளின் விளைவாய்த் தோன்றுவதாம். இனி, வேலையின்மைக் குரிய காரணங்களைச் சிறிது ஆராய்வாம்.

நாளுக்குநாள் நாகரிகம் வளர்கிறது. வியத்தகு பொறிகள் பல தோன்றி முன்னினும் அழகும் சிறப்பும் வாய்ந்த பொருள்களை உற்பத்தி செய்கின்றன. மேலும் மக்களிடையே விருப்பும் வெறுப்பும் மாறிமாறித் தோன்றுகின்றன. இக்காரணங்களினல் நேற்று இன்றியமையாத பொருள்களாகக் கருதப்பட்டவை இன்று வேண்டாதவைகளாகின்றன. இதனல் சில பொருள்களின் உற்பத்தியை நிறுத்தவோ அல்லது குறைக்கவோ நேரிடுகிறது. உற்பத்தியை நிறுத்தினலும் குறைத்தாலும் வேலையின்மை உண்டாகும்.

உதாரணமாக, சென்ற ஆண்டு செய்த கைக்கடியாரம் இவ்வாண்டு நாகரிகத்திற்கு ஒவ்வாததாகிறது. எனவே காலத்திற்கேற்ப உற்பத்திசாதனங்களை மாற்றியமைக்க நேரிடுகிறது. அல்லது வேறு பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டிய தாகிறது. ஆதலால், ஏற்கெனவே குறிப்பிட்ட கைக்கடியாரத்

தொழிலில் இருந்தவர்கள் புதுப்பொறிகளிடத்து வேலை செய்ய இயலாதவர்களாகிறார்கள்; அல்லது தாம் அறிந்த வேலை பெறுவதற்கு ஊர் விட்டு ஊர் செல்லவும் அவர்களால் முடிவதில்லை. இதனால் அவர்கள் வேலையை இழக்க நேரிடுகிறது. இது ஒரு நாட்டில் மட்டும் ஏற்பட்டால் மற்ற நாடுகளுக்கு ஏற்கெனவே உற்பத்தி செய்யப் பெறும் பொருள்களையே ஏற்றுமதி செய்வதற்கு உற்பத்தியை நிறுத்தாமல் உண்டாக்கலாம். ஆனால் மேற்குறித்த காரணங்கள் மனித சமுதாயத்திற்கே பொருந்துவனவாம். இவ்வேலை யின்மையை இரு வழிகளால் ஒருவாறு தடுக்கலாம். ஒன்று, உற்பத்திப் பொருள்கள் மக்களுக்கு முன்னிலும் பன்மடங்கு பயன் தரக்கூடியனவாய் இருந்தாலொழிய உற்பத்திச் சாதனங்களை மாற்றுதல் கூடாது என்று விதித்தல் வேண்டும். மற்றொன்று தொழிலாளிகள் புதுப் பொறிகளினிடத்து வேலைசெய்வதற்காகத் தம்மை மாற்றி அமைத்துக் கொள்ளுதற்குரிய சூழ்நிலையை உண்டாக்குதல் வேண்டும்.

இனி, சில காலங்களில் மட்டும் சில பொருள்கள் தேவையாய் இருக்கலாம்; அல்லது ஒரு ஆண்டின் சில பகுதிகளிலோ ஒவ்வொரு மாதத்தின் முதற்பகுதியிலோ பொருள்கள் அதிகம் செலவாகி மற்றக் காலங்களில் விலையாகாமல் போகும். இதனால் பொருள்கள் மிக்க செலவாகுங் காலங்களில் உற்பத்தியைப் பெருக்குவதும் மற்றைய காலங்களில் குறைப்பதும் நிறுத்துவதும் நேரும். இக்காலங்களில் வேலையின்மை ஏற்படும். ஆண்டு முழுதும் உற்பத்திசெய்வதற்கான திட்டம் இட்டு இவ்வேலை யின்மையைப் போக்கலாம்.

ஒரு தொழிற்சாலையில் ஒரு பொருளை முற்றுவிக்கப் பல்வகையான வேலைகளைச் செய்யவேண்டும். அம்முறையில் ஒரு பாகத்தை முடித்தாலொழிய மற்றொரு பாகத்தைச் செய்ய முடியாது. இங்ஙனம் ஒரு பொருளின் பல பாகங்களையும் ஒரே காலத்தில் செய்யாமற்போனால் வேலையின்மை ஏற்படுவதாகும். எனவே எப்பொழுதும் எல்லாப் பாகத்தையும் செய்து முடிக்கத் திட்டமிட்டால் இவ் வேலை யின்மையைத் தவிர்க்கலாம் அல்லவா?

இனி, பொருளாதார நெருக்கடி ஏற்படுங் காலங்களில் பொருள்களை வாங்குதற்கேற்ற சக்தி மக்களிடையே இல்லாததனால் உற்பத்தி செய்யும் பொருள்கள் அனைத்தும் விலையாகாமல் போகிறது. அதனால் உற்பத்தியைக் குறைக்க நேரிடும். இங்ஙனமே பொருளாதார நெருக்கடி தீர்ந்து வளம் ஏற்படும் காலத்தில் மக்களிடையே வாங்கும் சக்தி பெருகும். அப்போது உற்பத்தியும் பெருகுவதாகும். இதனால், உற்பத்தி குறையும்போது வேலையின்மையும் உற்பத்தி பெருகும்போது வேலையுண்மையும் ஏற்படுவனவாம். உதாரணமாக யுத்தகாலங்களில் வேலையுண்மையும் யுத்தத்திற்குப்பின் வேலையின்மையும் ஏற்படுவது கண்கூடு. இங்ஙனமன்றி எல்லாக் காலங்களிலும் வேலையுண்மை ஏற்படவேண்டுமென்றால் பொருளாதார அமைப்பு அதற்குத்தக மாற்றி அமைக்கப்படல் வேண்டும். பொருளாதார நெருக்கடியும் வளமும் மாறிமாறி உண்டாதற்குக் காரணம் என்ன? சிறிது ஆராய்ந்தால் தொழில் அமைப்பில் ஏற்படும் மாறுதல்களே அதற்குக் காரணம் என்பது புலனாம். தொழில் அமைப்பில் எங்ஙனம் மாறுதல்கள் ஏற்படுகின்றன? அதற்குக் காரணம் நிதியமைப்பு ஒழுங்கினமே (Maladjustment in monetary system) யாகும். எனவே, வேலையின்மை ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் நிதியைப் பொறுத்துள்ளதாகும். பொருளாதாரக் குறைபாடுகளால் விளையும் வேலையின்மையை அடிப்படை (Basic) வேலையின்மை என்று கூறலாம்.

மக்களிடையே பல காரணங்களை முன்னிட்டுப் பணத்தைச் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்று கிறது. சிறப்பாகப் பிற்கால வாழ்க் கையை நினைத்துப் பணத்தைச் சேமிப் பதுண்டு. இங்ஙனம் சேமித்த பணத்தை முதலாகக் கொண்டு உற் பத்திச் சாதனங்களைப் பெருக்கலாம். அதிக லாபம் கிடைத்தால் அப் பணத் தைப் புழங்காமல், தொழில் வளர்ச் சிக்கு முதல் பணமாகப் பயன்படுத்து வதற்கோ அல்லது வேறு எவ்வழியில் அதிக லாபம் வரும் என்று ஆராய்ந்து அவ்வழியில் பணத்தை நிரப்புவார்கள். எனவே உற்பத்திக்கு இன்றியமையாத சாதனங்களில் ஒன்றாகிய பணம் அதிகம் கிடைப்பதனால் உற்பத்திப் பெருக்கம் அதிகமாகிறது. இப்படி அதிகமாகும் பொருள்களை உபயோகித் துக் கொள்ள மக்களுக்கு வாய்ப்பும் வசதியும் வேண்டும். இல்லையேல் பொருள்கள் செலவாகாமல் தேங்கிக் கிடக்கும். பொருள்கள் செலவாக வேண்டுமானால் மக்களிடையே வாங் கும் சக்தி பெருகவேண்டும். வாங்கும் சக்தி பெருகவேண்டுமானால், மக்கள் பெறும் வருவாயை வாழ்க்கைக்காகச் செலவழிக்கவேண்டும். இங்ஙனம் செல வழிக்காமல் வேண்டிய அளவுக்குமேல் பணத்தைக் குவித்தால் உற்பத்தி செய் யப்படும் பொருள்கள் செலவழியாமல் தேங்கிக் கிடக்கும். இந்நிலை ஏற்பட்டால் உற்பத்தியைக் குறைக்க நேரிடுகிறது. எனவே, வேலைநிறுத்தம் உண்டாகிறது. மக்களின் வருவாயானது, சேமிப்பது செலவிடுவது ஆகிய இவ்விரண்டும் பொருந்துமாறு அமைய வேண்டும் என்பது தெளிவாம். இங்ஙனமன்றி ஒன்றுக்கொன்று முரண்பாடாக அமைந்தால் மக்களிடையே வாங்கும் சக்தி குறையும். இதனால் உற்பத்திக் குறைவு ஏற்பட்டு, உடனே வேலை யின்மை உண்டாகும். அடிப்படை வேலையின்மையானது மக்களிடையே பணச் சேமிப்பு அதிகம் ஏற்படுங் காலங்களில் உண்டாவதாம்.

இனி, ஏற்றுமதி இறக்குமதி யொட் டிய காரணங்களினாலும் வேலையின்மை தோன்றலாம். தொழிலில் முன் னேற்றமடைந்த நாடுகளிலிருந்து பிற்போக்கு நாடுகள் அதிகமாக இறக்குமதியைச் செய்யும். ஆனால், முன்னேற்றம் அடையாத நாடுகள் அதே நிலையில் இருப்பதற் கில்லை. இந்நாடுகள் பொருளாதாரத் தில் முன்னேற்றம் அடைய அடைய இறக்குமதியானது குறைந்து கொண்டே வரும். இக் காரணத்தால் ஏற்றுமதி செய்து வந்த நாடுகளில் வேலையின்மை ஏற்படும் அன்றோ? இதற்கு உதவியாய் இருப்பது வியா பாரத் தடையின்மை (free trade.) இதனால் உலகப் பொருளாதார நெருக் கடி ஏற்படுகிறது. இவ் வேலையின் மையைத் தவிர்க்க வேண்டுமானால் வியாபாரத் தடையை ஒரு சிறிது விதிக்க வேண்டும். இதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பு அவசிய மாகும். இல்லையேல் ஏற்றுமதி இறக் குமதியினின்றும் வியாபாரப் போட்டி ஏற்பட்டு இறுதியில் அரசியல் சிக்கலில் வந்து முடியும்.

இதுவரை கூறியவற்றால் வேலை யின்மைக்குரிய காரணங்களும் அவற் றைத் தவிர்ப்பதற்கேற்ற ஒரு சில வழி களும் தெளிவாம். இவ்வழி களேயன்றி வேறு சில வழி களாலும் வேலையின்மையைத் தடுக் கலாம். சிறப்பாக அரசியலார், வேலை யின்மை ஏற்படுங்காலங்களில் மக்களுக் குப் பயன்தரக்கூடிய பல்வேறு (Public Works) திட்டங்களை நிறைவேற்று வதன் மூலம் வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்கலாம். தவிர, தனிப் பட்டவர்கள் தொடங்கும்தொழில் களுக்கு உதவித் தொகை(sub-sidies) வழங்கி வேலையற்வர்களுக்கு வேலை கொடுக்கும்படிச் செய்யலாம். மற்றும் வரிகளைக் குறைத்து மக்களி டையே வாங்கும் சக்தியைப் பெருக்கி உற்பத்தியாகும் பொருள்களைச் செல

வாகும்படிச் செய்யலாம். மேலும் வரவு செலவுத் திட்டங்களின் மூலம் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்வதாலும், பொருள் விலைக் கட்டுப்பாடுகளின் மூலமும், நெருக்கடியான காலங்களில் வியாபாரத்தை ஓரளவு தாமே ஏற்று நடத்துவதின் மூலமும் அரசியலார் வேலையின்மையைக் குறைக்கலாம்.

வேலையின்மையைப் போக்குதற்கு வேலை கொடுக்கும் நிலையங்களை அமைத்தற்கான திட்டங்களை மட்டும் வகுத்தல் போதாது. பொருளாதாரக் குறைபாடுகள் இருக்கும் வரை வேலையின்மையும் இருந்தே தீரும் என்பதை உலகம் உணர்வதாக!



கெட்டிக்கார ஆடு

குன்றின் பாதையிலே நடுவில் ஒரு பள்ளம். அக்கம் பக்கத்திலுள்ள பசிய இலைகளை நோக்கிக்கொண்டே செல்லும் ஆடுகள் அதை எவ்வாறு கவனிக்கும்?

எல்லாவற்றிற்கும் முன்னே சென்ற ஆடு, கால் தவறிப் பள்ளத்தில் விழுந்தது. 'இந்தப் பள்ளத்தில் ஏதோ ஒரு விசேஷம் இருக்க வேண்டும். நாம் முன்பின் பாராமல் இதில் விழுவதே சரி' என்று நினைத்தன அதன் பின்னே வந்த ஆடுகள்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து .... பள்ளம் நிரம்பிக் கொண்டே வந்தது. கடைசி ஆடு ஓடிவந்தது; ஆனால், பள்ளம் நிறைந்துவிட்டபடியால், அது மற்றுமுள்ள ஆடுகளின்மீது விழுந்து புரண்டுகொண்டே, பள்ளத்தைக் கடந்து அப்புறம் சென்றது. பின்னால் திரும்பி மற்ற ஆடுகளை நோக்கி, "மூடர்களே! வழியிலுள்ள பள்ளங் கூடவா உங்கள் கண்ணில் படவில்லை?'' என்று அது கேட்டது.

— காண்டேகர்

(கலைமகள் பதிப்பு)

கலைக் களஞ்சியம்

வெளியிட்டோர்:
தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.

ஆங்கில மொழியிலே எத்தனையோ கலைக்களஞ்சியங்கள் (Eucyclopaedias) உள்ளன. துறைக்கு ஒரு களஞ்சியம் உள்ளது என்றால் மிகையன்று. அவ்வாறு களஞ்சியங்கள் தயார் செய்வது என்பது எளிய காரியமன்று. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் முகவுரையில் கூறியுள்ளதுபோல் பெருநிதியும் பெருமுயற்சியும் ஆயிரக்கணக்கான அறிஞர்களின் ஒத்துழைப்பும் வேண்டும்.

கல்வியமைச்சர் திரு. அவினாசிலிங்கம் அவர்களின் தமிழ் ஆர்வத்திற்குக் கலைக்களஞ்சிய முயற்சியே தக்க சான்றாக அமைகிறது. தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒன்று தொடங்கி, அதற்கு அரசாங்க ஆதரவும் தேடி, அதன் பின்னர்க் கலைக்களஞ்சியம் வெளியிட வேண்டிய முயற்சியினையும் மேற்கொண்டுவிட்டது அவருடைய சிறந்த தமிழார்வம்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் முடிவாக வெளியிடப்போகும் கலைக் களஞ்சியம் எப்படி இருக்கும் என்பதை அறிவதற்கு முன் மாதிரியாக ஒரு சிறு நூலை வெளியிட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்துக் கலைக் களஞ்சியத்தின் தோற்றத்தையே ஒருவாறு முடிவு செய்ய முடியும். களஞ்சியத்தின் தரம் எப்படியிருக்கும் என்பதை உறுதியாகக் கூறிவிட முடியாது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழி கலைக்களஞ்சியத்துக்கு அவ்வளவாகக் கைகொடுக்காது.

தோற்றம், அச்சு அமைப்பு ஆகியவை முதல் தரம் என்றே சொல்லிவிடலாம். கொள்ளை அழகு குலவுகிறது. அரசாங்க அமைச்சரைத் தலைவராகக் கொண்டுள்ள ஒரு கழகத்தால் இந்த அழகுக் கொலுவை அமைக்க முடியாதா என்ன? களஞ்சியத்தின் அழகு பற்றி ஐயப்பாடு எந்தக் கூட்டத்திலும் எழ முடியாது.

ஆனால், அதிலே கையாளப்படும் சொற்கள் பற்றிப் பலவேறு முரண்

பட்ட தீர்ப்புக்கள் பிறக்கத்தான் செய்யும். "பலமாதிரியாகப் பேசத்தான் செய்வார்கள்; அதுபற்றி நாம் கவலைப் படவேண்டியதில்லை." என்று அசட்டை செய்வது கூடாது. பல பேர்களுடைய கருத்தைப்பற்றிக் கவலை இல்லையென்றால், மாதிரிப் பிரதியே வெளியிடாமல் இருந்திருக்கலாம். கூடியமட்டும் தமிழ் சொற்களைக் கையாள வேண்டும் என்ற எண்ணம் கலைக் களஞ்சியத்தின் ஆசிரியர் குழுவிடம் இருப்பது தெரிகிறது. என்றாலும், பல்கலைக் கழகம் போன்ற சொற்கள் நன்றாக வழக்கில் பயின்று வந்திருந்தும் 'சர்வ கலாசாலை' என்றே களஞ்சியம் குறிக்கிறது. அபிவிருத்தி, அதிகம், அவசியம்.........போன்ற சொற்களும் வாராமலே எழுதலாம். கலைக் களஞ்சியம் என்பது அடிக்கொரு தடவை அச்சிட்டு வெளியிடும் அரையணாப் பத்திரிகை அன்று; நிலைத்து நிற்கும் சிறப்போடு புகழைத் தேடித் தரும் பண்டாரமாக இருக்க வேண்டியதாகும். எனவே, அதிலே கையாளப்படும் சொற்கள்பற்றி எச்சரிக்கையாகத் தான் இருக்கவேண்டும். மானேஜிங் கமிட்டி, மைக்கிராஸ்கோப் போன்ற ஆங்கிலச் சொற்களுக்கு நல்ல எளிய தமிழ்ச் சொற்களைத் தரக்கூடிய அறிஞர்கள் கலைக் களஞ்சியத்துக்குக் கிடைக்கவில்லையா?

அச்சுப் பிழைகள் யாரையுமே ஏமாற்றும் வல்லமை வாய்ந்தவை. முகவுரையிலேயே "பொருக்கப்பட்டவை" என்று உள்ளது. உட்பகுதியில் சிற்சில இடங்களில் ஒற்று மிகாத பிழைகள் உள்ளன. கலைக் களஞ்சியம்போன்ற நிலையான நூல்களை அச்சிடும்போது குறைந்தது பத்துப் பேராவது திருத்தவேண்டும். இல்லையெனில், திருத்துவோர் எவ்வளவு தான் வல்லவராயினும் அச்சுப்பிழை ஏமாற்றிவிடும்.

மகாகவி தண்டியைப் பற்றி எழுதியுள்ள குறிப்புக்கு மகாபலிபுரம் படம் இன்றியமையாதது என்று சொல்லுவதற்கில்லை. ஆனால் 'இந்தியா உருப் பெற்ற வரலாறு' என்ற தலைப்பில் கட்டாயம் ஒரு படம் வேண்டியிருக்கிறது. காண்டுவானக் கண்டம் எப்படியிருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்த்துக் கொள்வதைவிட, நேரிலே ஒரு நிலப்படத்தின் வாயிலாக அறிவது எளியது; நல்லதுங்கூட.

'தென் இந்தியப் பறவைகளின் வாழ்க்கை' என்ற தலைப்பின்கீழ் வாத்து அறுபது மைல் விரைவில் பறப்பதாகக் குறித்துள்ள செய்தி வியப்பினைக் காட்டிலும் நகைச் சுவையைத் தான் மிகுதிப்படுத்தும். தென்னிந்திய வாத்து ஐந்தாறு அடிகள் கூடப் பறக்காது என்பதை யாவரும் அறிவர். இத்தகைய பிழைகள் மொழிபெயர்ப்பால் ஏற்படும் கோளாறுகளாக இருக்க வேண்டும்.

இயன்ற அளவு ஒரே நிலையினதான நடையும், பொருள் தெளிவும் அமைந்துள்ளன என்பது உண்மையிலேயே மகிழ்ச்சிக் குரியது; பாராட்டவேண்டிய சிறப்புமாகும். சிக்கலான சில ஆங்கிலச் சொற்களுக்கு அழகான—தூய—தமிழில் சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன. தொல் பொருளாராய்ச்சி, மூலக்கூறு, தையற்பொறி, சாறுண்ணி போன்ற சொற்களை ஆக்கியிருப்பது பெரிதும் பாராட்டற்குரியது. அழகும் பொருத்தமும் வாய்ந்த தூய தமிழ்ச் சொற்களை ஆக்கும் திறன் வாய்ந்தவர்கள் களஞ்சியத்தின் குழுவில் உள்ளனர் என்பது தெரிகிறது. கலைச் சொற்கள் தக்கவாறு தமிழில் அமைத்தல் இயலாது என்று பேசுவோர்க்கு வாய்ப்பூட்டாகவும், பயிற்சி மொழியாகத் தமிழைக் கொள்ளுவோர்க்கு வழி காட்டியாகவும் கலைக் களஞ்சியம் அமையலாம் என்ற நம்பிக்கை பிறக்கிறது. நம் நம்பிக்கை பாழ்போகாதிருக்குமாக.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் மேற்கொண்டுள்ள வேலை மிகமிகப் பெரியது. தாங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் திருப்பணி எவ்வளவு அருமைப்பாடு உடையது என்பதையும் அறிந்திருக்கிறார்கள். பொறுப்புணர்ச்சி பெற்ற அவர்களுடைய தமிழ்ப் பற்றுக்கு நமது வாழ்த்தும், பாராட்டும் உரியன. தமிழன்னைக்குக் கோயில் கட்டுகிறார்கள் என்றுகூடச் சொல்லலாம். அன்னை எழுந்தருளும் கோயில்; ஆகையால் அழகு பொருந்த இருக்க வேண்டும்; அதே வேளையில் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

முகவுரையிலே, "இம் முயற்சியில் பல குறைபாடுகள் ஏற்படலாம். அக் குறைபாடுகளைப் பாராட்டாமல் இம் முயற்சிக்கு வேண்டிய உதவியும் உற்சாகமும் கொடுத்து உதவுமாறு தமிழன்பர்களை மிகவும் வேண்டிக்கொள்ளுகிறோம்" என்று அமைச்சர் வரைந்துள்ளார். உண்மைதான். தமிழன்பர் அனைவருடைய ஆதரவும் இப் பெரு முயற்சிக்கு வேண்டும். தமிழன்பர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பால் தமிழர்களுக்கு ஒரு பெரிய கலைச் செல்வம் கிடைக்குமென்று எதிர்பார்ப்போமாக!

❀

சமத்துவம்

ஒரு பெரிய மீன் சிறிய மீனைக் கண்டதும் அதை விழுங்க வாயைத் திறந்தது.

"இது பெரிய அநீதியாக இருக்கிறதே! எனக்கும் வாழும் உரிமை உண்டு. சட்டப்படி எல்லா மீன்களும் சமமானவை" என்று சிறு மீன் கத்தியது.

பெரிய மீன் அமைதியாக, "சட்டத்தைப் பற்றி ஏன் சும்மா அளக்கிறாய்? நான் உன்னை விழுங்கக்கூடாது என்பதுதானே உன் எண்ணம்? சரி, இதோ என்னையே நீ விழுங்கிவிடேன்! விழுங்கு அப்பனே, விழுங்கு. எதுக்கு இப்படிப் பயப்படுகிறாய்? நான் உன் மேல் ஒரேயடியாகப் பாய்ந்துவிடமாட்டேன்" என்று பதில் சொல்லியது.

சிறு மீன் துணிவுகொண்டு வாயைத் திறந்து அந்தப் பெரிய மீனை விழுங்க ஆனமட்டும் முயன்றது. கடைசியில் பெரு மூச்சு விட்டு நம்பிக்கையை இழந்து, "நீ சொல்வதுதான் ஐயா, உண்மை. என்னை விழுங்கிவிடு" என்றது.

— ஸோலோகப்

விடைகளும்

நாகரிகம் என்றால் என்ன? சட்டைகளை வெவ்வேறு தினுசுகளாகத் தைத்து அணிந்துகொள்வது, பீடி சிகரெட் பிடிப்பது, மோட்டார் ஓட்டிப் பழகுவது முதலியவைகளை நாகரிகம் என்று சிலர் கருதுகின்றனர். ஒருசிலர் விஞ்ஞானம் முதலியவற்றை நன்றாகப் படித்தல், தேகத்தைச் சுத்தமாய் வைத்திருத்தல், பெரியவர்களிடம் மரியாதையாக நடந்துகொள்ளுதல் முதலியவைகளை நாகரிகம் என்று கூறுகிறார்கள். நாகரிகத்தின் உண்மைப் பொருளை விளக்கும்படியாய் வேண்டுகிறேன்.

சிறந்த உடை அணிவதோ, உயர்ந்த மோட்டார் வண்டியில் செல்வதோ, ஆடம்பர வாழ்வு நடத்துவதோ, பீடி சிகரெட் பிடிப்பதோ நாகரிகம் ஆகாது. அன்றியும், அவை நாகரிகத்தின் சின்னங்களும் ஆகா. சிறு குழந்தைகள் வெவ்வேறு வகையாகத் தைக்கப்பெற்ற சட்டைகளை அணிவதாலேயே நாகரிகம் அடைந்தவர்கள் ஆவார்களா? நாள்தோறும் பிறர் பொருளைப் பறித்துப் பிழைக்கும் கயவர்களும் மோட்டார் வண்டி ஓட்டப் பழகிக்கொண்டிருக்கிறார்கள். மோட்டார் வண்டி ஓட்ட அறிந்தவர் என்பதாலேயே அவர்களை நாகரிகம் அடைந்தவர் என்று கூறிவிடலாமா? ஒரு குரங்கைச் சைகிள் வண்டி விடவும், தேநீர் அருந்தவும், சிகரெட் பிடிக்கவும் பழக்கலாம். இவற்றைச் செய்வதால் அக்குரங்கு உயர்ந்ததாகிவிடுமோ? முடிவில் அக்குரங்கு குரங்கு தானே!

நாகரிகம் என்பது சிறப்பாக அகப் பண்பாட்டை ஒட்டியது. அக வாழ்வில் ஏற்படும் நல்ல பண்புகளை-நெஞ்சின் உயர்நிலைகளையே-நாகரிகத்தின் கூறுகளாகக் கொள்ளலாம்.

அழகிய பொருள்களிடத்து ஆர்வமுடைமை நாகரிகத்தின் பாற்படும். அழகிய பொருள்கள் ஆவன யாவை? நாம் பழகப் பழக நமக்கு விருப்பத்

தையே யன்றிச் சலிப்பைத் தாராத பொருள்கள் எவையோ, அவற்றை அழகுடைய பொருள்கள் எனலாம். அழகுடைய பொருள் என்றும் உயிர் உள்ளதாகும். உதாரணமாக, கம்பன் செய்த காவியமும் இளங்கோ இயற்றிய சிலப்பதிகாரமும் தோன்றிப் பல நூற்றாண்டுகள் ஆயினும் அவை இன்றும் உயிரோடு விளங்கிப் படிப்போர் நெஞ்சினை அள்ளுகின்றன அல்லவா? இங்ஙனமே அஜண்டா குகை, மாமல்லபுரம் முதலிய இடங்களில் ஒளிரும் ஓவியங்களும் அழகுடைப் பொருள்களாம்.

தற்காலத்தில் விஞ்ஞானத்தின் துணையால் பல வியத்தகு புதுமைகள் காணப்படுகின்றன. ஆனால், இப்புதுமைகளை நாகரிகம் என்று கூறுவதற்கில்லை. புதுமையைக் கண்டுபிடிக்க மேற்கொண்ட முறையை நாகரிகம் எனலாம். புதுமையைக் கண்டு பிடிப்பதற்கு ஒருவன் மனத்தில் புதிய எண்ணங்கள் தோன்றவேண்டும். இது காறும் எண்ணிய எண்ணங்களையே எண்ணினால் புதிய தொன்றைக் கண்டு பிடிக்க இயலாது. உதாரணமாக, சர் சி. வி. ராமன், தம்மைப் போன்ற விஞ்ஞானிகள் எண்ணியவாறே, எண்ணி இருந்தால் இராமன் எஃபக்ட்டைக் கண்டுபிடித் திருக்கமுடியுமா? மாறுபட்ட புதுமையான எண்ணங்களே வேண்டும். இவ்வெண்ணங்களின் பயனாகப் புதுமைகள் கண்டுபிடிக்கப்படாவிட்டாலும் அவற்றை எண்ணுவதே நாகரிகத்தின் அறிகுறியாம். புது எண்ணங்கள் எண்ணுதற்குரிய உரிமை எவ்வகையிலேனும் தடைப்படுதல் கூடாது. ஓர் நாட்டில் ஒழுக்கம் குன்றினால் இவ் வுரிமை தடைப்படும்.

ஒழுக்கம் நாகரித்தின் உயிர் நாடியாகும். ஒரு நாட்டு மக்களிடையே ஒழுக்கம் குன்றின் அந்நாட்டில் அமைதி நிலவுமா? அங்குக் குழப்பம் ஏற்பட்டு அநாகரிகமன்றோ தலைவிரித்தாடும்? பிறர்பால் அன்பும் அடக்கம் உடைமையும், தன்னலத்தினும் பிறர் நலத்தையே பேணுவதும், சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதும் இன்னோரன்ன பிறவும் ஒழுக்கத்தைச் சார்ந்தனவாம்.

எனவே, கலை, புதிய எண்ணங்களை எண்ணுதல், அவற்றை எண்ணுதற்குரிய உரிமை, ஒழுக்கம் ஆகியஇவை சிறப்பாக நாகரிக வளர்ச்சிக்குத் துணை செய்யும் எனக் கொள்ளலாம்.

திருவள்ளுவர் முதிர்ந்த நாகரிகத்தின் தன்மையை,

'பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்'

என்ற குறளால் விளக்குகின்றார். விரும்பத் தகுந்த நாகரிக முடைய பெரியோர் தம்மொடு பல காலும் பழகிய நண்பன் தமக்கு விஷத்தை யிட்டாலும், அதை மறுக்க மாட்டாமல் உண்டு அமைதியாக அவனோடு பொருந்தியிருப்பர் என்பது இக்குறளின் பொருளாம்.

பழகியவரோடு கண்ணோட்டமுடையவர்களாக வாழவேண்டும் என்பதே இதன் கருத்து. இதுவே வளர்ந்து முதிர்ந்த நாகரிகமாகும். இந் நாகரிகம் உடையவர் [1]'பிறர் வருந்தாமல் வாழட்டும் என்று அதற்காக அவர்கள் இட்ட நஞ்சும் உண்டு, தம் உயிர் வேதனை தெரியாமல் அவர்கள் வாழட்டும் என்று அமைதியும் பூண்கின்றார்கள். அவர்களிடம் வெறுப்பும் சினமும் கொள்ளாமல் அவர்களைத் தண்டிக்காமல் இருக்கும் பண்பு, அவர்களை விட்டுத் துறக்காமல் மேலும் அவர்களோடு பழகும் பழக்கம், அவர்கள் தம்மைக் கொல்லச் சூழ்ந்து நஞ்சு இடுவதைக் கண்டும் பொறுத்திருக்கும்

1. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்-மு. வ. (பக்கம் 121)

பொறுமை, அதை எடுத்து உண்ணத் துணியும் துணிவு, துணிந்து உண்ட பின்னும் தம் உயிர் வேதனையை அவர் களுக்குப் புலப்படுத்தி அதனுல் அவர் கள் வருந்தும்படியாகச் செய்யக் கூடாதுஎன்று தம் துன்பத்தைத் தமக்குள் அடக்கிக்கொண்டு அமைதி யும் அமைதி இவற்றை ஒவ்வொன்ருக எண்ணிப் பார்க்கப் பார்க்க மனப் பண்பாடு என்னும் நாகரிகத்தைப் படிப்படியாக அளந்தறிவது போலத் தோன்றுகிறது.' எனவே கண்ணேட் டம் நாகரிகத்தின் சிகரமாக விளங்கு வதைக் காண்க.

வால் நட்சத்திரம் தலைப்பக்கம் பிரயாணம் செய்கிறதா, வால் பக்கம் பிரயாணம் செய்கிறதா?



வால் நட்சத்திரம் சதா தலைப் பக்கமாக வோ வால் பக்கமாகவோ ஒரேமாதிரியாகப் பிரயாணம் செய்வதில்லை.

அதற்கு வால் முளைப்பதே சூரியனின் அருகில் வரும் பொழுதுதான். அதன் பாதை நீண்ட வளைய வடிவமாக இருப்ப தாலும், அதன் வால் எப்பொழுதும் சூரிய னுக்கு மறுபுறத்திலேயே இருப்பதாலும், வால் நட்சத்திரம் சூரியனை நோக்கி வரும் போது தலைப் பக்கமும், சூரியனின் அரு காமையில் செல்லும்போது பக்க வாட்டி லும், சூரியனை விட்டு அகலும்போது வால் பக்கமும் பிரயாணம் செய்யும். அதிக தூரம் சென்ற பிறகு வால் ஒடுங்கி அடங்கி விடும்.

குறிப்பு : இந்தப் பகுதியில் வந்துள்ளவற்றைப் போன்ற கேள்விகளை வரவேற் கிறோம்.

ஒரு கேள்வி

ராபின்ஸன் க்ருஸோவைப் போல நீங்களும் மனிதப் பூண்டே அற்றுப் போன ஒரு தீவில் பல ஆண்டுகள் வாழநேர்ந்து, உங்கள் கையில் பத்துப் புத்தகங்களை எடுத்துப்போக முடியும் என்றால், நீங்கள் எந்த நூல்களை எடுத்துச் செல்வீர்கள்?

— காண்டேகர்

தந்தி: GROUNDNUT　　　　டெலிபோன்

ஸ்ரீ வெங்கடேசா
ஜின்னிங் அண்டு ஆயில் மில்ஸ்,

சித்தாபுதூர், பாப்பநாயக்கன்பாளையம்,
கோயமுத்தூர்.

கிளை ஆபீஸ்:—14-88, ஒப்பணக்கார வீதி, கோவை.

எங்களிடம்
மணமும் உத்திரவாதமுள்ள

முதல்தரமான தேங்காய் எண்ணை,
நிலக்கடலை எண்ணை, நல்லெண்ணை, ஆமணக்
கெண்ணை வகைகளும், பருத்தி விதை பிண்ணாக்கு முதலியவைகளும்
மேற்படி வகைகள் யாவும் மொத்தமாகவும்
சில்லரையாகவும் கிடைக்கும்.

புரோப்ரைட்டர். K. குப்புசாமி நாயுடு.

Available for immediate delivery

100 H. P. Crompton Parkinson Motor slipring 710 R. P. M. three phase 400/440 V 50 cycles with oil immersed starter, slide rails & pulley.

Also we can supply

Crompton Parkinson 1 H. P, 2 H. P, 3 H. P, 5 H. P. & 6 H. P, Totaly enclosed motors 930 R. P. M. & 1430 R. P. M. D. C. C. wires, of all sizes B. 60 & B. 68 'V' Belts and all kinds of wiring accessories.

Apply to:

RADHAKRISHNA & COMPANY,
5-127 AVANASI ROAD, COIMBATORE

குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்.

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

மூலதனம் மானேஜ்மெண்டு தொழிலாளர்

ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்

சுதேசி நூலையே வாங்குங்கள்.

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே

நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்

இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அநுபவம் நிறைந்தவர்களால்

நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரார்கள் நல்ல

டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்.

Managing Agents:—

N. APPUSWAMY NAIDU & CO.,

Managing Director:—

G. V. MUTHUSWAMY, B. Sc.,

சௌந்தரராஜா மில்ஸ்

லிமிடெட்,

திண்டுக்கல்

★

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரிடரீஸ்

லட்சுமணா & கோ.,

★

20-நெ. முதல் 40-நெ. வரை

ஒத்தை முறுக்கு நூல்கள் தயாரிக்கிறோம்.

இந்திய மூலதனம்

இந்திய உழைப்பு

இந்திய நிர்வாகம்

★

G. T. நாராயணசாமி நாயுடு,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் செக்ரிடரீஸ் & பார்ட்னர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
211705
சென்னை-600 008

PHONE 130 GRAMS: ENERGY

A. PERA NAIDU & SONS,

MILLSTORE FURNISHERS AND MACHINERY MERCHANTS.

5/329, AVANASHI ROAD,

COIMBATORE.

DEALERS IN TEXTILE WOODEN
BOBBINS, ENGLISH LEATHER BELTINGS
V ROPES OF ALL MAKES, ENGLISH & OTHER
ROLLER SKINS, MACHINERY CLOTH &
MACHINERY SPARE PARTS.

Telegrams: CHARITY.
Telephone: 58.

பி. எஸ். ஜி.

அறநிலைய அச்சகம்,

பூளைமேடு, கோவை.

அச்சிடுதல், ரூல் போடுதல்,
பைண்டிங், வரவு செலவு
கணக்கு எடுகள்
தயாரித்தல்
முதலியன செய்யப்படும்.

மிகவும்
நேர்த்தியான பலநிற
அச்சு வேலைப்பாடுகள்!

P. சுப்பு செட்டி,

294 ராஜ வீதி, கோயமுத்தூர்.

பேப்பர், போர்டு, இங்க்ஸ்
வியாபாரம்

புனலூர் பேப்பர் மில்லுக்கு
வேஸ்டு பேப்பர் & ரேக்
சப்ளை செய்பவர்.

புனலூர் பேப்பர் மில்லின்
டிஸ்டிரிபியூட்டர்.

Telegrams: PIONEER. Telephone: 160

THE COIMBATORE PIONEER MILLS Ltd.

PEELAMEDU, COIMBATORE.



The Mills are situated at Peelamedu, Coimbatore and are equipped with 19,280 spindles. The mills specialise in the spinning of yarns from counts 40s to 80s, carded and 100s combed.

Registered Office:
Peelamedu, Coimbatore.

Managing Director:
G. R. Govindarajan.

Regd. No. M. 9300

மிகுந்த திருப்தி தரக்கூடிய

அழகிய வேலைத்திறன் மிக்க

பொன் வைர நகைகளுக்கு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JAN 1949
MADRAS

P. A. ராஜு செட்டியார் & பிரதர்,

ஷாப்பு வியாபாரம்,

சொர்ண மாளிகை, :: கோயமுத்தூர்.

தந்தி: 'ராஜா' போன்: 268 தபால் பெட்டி நெ. 139

Printed at the P. S. G. Press, Peelamedu, Coimbatore.